₹10

fmpb

# அறைகூவல்

Volume 52
Issue 2
February
2022




## எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்.

(1 தீமோத்தேயு 2:4)

இந்திய வரைபடத்தில் **FMPB** பணித்தளங்கள் மற்றும் மையங்கள் புள்ளிகளாக (•) சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

# ஆரம்ப வரிகள்...

## திட்டமிடலில் தீர்க்கமும் தீவிரமும்!



நமது தேவன் ஒழுங்கையும், முன் கணிப்பையும், திட்டமிடலையும் ஒருங்கே பெற்றவர்; அதையே அவர் தமது பிள்ளைகளிடமும் எதிர்பார்க்கிறார். பிதாவாகிய தேவன் திட்டமிடுகிறார்; கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அதைச் செயல்படுத்துகிறார்; கர்த்தராகிய பரிசுத்த ஆவியானவர் அதை நமக்கு வெளிப்படுத்துகிறார். எல்லாத் திட்டமிடலிலும் நமது பங்கும், தேவனின் பங்கும் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரோடு இணைந்து திட்டமிட்டு, அதைச் செயல்படுத்துவது நமது கடமையாகும். தேவன் நமது வாழ்விலும் ஊழியத்திலும் தம்முடைய திட்டத்தைச் செயல்படுத்தும்போது, அது இலக்கை அடையும் வரை அதில் வெளிப்படும் நிகழ்வுகளைத் தொடர்ந்து வடிவமைத்து சீர்ப்படுத்துகிறார்.

தேவனின் திட்டங்கள் வேதாகமத்தில் பலவிதங்களில் விவரிக்கப்பட்டுள்ளன. தேவன் நமது தேசத்தைக் குறித்தும், மக்களினங்களைக் குறித்தும், தனிப்பட்ட நபர்களைக் குறித்தும் தெளிவான திட்டங்களைக் கொண்டுள்ளார். தேவப்பிள்ளைகளுக்கான திட்டம், தேவனுடைய இரட்சிப்பின் நற்செய்தியை வாழ்வில் ஒருமுறையேனும் கேட்டிராத மக்களை அது சென்றடைவதை உள்ளடக்கியது (மத்.28:29; 2கொரி.5:20). இரட்சிப்பிற்கு அடுத்தபடியாக, தேவநாம மகிமைக்காக தேவன் நமக்குக் கொடுத்த வரங்கள், தாலந்துகள் மற்றும் திறமைகளை நித்தியராஜ்ய கட்டுமானப்பணிக்கென சிறப்பாக நாம் பயன்படுத்தும்போது, தேவனுடைய திட்டம் நமக்கு வெளிப்படுகிறது.

அப்போஸ்தலனாகிய பவுலின் திட்டங்கள் நமது திட்டங்களுக்கு முன்மாதிரியாக இருக்கின்றன. பவுலின் ஆவிக்குரிய பிள்ளைகள் பவுலினாலும், அவருடைய ஊழியத்தினாலும், உலகைக்குறித்த அவருடைய சுவிசேஷ தரிசனத்தாலும் மிகவும் ஈர்க்கப்பட்டு, அத்திட்டத்திற்கு ஒத்தாசையாகவும் காணப்பட்டனர் (அப்.9:15-19; ரோ.1:1-15). தேவனின் திட்டம் அனைத்து தேசங்களின் இரட்சிப்பை உள்ளடக்கியதாக இருந்ததால், பவுல் சுவிசேஷம் அறிவிக்கப்படாத இடங்களில் செய்யப்படும் ஊழியத்தைத் தனது இலக்காகக் கொண்டிருந்தார் (ரோ.15:18-21). அவர் தனது வாழ்க்கைக்கான தேவனின் திட்டத்தைப் பற்றிய மாற்றங்களை ஏற்றுக்கொள்வதற்கான முடிவுகளை எடுத்து, தேவனின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டார் (பிலி.1:19-26; 2:19-24). பவுலின் திட்டங்கள் பெரும்பாலும் தேவனுடைய குறுக்கீட்டால் அடிக்கடி மாற்றப்பட்டன. பவுலும் அவருடைய சக ஊழியர்களும் தேவனுடைய வழிநடத்துதலுக்கு ஜாக்கிரதையாக இருந்தனர் (அப்.13:1-4; 16:4-10; ரோ.15:22). சில சமயங்களில் பவுலின் திட்டத்திற்கு எதிராக மனித மற்றும் சாத்தானின் குறுக்கீடும் வந்து மாற்றத்தை உருவாக்கினாலும், பவுலுக்கு தேவன் தந்த திட்டமனைத்தும் தேவனுடைய பாதுகாப்பில் உறுதியாக இருந்ததை நாம் பார்க்கிறோம் (1தெச.2:14-18).

நமது திட்டங்களும் தேவனுடைய படைப்புகளுக்கான ஒட்டுமொத்த திட்டத்தால் நிர்வகிக்கப்பட்டு வழிநடத்தப்பட வேண்டும். குறிப்பாக, இந்த கொரோனா தொற்று நோய்க்காலங்களில் நாம் நினைத்துப் பார்க்காத மற்றும் நாம் ஒருபோதும் திட்டமிடாத வழிகளில் தேவன் தமது சித்தத்தை நிறைவேற்ற முடியும் என்பதை நாம் அறிந்து நமது திட்டங்களில் தீர்க்கத்தோடும், தீவிரத்தோடும், அதேசமயம் நாம் மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தோடும் காணப்பட வேண்டும். நமது திட்டங்கள் அனைத்தும் தேவனின் திட்டத்திற்குக் கீழ்ப்பட்டதாக இருக்க வேண்டும். மேலும் நமது திட்டங்களை தேவன் மறுசீரமைப்பதாகக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு சாதகமற்ற சூழ்நிலையின் காரணமாக நமது திட்டமிடலும், அவைகளைச் செயல்படுத்துதலும் மிகவும் சவாலானதாகக் காணப்படலாம். ஆதலால் திட்டமிடலை மிகவும் கவனத்துடன் செயல்படுத்த வேண்டும். “ஜாக்கிரதையுள்ளவனுடைய நினைவுகள் செல்வத்துக்கும், பதறுகிறவனுடைய நினைவுகள் தரித்திரத்துக்கும் ஏதுவாகும்” (நீதி.21:5). தேவனுடைய திட்டம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, எச்சூழ்நிலைகளையும் மேற்கொண்டு பூமியிலேயும் செய்யப்பட வேண்டுமென்பதில் நாம் உறுதி கொள்ள வேண்டும். அப்பொழுது, இக்காலக்கட்டத்தின் பல சவால்களுக்கு மத்தியிலும் நாம் தேவனுடைய திட்டத்தை நமது அன்றாட ஊழியத்தில் நடைமுறைப்படுத்த முடியுமன்றோ!

- **J.J. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

**கர்த்தருடைய ஆலோசனை நித்தியகாலமாகவும், அவருடைய இருதயத்தின் நினைவுகள் தலைமுறை தலைமுறையாகவும் நிற்கும். (சங்கீதம் 33:11)**

**“நல்ல செயலாக்கம் இல்லாமல் நன்குத் திட்டமிடுவதால் ஒரு பயனுமில்லை.” - மார்கரெட் ஃபைன்பெர்க்**

**“தேவனின் திட்டத்தில் நாம் நேரடியாக இலக்கை அடைவது என்பது அரிது. அவருடைய திட்டம் நம்மைப் பயணிக்கச் செய்யும்; அப்பயணத்தில் மாற்றுப்பாதைகள், திடீர் நிறுத்தங்கள் மற்றும் குழப்பமான திருப்பங்கள் நிறைந்திருக்கலாம். ஆனால், அப்பயணச் சூழ்நிலைகள் எல்லாவற்றிலும் நாம் அவருக்கு இதயப் பூர்வமாகக் கீழ்ப்படிந்து செயல்படுவோமாயின், அப்பயணத்தின் ஒவ்வொரு அடியிலும் நாம் அவருடைய சித்தத்தின் மையத்தில் இருப்போம்.” - ஜான் பனியன்**

**உங்களில் நற்கிரியையைத் தொடங்கினவர் அதை இயேசுகிறிஸ்துவின் நாள்பரியந்தம் முடிய நடத்திவருவாரென்று நம்பி, நான் உங்களை நினைக்கிறபொழுதெல்லாம் என் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். (பிலிப்பியர் 1:5-6)**

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

**நமது தரிசனம்:**

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

**நமது ஊழியம்:**

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும், இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தன் சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச் சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள். நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம் :
**feedbackfmpb@fmpb.org**


# அறைகூவல்


**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின்**
**மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பூ**

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

| | |
|---|---|
| தனிப் பிரதி ரூ.10/- | வெளிநாடு |
| ஆண்டு சந்தா ரூ.48/- | ஆண்டு சந்தா ரூ.480/- |
| ஆயுள் சந்தா ரூ.500/- | ஆயுள் சந்தா ரூ.5000/- |

*தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு*
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**
29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர்,
சென்னை 53. தொலைபேசி 044-26570404
பேக்ஸ் 044-26573353 கைபேசி 9444394342
மின்னஞ்சல்: *info@fmpb.org*
வலைதளம்: *www.fmpb.co.in*

# பொதுச்செயலாளரிடமிருந்து...



உன்னத திட்டத்தின் நோக்கத்தில் அன்பு உடன்பங்குதாரர்களே,

இந்த ஆண்டிற்கான நமது நோக்க வார்த்தையான "உன்னத திட்டத்தை நோக்கி..." என்பது, நமது வாழ்விலும் பிறருடைய வாழ்விலும் ஒரு நீண்டக்கால தாக்கத்தை ஏற்படுத்தாத மனிதனால் உருவாக்கப்பட்ட திட்டங்களை நோக்கி நாம் பயணிப்பதைவிட, தேவனின் உயர்ந்த திட்டங்களை நோக்கி நாம் பயணிக்க வேண்டும் என்பதை நமக்கு நினைவூட்டுகிறது. கொலோசெயர் 3-ம் அதிகாரம் 1 முதல் 3 வரையிலான வசனங்கள் – "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" எனக் கூறுகிறது.

இந்த வசனங்கள், தேவப்பிள்ளைகளாகிய நம்முடைய இதயங்கள் மேலானவைகளில் நாட்டம் கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்துவதோடு, கிறிஸ்து பிதாவின் வலதுபாரிசத்தில் அமர்ந்தி ருக்கிற அந்த மேலான இடத்தை மேலும் அதற்கு மாதிரியாகச் சுட்டிக்காட்டுவதையும் காணலாம். அது பூமியிலுள்ள காரியங்களிலல்ல; தேவன் மற்றும் அவருடைய ஊழியத்தொடர்பான காரியங்களில் நாம் நமது மனதை வைக்க வேண்டும் என்று மிகத் தெளிவாகக் கூறுகிறது. இவ்வுலகச் சம்பந்தப்பட்ட விஷயங்களின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கும் இன்றைய கிறிஸ்தவர்களின் வாழ்க்கையில், நாம் மேலானவைகளை நாடவேண்டுமென்பது மிக அவசியமான ஆவிக்குரிய சிந்தனை. ஏனெனில், நம்மில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், 'தேவன் இந்தப் பூமிக்குரிய வாழ்க்கைக்குத்தான் தேவை' என எண்ணி, அவர்கள் நித்தியம் மற்றும் அது தொடர்பான விஷயங்களைத் தங்களது சிந்தையிலும் நினைத்துப் பார்ப்பதில்லை. அவர்கள் தேவனின் உன்னத திட்டங்களைப் பின்பற்றுவதை விட இப்பூமிக்குரிய விஷயங்களைத்தான் அதிகம் பின்பற்றுகிறார்கள். ஆனால், நாம் மேலானவைகளை நாடுவதற்கு வேதாகமம் இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகிறது. அதாவது வ.1-ல் "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால்" என்றும், வ.3-ல் "ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது" என்றும் கூறுகிறது. ஆம், நாம் இப்புவி வாழ்விற்குச் சொந்தமானவர்களல்ல. எனவே, நாம் நமது இதயங்களை மேலான காரியங்களில் வைத்து தேவனின் உன்னத திட்டத்தைப் பின்பற்றுவதே, நாம் இந்த உலகத்திற்கு மரித்து, கிறிஸ்துவுடன்கூட எழுந்துள்ளோமா என்பதைச் சரியாகக் கண்டறியும் அளவுகோலாகும்.

## கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகள்:

நமது பணித்தளங்களில் சில ஆயிரம் விசுவாசிகள் இந்த ஆண்டு தங்கள் முதல் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஆசரித்தார்கள். பல அச்சுறுத்தல்கள் மற்றும் எதிர்ப்புகள் இருந்த போதிலும், பரலோகத்தின் தேவன், நமது மிஷனெரிகளும் விசுவாசிகளும் ஆவியோடும் உண்மையோடும் கிறிஸ்துவின் முதல் வருகையைக் கொண்டாட உதவி செய்தார். கிறிஸ்துமஸ் நிகழ்ச்சிகளை வெளிஅரங்குகளில் நடத்த சில இடங்களில் அனுமதி கடைசி நேரத்தில் மறுக்கப்பட்டது. ஆனால், தேவனின் கிருபை நமக்குப் போதுமானதாக இருந்தமையால், அனைத்து விசுவாசிகளும் கிறிஸ்துமஸ் பண்டிகையை நேர்த்தியாகக் கொண்டாடினார்கள்.

கிறிஸ்துமஸ் வாரத்தில் கன்னியாகுமரி மாவட்டத் திலுள்ள சில திருச்சபைகளில் செய்தியளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. திருச்சபைகளில் அந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்த அனைத்து குருவானவர்கள் மற்றும் விரிவுப்பணி செயலாளர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குஜராத் மாநிலத்தி லுள்ள நமது பணித்தளங்களில் பணியாற்றி ஓய்வுப்பெற்ற சகோதரி. மேரி ஸ்டெல்லா அவர்களின் சுயசரிதை 2021 டிசம்பர் 26-ம் தேதி யன்று நாகர்கோவிலில் வைத்து வெளியிடப்பட்டது.

குஜராத் டாங்ஸ் மாவட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தலைமுறை விசுவாசிகள் மற்றும் பிற மக்கள் மத்தியில் ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்திய சகோதரி. மேரி ஸ்டெல்லா அவர்களின் வாழ்க்கை மற்றும் ஊழியத்திற்காக தேவனை நான் அதிகம் துதிக்கிறேன்.

## திரு. ஹேமசந்திரன் அவர்களின் மறைவு:

2022 ஜனவரி 5-ம் தேதி அன்று 'சிரிப்பு அதன் சிரிப்பை நிறுத்தியது' எனலாம். நமது இயக்கத்தின் ஓய்வுப்பெற்ற மிஷனெரியான சகோ. ஹேமசந்திரன் அவர்கள், நமது ஊழியத்தில் அநேக துறைகளில் முதன்மையான முத்திரைகளைப் பதித்தவர்கள். இவர் திருச்சியிலுள்ள பெல் (BHEL) கம்பெனியின் சார்பாக முதன்முதலாக நமது மிஷனெரியைத் தாங்கிய முதல் ஜெபக்குழுத்தலைவர் ஆவார். ஆந்திரா மற்றும் வடகிழக்கு இந்தியாவில் இவர்தான் முதன்முதலாக நமது இயக்கத்தின் விரிவுப்பணியைத் தொடங்கினார். இவர் நமது இயக்கத்திலிருந்து ஓய்வுப்பெற்று 20 ஆண்டு களுக்கு மேலாகியும், இன்னும் பல மிஷனெரிகளின் நினைவலையில் மங்காத இடத்தைப் பெற்றுள்ளார். இவரது வாழ்க்கை மற்றும் புன்முறுவல் என்றும் நினைவுகூரப்பட வேண்டியதோடு, அவரது ஊழிய மரபும் காலங்காலமாக நாம் பின்பற்றத்தக்கதாகும்.

## பிற ஊழிய அமைப்புகளுடன் சந்திப்பு:

அகில உலக நண்பர்கள் மருத்துவப்பணி (Friends Medical Mission International), வேதாகம ஐக்கியச் சங்கம் (Scripture Union), அருட்பணியாளர் ஆதரிப்போர் அறக்கட்டளை (MUT) மற்றும் பெத்தேல் வேதாகமப்பயிற்சி நிலையம் (BBI) ஆகியவற்றின் முக்கியஸ்தர்களை நான் சந்தித்தேன். அச்சந்திப்புகள் தேவனுடைய ராஜ்ய விரிவாக்கத்திற்கு மிகவும் ஆசீர்வாதமாக அமைந்தது.

## புதிய மிஷனெரிகளைத் தேர்ந்தெடுத்தல்:

நமது இயக்கத்தின் நேர்காணல் குழு 2022 ஜனவரி 8-ம் தேதி கூடி, முழுநேர ஊழியம் செய்ய தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்த 6 சகோதர சகோதரிகளைத் தேர்ந்தெடுக்க தேவன் உதவி செய்தார். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 6 மிஷனெரிகளும் ஒரு சில நாட்களில் பணித்தள ஊழியத்திற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். பணித்தளங்களில் அவர்கள் பெறவிருக்கும் பயிற்சிக்காலங்களுக்காகத் தாங்கள் தயைகூர்ந்து ஏறெடுக்கும் ஜெபம், அவர்கள் சிறப்பாக நமது ஊழியத்தைப் பற்றி கற்றுணர்ந்துக் கொள்வதற்கு ஏதுகரமாக நிச்சயம் அமையும்.

## கொரோனா மூன்றாவது அலை:

கொரோனாவின் மூன்றாவது அலை இப்பொழுது நம்மிடையே காணப்படுகிறது. இது இரண்டாவது அலையைப் போல வீரியமானதாக இல்லா விட்டாலும், மிகவும் விரைவாகப் பரவி, அநேகரைப் பாதிப்பிற்குள்ளாக்கி வருகிறது. நமது மிஷனெரிகளில் பலர் மற்றும் அவர்களது குடும்பங்கள் இந்த கொரோனாவின் மூன்றாவது அலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆனால், கிட்டத்தட்ட அனைவரும் பெரிய பாதிப்புகளேது மின்றி குணமடைந்துள்ளனர். தயவுசெய்து கொரோனாவுக்கு எதிரான உங்கள் பாதுகாப்பைக் குறைக்காதீர்கள். மேலும், ஜெபத்தோடு பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி கொரோனாவுக்கு எதிரான உங்கள் போராட்டத்தை வலுப்படுத்த பட்சமுடன் கேட்டுக்கொள்கிறேன்.

## தேசிய திட்டக்கூடுகை 2022:

கர்த்தருக்குச் சித்தமானால், இம்மாதம், 2022 பிப்ரவரி 12 மற்றும் 13-ம் தேதிகளில் தேசிய திட்டக் கூடுகை நடைபெறவிருக்கிறது. இக்கூடுகையை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் நாங்கள் செய்து வருகிறோம்; ஆயினும், இக்கூடுகையை எவ்வாறு நடத்துவது என அந்த நாட்களில் குறிப்பாக நமது அரசாங்கம் தீர்ம ானிக்கும் வழிகாட்டுதலின் அடிப்படையில் இறுதி முடிவு எடுக்கப்படும். அதைத் தொடர்ந்து செயற்குழு மற்றும் ஊழிய ஆலோசனைக்குழு கூட்டங்கள் நடைபெறும். மேற்கண்ட கூடுகைகளுக்காகத் தயவுசெய்து ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இவ்வாண்டில் தொடர்ந்து நாம் தேவனின் மாபெரும் அன்பை மிகவும் நெருக்கமாக அனுபவிக்கவும், நமது முழுபெலத்துடன் அவருக்கு ஊழியம் செய்யவும் ஜெபித்துச் செயல்படுவோம்.

தேவஊழியத்தில் தங்கள் சகஊழியன்,



**அருள்திரு. S. ஜாண் பெர்லின்**

# தேவ ராஜ்யக் கண்ணோட்டத்தோடு திட்டமிடல்

திட்டமிடத் தவறுவது, தவறுவதற்குத் திட்டமிடுவது போலாகும். தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்கும், மிஷனெரி இயக்கத்தின் வளர்ச்சிக்கும் திட்டமிடல் மிக மிக அவசியமாகும். திட்டமிடல் என்பது தரிசனம் காண்பதாகும். திட்டமிடல் தேவனுடைய சித்தத்தையும், அதை நிறைவேற்றுதலுக்கான தெளிவையும் அடைவதற்கான வழிமுறையாகும். தேவ ஊழியத்தில் 'திட்டமிடல்' என்பது வேதத்தின் அடிப்படையைச் சார்ந்தது மட்டுமல்ல, வேதத்தின் கட்டளையுங்கூட. இது தேவனுடைய 'பிரதான கட்டளையை' (மத்.28:18-20) நாம் இயக்கமாக நிறைவேற்றுவதற்கு தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு சிறந்த முறையாகும்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு எப்பொழுதும் இலக்கோடு செயல்படும் ஓர் இயக்கம். ஆரம்பக்காலத்திலிருந்தே இவ்வியக்கம் திட்டமிடலுக்கு முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கிறதைக் காண்கிறோம். இவ்வியக்கத்தை உருவாக்கியவர்களெல்லாம் தரிசன புருஷர்கள், சிற்பிகள் மற்றும் தீர்க்கதரிசிகள் என்றால் மிகையாகாது. 1970-ம் ஆண்டு காலக்கட்டங்களிலேயே, இவ்வியக்கம் 11 மாநிலங்களிலுள்ள 220 மாவட்டங்களில் 440 நற்செய்தியாளர்களைக் கொண்டு, 10 ஆண்டுகளுக்குள் ஊழிய விரிவாக்கம் செய்வோம் என 400% வளர்ச்சிக்குத் திட்டக்கனவு கண்டு, வெற்றியும் கண்டது. நமது ஆண்டவர், தாமே திட்டங்களையும் தந்து, அவரே அதைச் செயலாற்றியும் மகிழ்பவராவார். எனவே முதலாவது, இது தேவ சித்தத்திற்குகந்த திட்டம்தான் என்பதைத் தீர்க்கமாக விசுவாசித்தல் அவசியமாகும். "...ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங்.2:8) என வாக்குரைத்த நமது ஆண்டவர் விசுவாச இயக்கத்தினராகிய நமக்கு இவ்வாக்கை உறுதிப்படுத்தியுள்ளார். இத்திட்டச் சவாலில் காரணகர்த்தாவாக தேவனையும், அவரது வாக்கையும் நாம் சார்ந்திருப்பது நமக்கு மிகவும் உந்துதலாக அமையும்.

நமது ஆண்டவர் ஒரு நிறைவான தொலைநோக்குத் திட்டக் காரணகர்த்தர் ஆவார். திட்டமிடுவதற்கான கோட்பாடுகளை, தேவன் நீதிமொழிகளிலும், மோசே, யோசுவா, நெகேமியா, தாவீது, பவுல் போன்ற வேதாகம வீரர்கள் மூலமாகவும் பலவிதங்களில் தெளிவுப்படுத்தியுள்ளார். நீதிமொழிகள் 29:18-ல் கூறப்பட்டுள்ள வசனமான "தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் மக்கள் சீர்கெட்டுப்போவார்கள்" என்பது திட்டமிடலுக்கு வேதத்தின் அடிப்படையாகிறது. தேவனில்லாமல் திட்டமிடல் வீண் ஆகும். தேவனுடைய சித்தத்திற்கு உகந்து, அவருடைய நாம மகிமைக்காகத் திட்டமிடுவது தேவனை மகிழ்விக்கும். இப்படித் திட்டமிடுவது நமது ஊழிய இலக்குகளைக் கூர்மையாக்கி, மனித யுக்திகளைத் தவிர்த்து,

சுவிசேஷத்தின் அடிப்படையில் செயல்பட மிஷனெரி ஊழியங்களுக்கு மிகவும் உதவியாக அமையும் (நீதி.16:19).

## வேதத்தின் அடிப்படையில் திட்டமிடல்:

ஆதியாகமம் 3:15-ல் கூறப்பட்டுள்ளபடி தேவன் மனுக்குலத்தை மீட்பதற்கான திட்டத்தை ஆதியிலேயே தெளிவாகக் கொண்டிருந்தார். ஆதாமும் ஏவாளும் பாவத்தில் வீழ்ந்தபோது, தேவன் அவர்களை மீட்பதற்கான தமது திட்டத்தை அப்பொழுதே சர்ப்பத்திடம், “உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்” என மிகத் தெளிவாக உரைக்கிறார். ‘சாத்தான் இயேசுவின் குதிங்காலை நசுக்குவான்’ என்பது கிறிஸ்து பின்னர் சிலுவையில் படவிருக்கிற பாடுகளைக் குறிக்கிறது. ஆனால், அதுதான் முடிவு அல்ல; கிறிஸ்துவும் சாத்தானின் தலையை நசுக்குவார். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரித்தது, ஒருவேளை சாத்தான் வெற்றியடைந்தது போல தோன்றும். ஆனால், இந்த ஆவிக்குரிய போராட்டத்தில் இறுதியில் சாத்தான்தான் படுதோல்வி அடைகிறான். தேவனுடைய திட்டம் அநாதியானது, நித்தியமானது, எல்லாக் காரியங்களையும் தமது ஆளுகைக்குட்படுத்தியது. குறுகியக்கால கண்ணோட்டத்தில் பார்த்தால், அவை ஒருவேளை ஆரம்பத்தில் தோல்வி போல, கட்டுப்பாடற்று காணப்படுவதுபோல தோன்றினாலும், தேவன் ஒரு மகிமையான நிறைவை உருவாக்குவதற்காக ‘தோல்வி’ போன்ற மாயையை முதலில் அனுமதித்து, அதை ஒழுங்குப்படுத்துகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் திட்டமிடலுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக எடுத்துக்கொள்ளலாம். அவர் தமது திட்டத்தை – சீடர்களைத் தெரிந்தெடுப்பதின் மூலமும், அவர்களைப் பயிற்றுவிப்பதின் மூலமும், அவர்களை ஊழியத்திற்குப் பூமியின் கடைசி பரியந்தமும் (அப்.1:8) அனுப்புவதின் மூலமும் நிறைவேற்றுவதைப் பார்க்கிறோம். அவரது திட்டத்தில் பொது இடங்களில் பிரசங்கம் பண்ணுதலும், அற்புத அடையாளங்கள் செய்தலும் இடம் பெற்றன. அவரது திட்டம் அவரைச் சிலுவைக்கும், கல்லறைக்கும், உயிர்த்தெழுதலுக்கும் எடுத்துச் சென்றன. இயேசுகிறிஸ்து, தாம் விண்ணுலகைவிட்டு வருவதற்கு வெகுமுன்னரே, மனுக்குலத்திற்கு மீட்பை அளிப்பதற்கான திட்டத்தை நன்கு அறிந்திருந்தார்.

## இனி திட்டமிடலைக் குறித்த ஆதாரங்களையும், திட்டங்களை உருவாக்கிச் செயலாக்கம் புரிந்த அநேக தேவ மனிதர்களைப் பற்றியும் வேதம் முழுவதும் சொல்லப் பட்டுள்ளதைக் காணலாம் –

**மோசே:** இவரை யோசித்துத் திட்டமிடுபவராக வேதம் சொல்லுகிறது. மோசே, இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து கானானுக்கு வழிநடத்தும்போது, அவர்ப்பட்ட தலைமைத்துவ சிரமங்களை அவரது மாமனாகிய எத்திரோ கண்டு, தேவன் அருளிய பொறுப்புகளைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தை அவருக்கு அறிவுறுத்துகிறார். அதன் விளைவாக, பொறுப்புகள் அநேகருக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டு, தேவப்பணி மிகச் சிறப்பாக ஒன்றிணைந்து செயலாற்றப்பட்டது. மோசே கானான் தேசத்தை வேவு பார்ப்பதற்காக ஒற்றர்களை அனுப்பியது, அவரது திட்டமிடலுக்கான சாதுரியத்தைக் காட்டுகிறது.

**யோசுவா:** மோசேயின் வழித்தோன்றலாகிய யோசுவாவும் திட்டமிட்டுச் செயல்படுவதைப் பலவிதங்களில் பார்க்கிறோம். யோசுவா

6-ம் அதிகாரத்தில் தேவன் அவருக்குத் திட்டமிடலைக் குறித்து கற்றுக்கொடுப்பதைக் காண்கிறோம். யோசுவா இஸ்ரவேல் மக்களைக் கானான் தேசத்துக்கு வழி நடத்தும்போது, அவர்கள் முதன்முதலாக எரிகோ கோட்டையை வீழ்த்துகிற சவாலைச் சந்திக்கிறார்கள். கர்த்தர் யோசுவாவுக்கு ஒரு நல்ல திட்டத்தைக் கொடுக்கிறார். தேவன் வானத்திலிருந்து வார்த்தையாலேயே அந்தப் பட்டணத்தைச் சடுதியிலே முறியடித்திருக்கலாம். ஆனால், தேவன் தமது ஜனங்கள் மூலமாக அதைச் செய்து முடிக்கும் திட்டத்தை மேற்கொள்கிறார்.

**நெகேமியா:** தேவனால் நியமிக்கப்பட்ட நெகேமியா திட்டமிட்டுச் செயல்படுபவராவார். எருசலேம் அலங்கத்தைத் திரும்பக்கட்டுகிற திட்டத்தை தேவன் நெகேமியாவின் இதயத்தில் வைத்தபோது, நெகேமியா அதை ஏற்றுக்கொண்டவராகவும், மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு அதை நிறைவேற்றி முடிப்பவராகவும் காணப்பட்டார். எருசலேம் மதிலின் கட்டுமானத் தேவைகளை நன்குக் கணக்கிடுபவராக, அதற்கான பொருட்தேவைகளைச் சேர்ப்பவராக, அதைக் கட்டுவதற்கு மனித சக்தியைத் திட்டமிட்டு ஒருங்கிணைப்பவராகக் காணப்பட்டார். இது நெகேமியாவின் கூரிய திட்டமிடும் செயல்பாட்டுத் தன்மையைக் காட்டுகிறது.

**தாவீது:** இவர் தனது சிறுவயதிலிருந்தே திட்டமிட்டுச் செயல்படுவதில் வல்லவர். இவர் தனது ஆயுதத்தாலும், பெலத்தாலும் கோலியாத்தை வெல்லவில்லை. தேவனால் கொடுக்கப்பட்ட சாதுரியத்தால், கோலியாத்தின் பெலவீனமான பகுதியைக் கண்டறிந்து தாக்கி, அவனை வெற்றி கொள்கிறார். பின்னர் ஒரு போர்வீரனாகப் போரில் போரிடும்போதும், மிகவும் திட்டமிட்டு வெற்றி காண்கிறார். தாவீதிற்கு சிந்தித்து, திட்டமிட்டுச் செயல்படுகிற மனிதர்கள் தேவைப்பட்டபோது, தேவன் இசக்காரின் மனிதர்களை ஈவாகக் கொடுக்கிறார் (1 நாளா.12:32).

**பவுல்:** ஆதித் திருச்சபைகளை நிறுவிய அப்போஸ்தலனாகிய பவுலும் திட்டமிட்டுச் செயல்படுபவராவார். பவுலின் மிஷனெரிப் பிரயாணங்களைப் பார்க்கும்போது, அவர் எவ்வளவு அழகாகத் திட்டமிட்டுப் பட்டணங்களில் சுவிசேஷம் அறிவித்து, அங்கு நல்ல திருச்சபைத் தலைவர்களை உருவாக்கியிருக்கிறார் என்பதை அறியலாம். பட்டணங்களில் சுவிசேஷம் அறிவிப்பதின் மூலம், அவர் ஏராளமான மக்களைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தும் யுக்தியுடன் சிறப்பாகச் செயல்பட்டதைப் பார்க்கிறோம்.

## மேலும், நீதிமொழிகளின் புத்தகத்தில் 'திட்டமிடல்' குறித்த அநேக வசனங்களைக் காணலாம் –

நீதி.15:22 – ஆலோசனையில்லாமல் எண்ணங்கள் சித்தியாமற்போம்; ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால், அவைகள் உறுதிப்படும்.

நீதி.16:3 – உன் செய்கைகளைக் கர்த்தருக்கு ஒப்புவி; அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்.

நீதி.16:9 – மனுஷனுடைய இருதயம் அவனுடைய வழியைப் போதிக்கும்; அவனுடைய நடைகளை உறுதிப்படுத்துகிறவரோ கர்த்தர்.

நீதி.20:18 – ஆலோசனையினால் எண்ணங்கள் ஸ்திரப்படும்; நல்யோசனை செய்து யுத்தம் பண்ணு.

## நமது திட்ட இலக்குகளில் தூய ஆவியானவரின் பங்கு –

**1. திட்டமிடலின்போது, முதலாவதாக, தேவனுடைய இராஜ்யத்துக்குரிய காரியங்களை முன்னிலைப்படுத்த வேண்டும்:**

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்,

அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்'' (மத்.6:33). நாம் திட்டமிடும்போது இந்த வசனத்தின் சாராம்சம் என்ன என்பதை அறிய வேண்டும்.

✔ தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுதல் என்பது, அவருடைய ஆளுகைக்கு முழுவதுமாக இடமளிப்பதாகும். நாம் திட்டமிடும்போது, நாம் பேசிக்கொள்ளுகிற எல்லாக் காரியங்களிலும் தேவனுடைய ஆளுகைக்கு இடமளித்து, அவரது சித்தத்தை நமது திட்டமிடுதலின் மூலம் கண்டறிய வேண்டும்.

✔ தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுதல் என்பது, நமது சொந்த திட்டத்தை தேவனிடமே கையளிப்பதாகும். நாம் விரும்புகிற காரியம் நடக்க வேண்டும் என தேவனிடமும், மற்றவர்களிடமும் திறந்த மனதோடு தெரிவிக்கலாம். நாம் விரும்புகிற காரியம் நடந்தால் நல்லதுதான். ஆனால், அவைகளை தேவ சித்தமில்லாமல் நாம் நமது திட்டங்களில் திணித்தால் அது நன்மையானதாக முடிவு பெறாது.

✔ தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுதல் என்பது, தேவன் மீது நமக்குள்ள வாஞ்சை மற்றும் அவருக்கு மகிமை சேர்ப்பதின் அடிப்படையில் எழ வேண்டியதாகும். அது ஒருபோதும், நமக்கோ அல்லது நமது இயக்கத்திற்கோ மாத்திரம் மகிமையைத் தருவதாக அமையக் கூடாது. நாம் விசுவாச வாழ்வில் வளர வளர, தேவனுக்கு மென்மேலும் மகிமை சேர்க்க ஆவல் கொள்ள முடியும். அவருடைய ராஜ்யத்தை இப்பூவுலகில் நாம் தேடுவதின் மூலம், அவருடைய சித்தம் இங்குச் செய்யப்படுவது மட்டுமல்லாமல், அவரே இராஜாதி இராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக நமது திட்டங்களில் எழுந்தருளுவார். எனவே திட்டமிடலுக்காகக் கூடிவரும்போது, நமது திட்டங்களையும் நோக்கங்களையும் ஆண்டவரிடத்தில் ஒப்புவித்து, தேவ ராஜ்யத்தைத் தேட வேண்டும். இந்த அர்ப்பணிப்பு எல்லாவற்றையும்விட நாம் தேவனுடைய சித்தத்தை நமது திட்டத்தில் தெளிவாகக் கண்டுக்கொள்ள ஏதுகரமாகும்.

### 2. திட்டமிடலில், வேதத்தின் அடிப்படைக்குச் செவிசாய்க்க வேண்டும்:

தூய ஆவியானவரால் நாம் வழிநடத்தப்பட வேண்டுமாயின், நமது திட்டக்கூடுகைகளில் வேதத்தின் அடிப்படைச் சத்தியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். உதாரணமாக, வேதத்தில் மிக ஆழமான சத்தியமாக, தேவன் தமது படைப்புகளை மற்றும் மனுக்குலத்தை மீட்பது தேவனின் பிரதானமான செயலாகக் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் ஒரு மிஷனெரி இயக்கத்திற்கு இந்த மீட்பின் செய்திதான், திட்டமிடலின் பிரதானமானதாகக் கருதப்பட வேண்டும். எனவே திட்டமிடலில் ஈடுபடுபவர்கள், வேதத்தின் அடிப்படையில், தங்களது கலந்துரையாடல்களை நிர்ணயிக்க வேண்டும். திட்டமிடும்போது வேதத்தின் வெளிச்சம் அவர்களது இதயத்தையும், மனதையும் நிரப்ப வேண்டும். அப்போதுதான் திட்டக்கூடுகையின் முடிவில், வேதத்தின் நெறிகளும் முக்கியத்துவமும் தங்களது திட்டத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதை அவர்களால் தெளிவுப்படுத்த முடியும்.

### 3. திட்டமிடலில், கடந்த காலங்களில் தேவன் நடத்தி வந்த பாதைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும்:

திட்டமிடல் என்பது, பொதுவாக எதிர்காலம் சார்ந்த காரியமாகக் காணப்பட்டாலும், கடந்த காலத்தில் தேவனால் கூறப்பட்ட மற்றும் நடைமுறைப்படுத்தப்பட்ட காரியங்களுக்கு

இடம் கொடுக்கிற ஆவிக்குரிய நிலைப்பாடும் முக்கியமானதாகும். தேவன் நமது இயக்கத்தின் ஆரம்பக்கால தலைவர்களைக் கொண்டு பல திட்டங்களைத் தந்து நடத்திய விதத்தை நாம் உணர்ந்து, அவற்றை ஏற்றுக்கொண்டு, அவற்றிற்கு மதிப்பளிக்க வேண்டும்.

### 4. திட்டமிடலில், தேவன் அருளும் புதிய தரிசனத்திட்டத்தைப் புதிய கட்டுக்கோப்புக்குள் வைத்து அங்கீகரிக்க வேண்டும்:

பொதுவாக அநேகர், பழைய பாரம்பரிய காரியங்களைக் கடைப்பிடிப்பதையும், மற்றவர்கள் புதிய காரியங்களை நோக்கி ஓடுவதையும் பார்க்கிறோம். ஆனால் உண்மையாகச் சொல்லப்போனால், சில சமயங்களில், நமக்குப் பொருத்தமாக இருக்கும் சில பழைய பாரம்பரிய காரியங்களைக் கடைப்பிடிக்கலாம். அதுபோல சில சமயங்களில் தேவையான மாற்றங்களுடைய புதிய காரியங்களும் நமக்குப் பொருத்தமாக அமையும். பழைய காரியங்களுக்கு மதிப்பளிப்பதும், புதிய காரியங்களை ஏற்றுக்கொள்வதும் மிகவும் கடினமான காரியம்தான். கிறிஸ்தவ தலைவர்களும் இந்தப் போராட்டத்துக்கு விதி விலக்கு அல்ல. நமது தலைமைத்துவத்திற்கு இந்தப் போராட்டம் மிகவும் தேவையான ஒன்றுதான். மாற்றத்தை ஏற்றுக்கொள்வதும், அதே நேரத்தில் கிறிஸ்தவ இயக்கங்களுக்கு மாற்றத்தைத் தவிர்ப்பதும் அதிக சவாலானதாக அமைகிறது.

ஒவ்வொரு கிறிஸ்தவ பாரம்பரியமும் தூய ஆவியானவரின் வழிநடத்துதலின்படி, வெவ்வேறு நல்ல காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. ஆனால் மக்கள் இவைகளில் சிலவற்றைத் தவிர்த்தும், அதே நேரத்தில் மற்ற சில குறிப்பிட்டக் காரியங்களுக்கு மதிப்பளிப்பதையும் காண்கிறோம். அநேக சமயங்களில் திட்டமிடலின்போது, சிந்தனைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். அதே சமயத்தில் நாம் தனிப்பட்ட விதத்திலும், குழுவாகவும் காரியங்களை அலசி ஆராயும்போது, நமது இதயத்தினுடைய ஈடுபாட்டிற்கும் இடம் கொடுக்க வேண்டும்.

### 5. திட்டமிடலின்போது, தூய ஆவியானவருடைய உயர்ந்த ஆவிக்குரிய ஈவுகளுக்கும் இடமளிக்க வேண்டும்:

தூய ஆவியானவர் ஒவ்வொரு தனிப்பட்ட தேவ மனிதனிலும் வாழ்கிறார். மேலும் அவர்கள் குழுவாகக் கூடி வரும்போதும் அவர்கள் மத்தியில் இருக்கிறார் என வேதம் போதிக்கிறது. பரிசுத்த ஆவியானவருடைய ஈவுகளாகிய தெய்வீக ஞானம், அறிவு, தீர்க்கதரிசனம், போதனை ஆகியன பொதுவாக ஆராதனைக்கும், ஊழியங்களுக்கும் தொடர்புடையதாகக் காணப்பட்டாலும், அவைகளோடு மாத்திரம் அந்த ஈவுகளை நிறுத்திக்கொள்ளாமல் அவற்றின் வல்லமையைத் திட்டக்கூடுகைகளிலும் பயன்படுத்த வேண்டும். நமது திட்டமிடலின்போது இந்த ஆவிக்குரிய ஈவுகளை நாம் அனுமதிக்கும்போது, அவைகள் நமக்குத் தெளிவான முடிவுகளை எடுக்கப் பேருதவியாக இருக்கும்.

### 6. திட்டமிடுதலின்போது, கலந்துரையாடலில் 'கொடுக்கல் வாங்கல்' முறையைப் பின்பற்றி, தூய ஆவியானவரின் உதவியோடு நமது உரையாடலைப் பகுத்தறிய வேண்டும்:

திட்டமிடல் தூய ஆவியானவரின் சித்தத்தைத் தெளிவுப்படுத்துவதாகவும், வெற்றியாகவும் அமைய வேண்டுமாயின், திட்டமிடும் குழுவிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் உரையாடலின்போது

‘கொடுக்கல் வாங்கல்’ முறையைப் பின்பற்ற வேண்டும். பின்னர் அதைக் குழுவாக ஆவியானவரின் உதவியோடு பகுத்தறிய வேண்டும். இதுவே திட்டமிடல் குழுவினருக்கு ஆவியானவருடைய வழிநடத்துதலின் உறுதியாக அமையும். அப்போதுதான் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தன்னை ஆவியானவருடைய வழிநடத்துதலின் வாய்க்காலாக உரிமை பாராட்ட முடியும். அதோடு ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் குழுவிலுள்ள மற்றவர்களின் மூலமாகவும் ஆவியானவரின் சித்தம் வெளிப்படுவதைக் காணவும், பகுத்தறியவும் முடியும். கிறிஸ்துவின் அங்கங்களாக நாம் அவரில் கட்டப்படும் நோக்கத்தோடு கூடிவரும்போது, ஆவியானவருடைய வழிநடத்துதலுக்கு நமது திட்டமிடல் உகந்ததாக அமையும்.

### 7. திட்டமிடலின்போது, உள்ளார்ந்த காரியங்களை மிகவும் முக்கிய மானதாக நோக்க வேண்டும்:

திட்டமிடலின்போது பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ய வேண்டுமாயின், உள்ளார்ந்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். உள்ளார்ந்த காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது என்பது, ஆவியானவர் நம்மிடம் என்ன சொல்லு கிறார் என்பதையும், மற்றவர் மூலமாக என்ன சொல்லுகிறார் என்பதையும் உற்று நோக்குவதாகும். இதில் நாம் வெறும் வார்த்தைகளை மாத்திரம் கேட்பதல்ல, அந்த வார்த்தையின் உட்கருத்து என்ன என்பதையும் அறிதலாகும். ஏனெனில், இவைகள்தான் நமது திட்டங்களுக் கெல்லாம் வித்தாகவும், வருங்காலத்திற்கு தேவனருளும் திறந்த வாசலாகவும் அமையும். இதில்தான் தேவனின் சித்தத்தை ‘கடுகு விதை’ போன்ற வடிவில் தெளிவாக அறியலாம்.

இது தொடர்பாக தேவன் அநேக கோட் பாடுகளையும், உயர்ந்த முன்மாதிரி களையும் நமக்குக் கொடுத்திருக்கிறார். இதன்மூலம் நமது சொந்த திட்டத் தீர்மானங்களையல்ல, ஆவியானவரின் வழிநடத்துதலையே சார்ந்திருக்க வேண்டு மென தெளிவுப்படுத்துகிறார். நாம் தேவனு டைய இதயத்தொனியையும், அவரது வழிநடத்துதலையும் தேடும்போது மட்டுமே, தேவனுக்குப் பிரியமான, வெற்றிகரமான திட்டத்தை வகுக்க முடியும். நாம் வாழுகிற இந்த உலகம் வெளிப்படையானதுதான். எனவே, அதனுடைய சூழ்நிலைகளையும் திட்டமிடலில் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்தான் என்றாலும், தேவ ராஜ்யத்தின் பிரஜைகளாக அவரது ராஜ்யத்தில் அடியெடுத்து வைத்திருக்கிற நாம், அவரது ராஜ்யத்தின் மகிமை, இந்த உலகைவிட, நாம் எண்ணுவதைவிட மிகவும் பெரியது என்பதைக் கருத்தில் கொண்டுச் செயல் படவேண்டும். இதைத்தான், எலிசா தீர்க்கதரிசியின் வேலைக்காரன் எதிரிகளின் படையைக் கண்டு மலைத்து நின்றபோது, எலிசா தீர்க்கதரிசி அவனை நோக்கி, “பயப்படாதே; அவர்களோடிருக்கிறவர்களைப் பார்க்கிலும் நம்மோடிருக்கிறவர்கள் அதிகம் என்றான். அப்பொழுது எலிசா விண்ணப்பம் பண்ணி: கர்த்தாவே, இவன் பார்க்கும்படி இவன் கண்களைத் திறந்தருளும் என்றான்; உடனே கர்த்தர் அந்த வேலைக்காரன் கண்களைத் திறந்தார்; இதோ, எலிசாவைச் சுற்றிலும் அக்கினிமயமான குதிரைகளாலும், இரதங்களாலும் அந்த மலை நிறைந் திருக்கிறதை அவன் கண்டான்” (2 இரா.6: 16-17). அதுபோல தேவன் நமது விசுவாசக் கண்களைத் திறந்து, நமக்கு தேவ ராஜ்ய பார்வையைத் தந்து, இந்த விசுவாச தீரத் திட்டமாகிய ‘இயேசுவை அறியாதோர் அவரை அறிந்திட வேண்டும்’ என்கிற திட்டக்கனவை நாம் நிறைவேற்றி முடிக்க நமக்குக் கிருபை செய்வாராக! ஆமென்.

# மகத்துவ தேவனின் மனதில் நாம்!



நமது நீண்டக்கால கிறிஸ்தவ ஜீவியம்... நமதாண்டவரின் மாட்சிமையையும் மகத்துவத்தையும் ஒருக்காலும் நமது எண்ணங்களிலிருந்து மழுங்கடிக்கலாகாது. தேவனின் மகிமை பொருந்திய அழகு, தயவு, தூய்மை, ஞானம், தாழ்மை மற்றும் வல்லமை நம்மை ஒவ்வொருகணமும் பிரமிக்கச் செய்தல் அவசியம். இல்லையென்றால்... நாம் உணர்வற்ற மந்த ஆவிக்குரிய நிலைக்குத் தள்ளப்பட்டு விடலாம்!

சந்திரனையும், நட்சத்திரங்களையும் தமது விரலினாலே விண்ணில் பொருத்தியுள்ள இப்பிரபஞ்சத்தின் மகத்தான பரிசுத்த தேவன், பாவிகளாகிய நம்மை மீட்பதற்காக, மனிதனாக இவ்வுலகிற்கு வந்து, நமது பாவங்களை அவரே சுமந்து, தம்மைத்தாமே வெறுமையாக்கி, பிறரால் புறக்கணிக்கப்பட்டு, அவமானப்படுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்டு, சிலுவையில் அறையப்பட்டார். அதன் விளைவாகவே, நாம் மகிமையினாலும் கனத்தினாலும் தேவனால் முடிசூட்டப்பட்டுள்ளோம்.

தேவன் நம்மை அவருடைய படைப்பின் மகுடமாக்கி, நமக்குத் தனி ஆள்தத்துவத்தைத் தந்து, அவருடைய விலையேறப்பெற்ற இரட்சிப்பினால் நாம் இழந்துபோன அவர்தம் சாயலை நம்மில் மீண்டும் புதுப்பித்து, அவருடைய பிற படைப்புகள்மீது நமக்கு ஆளுகை தந்து மகிழ்வதோடு, இவ்வுலகில் நாம் அவருடைய பிரதிநிதிகளாகவும், அவரது ஆட்சியை நிறுவுவதில் அவரோடு இணைந்து செயல்படுகிற துணை ஆட்சியாளர் களாகவும் செயலாற்ற விரும்புகிறார்.

தேவன் நம்மை நேசிப்பதால் அவர் உயர்ந்தவராயிருந்தும் தாழ்ந்த நம்முடன் செய்துள்ள (ஆதி.12:1-3) உடன்படிக்கையை ஒருபோதும் மாற்ற மாட்டேன் என்று அவர் நமக்குக் கொடுத்த வாக்கை இன்றும் பகற்காலத்திலும் இராக்காலத்திலும்கூட தலைமுறை தலைமுறையாகக் கிருபையாய்க் காத்து நடக்கிறார் (சங்.89:34; எரே.33:20-21, 25-26).

அவருடைய உடன்படிக்கை முடிவில்லாதது.
ஆம்! உண்மையாகவே தேவன் நம்மைக் கனப்படுத்தி இருப்பதால்தான் நாம் கனமடைந்துள்ளோம்; அவர் நம்மை மகிமைப்படுத்தி இருப்பதால்தான் நாம் மகிமையடைந்துள்ளோம்.

நம்மைப்பற்றிய தேவனின் எண்ணங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்டவை; மகா ஆழமானவை; மிக உன்னதமானவை.
தேவன் எக்காலத்திற்கும் உரியவராய் வருங்காலங்களை அறிந்திருப்பதினால், இன்று நமக்கு ஓர் புதிய ஆரம்பத்தைத் தர விரும்புகிறார். நமது வாழ்விற்கான அவரது அநாதி திட்டத்தை நிறைவேற்ற அவர் நம்முடன் வாசம்பண்ணி, இவ்வுலக வாழ்வில் நாம் எச்சவாலை எதிர்கொள்கிறோமோ, அதை நம்மீது நினைவாக இருக்கும் அவரும் எதிர்கொள்கிறார். நாம் உடல் ரீதியாகவும் உள்ள ரீதியாகவும் சுற்றியுள்ள சூழ்நிலைகளின் மாற்றங்களால் பாதிக்கப்படும்போது, 'மாறாத தேவன் நம்மீது நினைவாக இருக்கிறார்' என்பதை மனதில் கொள்வோம். எனவே, நாம் நம்மைச் சுற்றி நடக்கும் சாதகமற்ற சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாது – 'ஆ! என்ன பாக்கியம்! எவர்க்குண்டு இந்த சிலாக்கியம்!' (சங்.144:15) என அவரில் ஆர்ப்பரிப்போம்!

இத்தனை மகத்துவமான தேவன் நம்மீது நினைவாக இருப்பதற்கீடாக, நாமும் அவர்மீது நினைவாக இருக்க வேண்டும். நாம் அவருக்குப் பயந்து, அவரது கட்டளைகளைப் பின்பற்றி நடப்பதை நமது அன்றாட வாழ்க்கைமுறையாகக் கொள்ள வேண்டும். தேவனுக்கு நாம் நன்றி செலுத்துவதும், அவரது அன்பு, கிருபை மற்றும் உண்மைத்துவத்திற்காக அவரைத் துதிப்பதும் – வேதாகமம் நமக்கு வகுத்துக்கொடுத்த சிறந்த பாதையாகும்.
ஆம்! தேவன் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்! (சங்.115:12)

நம்மைக் குறித்ததான தேவனின் 'இரட்சிப்பின் திட்டம்' மிக உச்சிதமானது; ஆகையால், தேவனின் மாட்சிமை மற்றும் மகத்துவத்திற்கு நேராக நமது இதயங்கள் எழுச்சியுறட்டும்; அப்பொழுதுதான்... அவர் நம்மைத் தம் நினைவில் வைத்திருப்பதை நாம் மெய்யாகவே நன்கறிந்துணர்ந்து கொள்ளலாம். ஆம்! இவ்வாண்டில் என்றும் நாம் அவர் நினைவிலிருப்பதும், அவர் நம் நினைவிலிருப்பதும் நமக்கோர் அழகிய அனுபவமாகட்டும்!

**திருத்தி வாசிக்கவும்!**
2022 ஜனவரி மாதத்தில் வெளியிடப்பட்டுள்ள அறைகூவல் பத்திரிக்கையின் பக்கம் 19-ல் 'பணித்தள விஜயம் மற்றும் ஆலயப்பிரதிஷ்டை' தலைப்பில் வெளியிடப்பட்ட நிகழ்ச்சியில் 'சுமார் 5000 பேர் கலந்து கொண்டனர்' என திருத்தி வாசிக்கவும்.

# நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



**சகோ. P. ஹேமசந்திரன்**

## தேசிய கண்ணோட்டம் கொண்ட துடிப்புமிக்க தலைவர்

(06.12.1935 - 05.01.2022)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் 1980 முதல் 2000-ம் ஆண்டு வரை விரிவுப்பணிச் செயலாளராகவும், தலைமை செயலகப் பொறுப்பாளராகவும், பின்னர் இணை பொதுச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி ஓய்வுப்பெற்ற சகோ. P. ஹேமசந்திரன் அண்ணன் (வயது - 86) அவர்கள், கடந்த 05.01.2022 அன்று திருச்சியிலுள்ள தனது இல்லத்தில் வைத்து தேவமகிமைக்குள் பிரவேசித்தார்கள்.

இவர் ஆந்திராவிலுள்ள பிராமண குடும் பத்தைச் சார்ந்தவர். இவரது தாத்தா கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவே, வக்கீலான இவரது தகப்பனாரும் கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு வெளிஊழியங்களில் ஈடுபட்டு வந்தமை, திரு. P. ஹேமசந்திரன் அண்ணன் அவர் களுக்குள்ளே தான் சிறுபிள்ளையாயிருக்கும் போதே பெரிய தாக்கத்தை உருவாக்கியது. இவர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் இடைநிலைப் படிப்பையும், ஆந்திராவிலுள்ள நெல்லூரில் இளநிலை வேதியியல் (B.Sc., Chemistry) படிப்பையும் பயின்றார். இவர் தனது 26-ம் வயதில் நெய்வேலியிலுள்ள லிக்னைட் கார்ப்பரேஷனில் பணிபுரிந்தார். அப்பொழுது திருச்சியில் வைத்து நடை பெற்ற ஒரு ஆவிக்குரிய கூடுகையில் இயேசுகிறிஸ்துவைத் தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.



1960 ஜனவரி 4-ம் தேதி, இவர் சகோதரி. லலிதாவைத் திருமணம் செய்து கொண்டார். தேவன் இவர்களுக்கு இரண்டு மகன்களைக் கொடுத்து ஆசீர்வதித்துள்ளார். மருத்துவரான இவரது மூத்த மகன் டாக்டர். பால் குணசந்தரும், இளைய மகன் திரு. ஜார்ஜ் ஸ்டீபனும் குடும்பமாகக் கிறிஸ்துவுக்கு மகிமையாக வாழ்ந்து வருகிறார்கள். பின்னர் சகோ. P. ஹேம சந்திரனுக்கு திருச்சியிலுள்ள BHEL கம்பெனியில் வேலை கிடைத்தமையால், அங்கேயே குடும்பமாக வசித்து வந்தார். அக்காலக்கட்டத்தில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியங்களைக் குறித்து அறியும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது; அது இவரில் மிஷனெரிப்பணிக்கான பெரிய வாஞ்சையை உருவாக்கிற்று. அதன் விளைவாக, இவர் நமது ஊழியத்தின் ஜெபக்குழுத்தலைவராகவும், பின்னர் மாவட்டப் பொறுப்பாளராகவும் தீவிரமாகச் செயல்பட்டு வந்தார். பின்னர் திருச்சியிலுள்ள முருங்கப்பட்டியில் வைத்து நடந்த FMPB முகாமில் இவர் தன்னை முழுநேர ஊழியத் திற்கென்று ஒப்புக்கொடுத்து, BHEL கம்பெனியிலுள்ள தனது துணைமேலாளர் பதவியை ராஜினாமா செய்து, 1980 ஆகஸ்ட் 1-ம் தேதி நமது ஊழியத்தில்

முழுநேர ஊழியராக இணைந்தார். இவர் முதலாவதாக, ஆந்திரப்பிரதேசத்தில் நமது ஊழிய விரிவுப்பணி செயலாளராகப் பணியாற்றினார். அங்கு இவர் தனது ஊழிய அலுவலகத்தைத் திரு. சாம் புருஷோத்தம் அவர்களுடைய கார் ஷெட்டில் ஆரம்பித்து, ஒருவர் இனாமாக ஈந்த பழைய ஸ்கூட்டரில் சென்று, வெகு சில நாட்களிலேயே அநேக ஜெபக்குழுக்களையும், ஆதரவாளர்களையும் உருவாக்கினார். இவர் குண்டூர் மற்றும் மச்சி லிப்பட்டணத்திற்குச் சென்றபோதெல்லாம், பிறருடைய சைக்கிள்களைப் பயன்படுத்தி நூற்றுக்கணக்கான மைல்களுக்குச் சென்று, மக்களைச் சந்தித்து அநேகருக்கு மிஷனெரி தரிசனத்தை ஊட்டினார். இவர் எச்சூழ்நிலையையும் பொருட்படுத்தாது, சிறிய சிறிய காணிக்கைகளையும் வீடுவீடாகச் சென்று ஜெபித்து, சேகரித்து ஊழியத்திற்கு அனுப்பி வந்தார்.

பின்னர் இவர் வட மற்றும் வடகிழக்கு இந்தியாவின் விரிவுப்பணி செயலாளராகவும் அரும்பணியாற்றினார். நமது இயக்கத்தின் மாதாந்திர பத்திரிக்கையைத் தெலுங்கில் வெளியிட்டதோடு, தரிசனப் பாடல்கள் மற்றும் தேவ செய்திகளை மொழியாக்கம் செய்து தெலுங்கிலும், ஆங்கிலத்திலும் வெளியிட்டார். இவர் மொழிப்பெயர்த்த தெலுங்குப் பாடல்கள் இன்றும் தெலுங்கு திருச்சபைகளில் மிகவும் பிரபலமாகப் பாடப்பட்டு வருகிறது. இவரது அயராத உழைப்பின் காரணமாக வட மற்றும் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் நமது ஊழியத்திற்கென ஜெபிக்கக்கூடிய, கொடுக்கக்கூடிய அநேக மக்கள் எழும்பலாயினர். இதனால் நமது ஊழியத்திற்கு தேசிய அளவில் அங்கீகாரமும், அடையாளமும் கிடைத்தது . மேலும், உலகமெங்கும் வாழும் இந்தியர்கள் மத்தியில் மிஷனெரி தரிசன விரிவாக்கப்பணி செய்வதையும் முன்னெடுத்தவர் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் திரு. P. ஹேமசந்திரன் அண்ணன் அவர்கள், நமது தலைமை செயலகத்தின் பொறுப்பாளராகவும், அதைத் தொடர்ந்து இணை பொதுச்செயலாளராகவும் பணியாற்றினார். அருள்திரு. அறிவர். சாம் கமலேசன் அண்ணன் அவர்கள் முன்மொழிந்த ‘தேசிய திட்டமிடல் கூடுகையை’ இவர் நமது இயக்கத்தில் செயல்படுத்திக் காட்டினார். ஆங்கில மொழி பேசும் இளைஞர்களுக்காக ‘நவோதயா’ என்றதொரு குழுவை உருவாக்கி, அதன்மூலம் தேசம் முழுவதும் இளைஞர்கள் மத்தியில் ஒரு பெரிய தாக்கத்தை உருவாக்கினார்.

டிசம்பர் 2000-ல் நமது இயக்கத்திலிருந்து ஓய்வுப்பெற்ற இவர். திருச்சியிலுள்ள தனது மகன் வீட்டில் வாழ்ந்து கொண்டு, கூட்டங்களில் தேவ செய்தியளித்தும், அநேக ஆவிக்குரிய செய்திகளையும் கட்டுரைகளையும் நமது பத்திரிக்கையில் எழுதி வெளியிட்டும் வந்தார். இவரது வாழ்வு, பேச்சு, துடிப்புமிக்க ஊழியச் செயல்பாடு மற்றும் நகைச்சுவை திறனினால் ஈர்க்கப்பட்டு, தேசமெங்கிலுமுள்ள அநேகர் இவரது நண்பர்களாகவும், உடன் ஊழியர்களாகவும் மாறினர். இவர் எந்தப் பாரபட்சமுமின்றி அனைத்து தரப்பு மக்களிடமும் சரிசமமாகப் பழகும் குணம் படைத்தவர். இவருடைய பேச்சுகள் எப்பொழுதும் பிறரை ஊக்கமுட்டுவதாகவும், நம்பிக்கையூட்டுவதாகவும் காணப்பட்டன. ஆதலால் எல்லாராலும் இவர் அதிகம் நேசிக்கப்பட்டு, அநேகரால் ‘ஹேமா அண்ணன்’ என்றும், இளைஞர்களால் ‘ ஹேமா அங்கிள்’ என்றும் மிகுந்த பாசத்துடன் அழைக்கப்பட்டார்.

திரு. P. ஹேமசந்திரன் அண்ணன் அவர்கள், கடந்த 05.01.2022 அன்று தேவராஜ்ய அழைப்பைப் பெற்று, அம்மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவரது சரீரம் திருச்சி, உறையூரிலுள்ள சகல பரிசுத்தவான்கள் கல்லறையில் உயிர்த்தெழுதல் நம்பிக்கையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருமையான அண்ணனுடைய அழகிய ஆசீர்வாதமான வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். அண்ணன் விட்டுச்சென்றுள்ள அக்கா திருமதி. லலிதா ஹேமசந்திரன் மற்றும் மகன்களின் குடும்ப நபர்கள் யாவரையும் நமது ஜெபங்களால் தாங்கிக்கொள்வோம்.

– **அருள்திரு. அறிவர். E. ராஜன்,** FMPB.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



குமரி மாவட்டம், பள்ளியாடி பகுதியை மையமாக வைத்து கடந்த 23 ஆண்டுகளுக்கு மேலாக ஜெபக்குழுத்தலைவராகவும், திறமைமிக்க செயல்வீரராகவும் செயல்பட்டுவரும் திரு. நெல்சன் அண்ணனின் அன்பு துணைவியார் திருமதி. பூமணி சுலோச்சனா அவர்கள், நோய்வாய்ப்பட்டு சிகிட்சை பலனளிக்காமல், கடந்த 12.11.2021 அன்று ஆண்டவரின் அழைப்பைப் பெற்று மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் மிஷனெரிகளைத் தனது இல்லத்தில் தங்க வைத்து உபசரிப் பதிலும், ஜெபக்குழுக்களில் கலந்து கொண்டு தேசத்திற்காக ஜெபிப் பதிலும், தனது மற்றும் மகள் சார்பாக 2 மிஷனெரிகளை அனுப்பியும், தனது மகனின் சார்பாக குழந்தைகளை ஆதரித்தும் தேவராஜ்ய விரிவாக்கப் பணிகளுக்காய் அர்ப்பணிப்போடு செயல்பட்டு வந்தார். அக்காவின் பிரிவால் வாடும் இவரது கணவர், மகன் மற்றும் மகள் குடும்பம் ஆறுதலடையவும், இவர் விட்டுச்சென்றுள்ள நல்ல ஊழியப்பணிகளை அண்ணன் தொடர்ந்து செய்வதற்கு தேவன் தமது சகல கிருபைகளையும் தந்தருள ஜெபிப்போம்.

– FMPB, மார்த்தாண்டம் பணிமாவட்டம்.



மதுரையைச் சார்ந்த திரு. டேவிட் திலகர் சாலமோன்ராஜ் (வயது- 79) அவர்கள், நமது இயக்கத்தில் 1990-ம் ஆண்டிலிருந்து அதிக ஈடுபாடு கொண்டவர்கள். 2000-ம் ஆண்டிலிருந்து 2 ஆண்டுகள் இவர் நமது சகோதர இயக்கமான FES-ல் தாளாளராகச் சிறப்பாகப் பணி செய்தார். இவரது மகன் Dr. டேவிட் ஜெபராஜ் அவர்களும் நமது ஜெபக்குழுத்தலைவராக, கௌரவ முன்னேற்றப்பணி செயலராக, செயற்குழு உறுப்பினராகப் பலவிதங்களில் செயல்பட உந்துகோலாக இருந்தவர். இவர் தலைமை ஆசிரியராக மிகச்சிறந்த முறையில் தனது கடமையை ஆற்றி முடித்ததோடு, நேர மேலாண்மை மற்றும் நிதி மேலாண்மையில் சிறந்து விளங்கியவர்; இள வயதினரோடும் தோழமை உணர்வோடு பழகக்கூடியவர். இவர் கடந்த 08.12.2021 அன்று தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தார். இவரை இழந்து தவிக்கும் இவரது குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக ஜெபிப்போம்.

– முன்னேற்றப்பணி செயலர், மதுரை.



ரெட்ஹில்ஸ் – St. ஜோசப் பள்ளியின் ஸ்தாபகர் திரு. நோபுள் தாமஸ் அவர்களின் மூத்த மகனும், அப்பள்ளியின் தலைமை ஆசிரியரும், ரெட்ஹில்ஸ் FMPB பணி மாவட்டத்தின் முக்கியத் தலைவருமான திரு. N. எல்ஜின் ஜோசப் அவர்கள் (வயது – 51) , கடந்த 18.12.2021 அன்று உடல்நலக் குறைவினால் கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்கள். இவர் கடந்த 20 ஆண்டுகளாக FMPB-ல் இணைந்து, ஜெபக்குழுத்தலைவராக அயராது பணிசெய்தார்.

காந்திநகர், ஆட்டந்தாங்கல் பகுதிகளில் உள்ள வீடுகளைக் குடும்பமாகச் சந்தித்து, காணிக்கைகளைச் சேகரித்து, நமது ஊழியத்தின் பெருவளர்ச்சிக்குப் பாடுபட்டார்கள். குடும்பமாகவும், அவர்களது பள்ளியின் சார்பிலும் 4 மிஷனெரிகளைத் தாங்கி வருகிறார்கள்; வட இந்தியாவில் 4 ஆலயங்களைக் கட்ட உதவி செய்துள்ளார்கள். ஆண்டுதோறும் வடஇந்திய பணித்தளத்தைக் குடும்பமாகப் பார்வையிட்டு வந்தார்கள். ஒவ்வொரு மாதமும், ரெட்ஹில்ஸ் பணி மாவட்டத்தில் சேகரித்த காணிக்கையைக் காலந்தவறாமல், தலைமை செயலகத்தில் கொண்டு வந்து சேர்ப்பார்கள். அவர்களது பள்ளியில் FMPB-ன் எல்லாக் கூடுகைகளையும் நடத்த உதவினார்கள். திரு. எல்ஜின் அவர்களது பிரிவால் வாடும் அவரது மனைவி திருமதி. சாந்தி எல்ஜின், கல்லூரியில் படிக்கும் மகள் செல்வி. ஜாஸ்மின் எல்ஜின், பெற்றோர் மற்றும் சகோதரர்கள் யாவருக்கும் ஆண்டவர் மனஆறுதலையும், சமாதானத்தையும் அருள ஜெபிப்போம்.

- கௌரவ முன்னேற்றப்பணி செயலர், FMPB - ரெட்ஹில்ஸ்.



திருமதி. மேரி ஜெயராஜ் அவர்கள், திருச்சியிலுள்ள பொன்நகர் பகுதியின் பொறுப்பாளராகக் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகச் செயல்பட்டு வந்த மூத்த முன்னோடி ஜெபக்குழுத்தலைவி ஆவார். இவர் தனது இல்லத்தில் தவறாது ஜெபக்குழு நடத்துவதிலும், கிரமமாக நமது ஊழியத்திற்கு ஆதரவுகள் திரட்டுவதிலும் அநேகருக்கு முன் மாதிரியாகத் திகழ்ந்தார். தனது வீட்டில் மிஷனெரிகளை உபசரிப்பதிலும், அவர்களுக்கு ஒழுங்காகக் கடிதம் எழுதி விசாரிப்பதிலும், அவர்களது அவசர ஜெபத்தேவைகளை மற்றவர்களிடம் பகிர்ந்து ஜெபிப்பதிலும் இவரது பங்களிப்பு மிகவும் பெரிது. தனது தளராத வயதிலும் வருடந்தோறும் கேரல் ரவுண்ட் மூலமாகப் புதிய குடும்பங்களைச் சந்தித்து, ஆதரவுகளைத் திரட்டுவதில் தீவிரம் காட்டினார். ஒவ்வொரு வருடமும் தமிழ்நாடு மாநில முகாமிற்கு அநேகரை அழைத்து வந்து, அவர்கள் மிஷனெரி தரிசனத்தைப் பெற்றுக்கொள்ள ஊக்கப்படுத்தினார். இவர் கடந்த 07.01.2022 அன்று இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து, தேவ மகிமைக்குள் பிரவேசித்தார். இவருடைய அழகிய அர்ப்பணிப்புள்ள வாழ்விற்காக தேவனைத் துதிக்கிறோம். இவர்களுடைய இருமகன்கள் மற்றும் மகளுடைய குடும்பத்தை தேவன் ஆறுதல்படுத்தி, பெலப்படுத்த ஜெபிப்போம்.



புத்தளம் பணி மாவட்டத்தைச் சார்ந்த திரு. ஏசுமணி அவர்கள் (வயது - 84), ஜெபக்குழுத்தலைவராகச் சுமார் 20 ஆண்டுகள் இருந்து கடந்த 28.12.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவர் கோவில்விளை பகுதியிலிருந்து மாநில முகாம் மற்றும் ஜெபக்கூடுகைகளுக்கு அநேகரை அழைத்து வரவும், அப்பகுதி மக்கள் மற்றும் தனது உறவினர்கள் எப்பகுதியில் இருந்தாலும் அவர்களிடமும் நமது ஊழியத்திற்கென காணிக்கைகளைப் பெற்று அனுப்புவதில் முன்னோடியாய் இருந்தார். இவர் ஒரு குழந்தை ஆதரவாளரும் கூட. இவரை இழந்து வாடும் இவரது மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்காக ஜெபிப்போம்.

# மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



சகோ. ஜாண்சுந்தர் அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் இளைஞர் மற்றும் இளம் வாலிபர் பிரிவின் ஊழியங்களில் அதிக ஈடுபாடு கொண்டவர். இவர் அண்ணா நகர் பிராந்தியத்திலுள்ள ஊழியங்களில் தன்னை இணைத்துக் கொண்டு, நமது ஊழிய விரிவாக்கத்திற்கு அதிகம் உழைத்தவர். சென்னை முன்னேற்றப்பணி ஊழிய விரிவாக்கத்திற்கு என நடத்தப்பட்ட மிஷனெரி தரிசன விரிவாக்கக் கண்காட்சி (EXPO)-யின் வெற்றிக்கு அதிகம் உழைத்தவர். தனக்கு தேவன் தந்த இசை தாலந்தை நமது ஊழியக் கூடுகைகளிலும், மாநில முகாமிலும் குழுவாகவும், குடும்பமாகவும் வந்து நடத்திக் கொடுத்தவர். பாடலுக்குப் பண் அமைப்பதிலும் இவருக்கு தனிதாலந்து உண்டு. இவர் கடந்த 07.01.2022 அன்று தேவ மகிமைக்குள் பிரவேசித்தார். இவரை இழந்து வாடும் இவருடைய மனைவி மற்றும் மகளை நமது ஜெபத்தில் தாங்கிக்கொள்வோம்.



கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், புதுப்பேட்டை பகுதியில் நமது இயக்கத்தின் ஜெபக்குழுத்தலைவராகச் செயல்பட்ட திரு. செ. தினகரன் சாம்சன் (வயது-45) அவர்கள், கடந்த 22.10.2021 அன்று கர்த்தருக்குள் இளைப்பாறுதல் அடைந்தார்கள். அன்பார்ந்த சகோதரனின் ஊழியங்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அவருடைய மனைவிக்காக, அவர்களின் பிள்ளைகளின் எதிர்கால வாழ்விற்காக ஜெபித்துக் கொள்வோம்.



திருமதி. ஜெயராணி ஜெயக்குமார் (வயது - 66) அவர்கள், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தில் 1990-ம் ஆண்டு முதல் திருநெல் வேலி மாவட்டம் - பெருமாள்புரம் பகுதி ஜெபக்குழுத்தலைவியாகப் பொறுப்பெடுத்து மிகவும் சிறப்பாக ஆண்டவருக்காகத் தியாகமாகப் பணியாற்றியவர்கள். இவர் எதிர்பாராத நிலையில் கடந்த 08.12.2021 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய ஜெப வாழ்க்கை, மிஷனெரிகளை விசாரிப்பதில் இவருக்குள் இருந்த ஆழமான கரிசனைகள் மிகவும் பாராட்டத்தக்கது. இவர் இயக்கத்தின் அவசர தேவை என்று வரும்போதெல்லாம் தகுதிக்கு மிஞ்சிக் கொடுத்து மகிழ்பவர். இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள்; ஒரு மகள் குடும்பமாகத் துபாய் தேசத்திலும், அடுத்த மகள் சென்னை தாம்பரத்திலும் குடும்பமாக வசித்து வருகிறார்கள். இவரை இழந்து தவிக்கிற கணவர் திரு. ஜெயக்குமார் அண்ணன் மற்றும் பிள்ளைகளின் ஆறுதலுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். திரு. ஜெயக்குமார் அண்ணன் வங்கி அதிகாரியாக இருந்தபோது, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் திருநெல்வேலி முன்னேற்றப்பணிக்கு மிகவும் உதவியாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இக்குடும்பத்தினரின் மனஆறுதலுக்காக ஜெபித்துக் கொள்வோம்.

# திருச்சபைப் பிரதிஷ்டையும் பணித்தள விஜயமும்





நமது பாண்டிச்சேரி விரிவுப்பணி ஊழியத்தின் சார்பாக மத்தியப் பிரதேசத்தில் காண்ட்வா பணித்தளத்திலுள்ள நமது மிஷனெரிப்பணிகளைக் கடந்த 2021 நவம்பர் 27, 28-ம் தேதிகளில் பார்வையிட வாய்ப்புக் கிடைத்தது. அங்குள்ள லாங்கோட்டி என்கிற கிராமத்திலுள்ள இரவுக்கூடுகையில் கலந்து கொண்டு, இளம் விசுவாசிகளின் ஆவிக்குரிய விசுவாச வாழ்வைக் கண்டு, தேவனை மகிமைப் படுத்தினோம். 28-ம் தேதி துல்கோட் பணித்தளத்திலுள்ள பாசலி என்கிற கிராமத்தில் பீல் மற்றும் பரேலா விசுவாசிகளின் நடன வரவேற்போடு, அங்கு திரு. பால் பிரின்ஸ் மற்றும் அவரது மனைவி திருமதி. ஹெப்சிபா பால் பிரின்ஸ் அவர்களின் குடும்பத்தின் சார்பாகக் கட்டப்பட்டுள்ள தேவாலயத்தை தேவ நாம மகிமைக்காக மங்கலப்படைப்புச் செய்தோம். மிஷனெரிகளின் தியாகமான அர்ப்பணிப்பும், இளம் விசுவாசிகளின் ஆவிக்குரிய ஜீவியமும் எங்களை மென்மேலும் மிஷனெரிப் பணிக்காக ஜெபிக்கவும், ஈடுபாடு கொள்ளவும் மிகவும் தூண்டியது. தேவனுக்கே மகிமை!

- கௌரவ விரிவுப்பணி செயலர், பாண்டிச்சேரி.



## ஆலயப்பிரதிஷ்டை மற்றும் பணித்தள விஜயம்

2021, நவம்பர் 4-ம் தேதி மதுரையிலிருந்து 9 பேர் அடங்கிய குழுவாக மஹாராஷ்டிரா மாநிலத்திற்குச் சென்றோம். சமீப நாட்களில் விபத்தில் தேவனுடைய ராஜ்யத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நமது சுதேச ஊழியர் திரு. சஞ்ஜய் வீடு அமைந்திருந்த சிம்மண்பாரா கிராமத்திற்குச் சென்று, ஆபத்தான நிலையிலிருந்த அவருடைய மனைவி திருமதி. பிரமிளா, மூன்று பிள்ளைகள் மற்றும் உறவினர்களின் ஆறுதலுக்காக ஜெபித்து வந்தோம். அதன்பின், போவர்பாடா கிராமத்தில் நடைபெற்ற ஆராதனையில் கலந்து கொண்டோம். அவ்வாராதனையில் 46 பேர் தேவனுடைய மந்தையில் இணைந்தனர். பின்னர், மதுரை ஸ்கேன் மூலமாக பாதர்பாடா என்ற கிராமத்தில் கட்டப்பட்ட ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் ஏறத்தாழ 1000 விசுவாசிகள் கலந்து கொண்டு, தேவனை மகிமைப்படுத்தினர். வல்சாட் மாவட்டம், பாயர்பாடா என்ற கிராமத்தில் நடந்த ஆராதனையிலும் 46 பேர் தேவனுடைய மந்தையில் இணைந்தனர். அதன்பின், தடுகோன் பணித்தள கோராடி என்ற கிராமத்திற்குச் சென்று, மதுரை ஸ்கேன் பொறுப்பாளர் திரு. சாலமோன் ராஜா அவர்களது குடும்பத்தின் சார்பாகக் கட்டப்பட்ட ஆலயத்தை தேவநாம மகிமைக்காகப் பிரதிஷ்டை செய்தோம். அங்கு சுமார் 150 விசுவாசிகள் கலந்து கொண்டு, தேவனை மகிமைப்படுத்தினர். மலைகள், பள்ளத்தாக்குகள், சமவெளிகள் அடங்கிய விந்திய சாத்புரா மலைத்தொடர் வழியாகப் பிரயாணம் செய்தது, எங்களுக்கு மிகவும் சவாலாக இருந்தது. ஊழியர்களின் சுகம், பாதுகாப்புக்காக அதிகமாக ஜெபிக்க ஏவப்பட்டோம். தேவனுக்கே மகிமை!

- FMPB, விரிவுப்பணி செயலர், மதுரை.

# மறக்க முடியாத மாமனிதர்கள்



## மறைதிரு. குருபாதம் பொன்ராஜ்
(1956 - 2009)

### இளமைப்பருவம்

சகோ. குருபாதம் பொன்ராஜ் அவர்கள் தூத்துக்குடி, முத்து நகர் என்ற பகுதியில் வாழ்ந்த ஒரு கிறிஸ்தவ பக்தியுள்ள குடும்பத்தில் 1956-ம் ஆண்டு டிசம்பர் 1-ம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை திரு. மோசஸ், இலங்கை அரசு நிறுவனமொன்றில் பணிபுரிந்தவர். தாயார் திருமதி. டெய்சி, ஒரு ஆசிரியர். சகோ. குருபாதம் பொன்ராஜ் அவர்களுடன் பிறந்தோர் மூன்று பேராகும். இவருடைய அண்ணன் பெயர் சந்தோஷ்ராஜ், தம்பி பெயர் செல்வின் ஜெபராஜ், கடைசி தங்கை பெயர் மேரி பொன் ராஜாத்தி ஆகும். இவர்களுடைய பெற்றோர் இவர்களைப் படிக்க வைத்ததோடு, கிறிஸ்தவ பக்தி வாழ்க்கையிலும் வளர்த்தனர். அனைவரும் ஆலயத்திற்கு ஒழுங்காகச் செல்வது மட்டுமல்லாது ஆலய ஊழியங்களிலும் ஈடுபடுவார்கள்.

### பள்ளிப்பருவம்

சிறுவயதிலிருந்தே சகோ. குருபாதம் நன்றாகப் படிப்பார். இவருடைய அண்ணன் தன்னுடைய பள்ளி இறுதிப்படிப்பை முடித்தவுடன் வேலையில் இணைந்தார். இவருடைய தம்பியும் பள்ளிப்படிப்பு முடித்து மின்சாரத்துறையில் இணைந்து பணியாற்றலானார். சகோ. குருபாதம் பள்ளிப்படிப்பிற்குப் பின், கல்லூரியில் இணைந்து தனது இளங்கலை பட்டப் படிப்பை முடித்தார்.

### இரட்சிப்பின் அனுபவம்

சகோ. குருபாதம் தனது பள்ளி இறுதிப் படிப்பை முடித்து, கல்லூரி செல்லத் தயாராக இருக்கும் காலத்தில் 1972-ம் ஆண்டு தன்னுடைய 16-வது வயதில் இயேசுகிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்று, அவர் தரும் பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொண்டார். இவர் தன்னுடைய B.Sc., பட்டப்படிப்பை முடித்தவுடன், தனது தாயைப் போல ஒரு ஆசிரியராக வரும்படி ஆசிரியப் பயிற்சிக்கல்லூரியில் இணைந்து B.Ed., பட்டப்படிப்பையும் முடித்தார். இவர் வேதத்தை அதிகமாக வாசித்தும் மற்றும் மாணவர்களுக்கென இவாஞ்சலிக்கல் யூனியன் மூலமாக நடந்த ஜெபக் கூடுகையில் முறையாக வேதத்தைக் கற்றும், ஆவிக்குரிய வாழ்வில் தான் மட்டும் வளர்ச்சியடைந்து வந்ததுமட்டுமல்லாது, சக மாணவர்களையும் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி, கல்லூரியில் நற்சாட்சி பெற்றார்.

### ஊழியத்திற்கு அழைப்பு

கல்லூரி வாழ்க்கை இவருக்கு மிக ஆசீர்வாதமாக இருந்தது. இவருக்கு ஆவிக்குரிய வாழ்வில் பெருமளவு உதவி செய்து வந்தது, பேராசிரியர். ஐவின் பாலசிங்

அவர்கள் ஆகும். இவர் தான் பெற்ற இந்த ஆவிக்குரிய ஆசீர்வாதத்தை அனைத்து மாணவர்களும் பெற வேண்டுமென ஜெபித்தும், இவாஞ்சலிக்கல் யூனியன் ஊழியர்களுடன் இணைந்து பணியாற்றியும் வந்தார். இவர் 1977-ம் ஆண்டு நாசரேத் என்ற ஊரில் இவாஞ்சலிக்கல் யூனியன் நடத்திய முகாமில் பங்குப்பெற்றார். அம்முகாமில் இந்திய தேசத்தில் அவசியம் செய்யப்பட வேண்டிய மிஷனெரிப் பணியைக் குறித்து தெளிவாகப் பகர்ந்து கொள்ளப்பட்டது. அச்சமயம் இவரோடு இடைப்பட்ட பரிசுத்த ஆவியானவர் இவரைத் தம்முடைய பணிசெய்ய அழைத்தார்.

சகோ. குருபாதம் பொன்ராஜ், 'தான் ஒரு நல்ல ஆசிரியராக இருந்து தேவப்பணியோடு குடும்பப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்' என்ற தனது தாயாரின் விருப்பத்தை நிறைவேற்ற விரும்பினாலும், தேவன் இவருடைய வாழ்வில் வைத்திருந்த திட்டம் வேறாக இருந்தது. எனினும் வேதத்தை வாசிக்கும்போது, ஒவ்வொரு வார்த்தையும் இவருடன் தெளிவாகப் பேசவே, தடைகளை மீறி ஊழியத்திற்குச் செல்லத் தீர்மானித்தார். தன்னை தேவப்பணிக்கென ஆயத்தம் செய்யும்படி இறையியல் படிக்க இவரை இவருடைய நண்பர்கள் உற்சாகப்படுத்தவே, டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் வேதாகமக்கல்வி நிலையத்தில் ஒருவருட மிஷனெரிப்பயிற்சியை 1979-ம் ஆண்டு முடித்தார். இவருடைய திறமைகளைக் கண்ட டாக்டர். தேவதாஸ் அண்ணன் அவர்கள், இவரை இறையியல் மேற் படிப்புப் படிக்க உற்சாகப்படுத்தியதோடு, உதவியும் செய்தார். எனவே சகோ. குருபாதம், யவத்துமால் என்ற இடத்தில் இயங்கி வந்த இறையியல் கல்லூரியில் இணைந்து B.D., பட்டம் பெற்றார். சில நண்பர்களின் உதவியோடும், கல்லூரியில் பகுதி நேரம் பணியாற்றியும் தன்னுடைய படிப்பின் செலவைச் சந்தித்தார். அங்கு படிக்கும்போதே, தான் மிஷனெரிப்பணியில்தான் இணைய வேண்டும்; ஏனெனில், தன்னை தேவன் போதக ஊழியத்திற்கல்ல, மிஷனெரியாக அழைத்திருக்கிறார் என்ற தெளிவோடு இருந்தார். ஆகவே ஆண்டவரின் வழிநடத்துதலின்படி, மே மாதம் 17-ம் தேதி 1982-ம் ஆண்டு இவர் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக இணைந்தார்.

## திருமண வாழ்வு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு இவரை குஜராத் மாநிலத்திற்கு மிஷனெரியாக அனுப்பினார்கள். குஜராத்தி மற்றும் அங்குள்ள மக்கள் பேசும் மொழியை இவர் கற்று, 1982-ம் ஆண்டு முதல் 1986-ம் ஆண்டு வரை அங்கு ஊழியம் செய்து வந்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரியாக உத்தரப்பிரதேசத்தில் ஊழியம் செய்து வந்த சகோதரி. விஜய மலருடன் திருமண ஏற்பாடு செய்யப்பட்டு, 1986-ம் ஆண்டு இவர்களுடைய திருமணம் சிறப்பாக நடைபெற்றது. இவர்களுடைய திருமண வாழ்க்கையை தேவன் ஆசீர்வதித்து, 1988-ம் ஆண்டு ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். அவனுக்கு 'சாம் ஜானி' என்று பெயரிட்டனர்.

## மிஷனெரிப்பணியில்

குஜராத் மாநிலத்தில் கிட்டத்தட்ட 15 வருடங்களாக இவர்கள் தேவப்பணியைக் குடும்பமாகச் செய்து வந்தனர். இவர் 1990-ம் ஆண்டு முதல் பிப்பள்வாடாவை மையமாக வைத்து பிராந்தியச் செயலராகப் பொறுப்பேற்று, திருச்சபை நாட்டும் பணியைக் குக்னா மற்றும் பிற இன மக்கள் மத்தியில் ஒருங்கிணைந்து வழிநடத்தி வந்தார். 1992-ம் ஆண்டு தேவையினிமித்தம் ரூர்கேலாவை மையமாக வைத்து, ஒடிசா மாநிலத்தில் நடந்த மிஷனெரிப்பணிகளுக்குப் பிராந்தியச்

செயலராக இவர் நியமிக்கப்பட்டு, அந்தப் பணியைச் செய்துவந்தார். 1992-ம் ஆண்டு இவருக்குக் குருத்துவப்பட்டமும் வழங்கப்பட்டது. 1996-ம் ஆண்டு இயக் கத்தின் சார்பில் தன்னுடைய முதுகலை இறையியல் கல்விக்காக அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குச் சென்று M.Th., படித்து முடித்தார். 1997-ம் ஆண்டு இவருக்கு மேற்கு மண்டலச்செயலர் பொறுப்பு கொடுக்கப்பட்டது. 1998-ம் ஆண்டு முதல் பணித்தள நிர்வாகத்தில் உதவி செய்ய நாக்பூர் பணித்தள அலுவலகத்திற்கு மாற்றப்பட்டார். 2000-ம் ஆண்டில் இவர் மறுபடியும் மேற்கு மண்டலச்செயலராக நியமிக்கப்பட்டு, குஜராத் மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களில் நடைபெற்று வந்த திருச்சபை நாட்டும் பணியை வழிநடத்தி வந்தார். 2007-ம் ஆண்டு இவர் பணித்தளச்செயலராக நியமிக்கப்பட்டு, இயக்கத்தில் நடைபெறும் அனைத்துத் திருச் சபை நாட்டும் பணிகளுக்கும் தலைமைப் பொறுப்பேற்று நடத்தி வந்தார்.

## இறுதி நாட்கள்

பணித்தள நிர்வாகப் பொறுப்பை நாக்பூரி லிருந்து செய்துவந்த சகோ. குருபாதம் பொன்ராஜ், 2009-ம் ஆண்டு பிராந்தியச் செயலர்களின் பயிற்சியை நடத்திக் கொண்டிருந்தார். அவ்வருட செப்டம்பர் 18-ம் தேதி, இவர் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் அப்பயிற்சிக்கூடுகைக்குத் தேவையான பொருட்களை வாங்க கடைவீதிக்குச் சென்றார்; பொருட்களை வாங்கி, சாலையைக் கடக்க முற்படும்போது, வேகமாக வந்த கார் ஒன்று இவர்மீது மோதியது. காரை ஓட்டி வந்தவர் குடிபோதையில் இருந்தபடியால், இந்தப் பெரும் விபத்து இரவு எட்டு மணியளவில் நடந்தது. உடனே நாக்பூரிலுள்ள மருத்துவ மனையில் இவர் சேர்க்கப்பட்டு, சிகிட்சை பெற்று வந்தார். இவருடைய உள் உறுப்புகள் பல இந்த விபத்தால் பெரிதும் சேதம் அடைந்திருந்தன. அங்குச் சிகிட்சையில் அதிக முன்னேற்றம் இல்லாததாலும், இவர் மிக அதிகப் பாதிப்படைந்திருந்ததாலும் இவரை வேலூர் கிறிஸ்தவ மருத்துவ மனைக்கு உடனே கொண்டு செல்லத் தீர்மானிக்கப்பட்டது. செப்டம்பர் 24-ம் தேதி விமானம் மூலம் இவர் சென்னை கொண்டு வரப்பட்டு, பின் அங்கிருந்து ஆம்புலன்ஸ் வாயிலாக வேலூர் கொண்டு செல்லப்பட்டு, இவருக்கு உயர் சிகிட்சை கொடுக்கப்பட்டது. இவருடைய இடுப்பு மற்றும் வலது கை எலும்புகளில் முறிவுகள் இருந்தன. மேலும் சிறுநீர்ப்பை கிழிந்தி ருந்தது. இப்படிப்பட்ட பல பிரச்சனைகள் மத்தியிலும் மருத்துவர்களால் முடிந்தளவு அனைத்துச் சிகிட்சைகளும் செய்யப்பட்டுக் கொண்டிருந்த வேளையில். இவருக்குத் திடீரென மூச்சுத்திணறல் ஏற்பட்டு சுவாசிக்கக் கஷ்டப்பட்டு வந்தார். கடைசியில் செப்டம்பர் மாதம் 25-ம் தேதி மாலை 7 மணியளவில் இவர் தன் இறுதி மூச்சை ஆண்டவரிடம் ஒப்படைத்து, தேவராஜ்யம் சென்றடைந்தார்.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களில் சகோ. குருபாதம் பொன்ராஜ் அவர்கள், தன்னுடைய இளமையிலேயே பல தலைமைத்துவப் பொறுப்புகளை ஏற்று, திறமையாகவும் உண்மை யாகவும் செயல்பட்டார். இவர் தனக்கு இப்புவியில் ஆண்டவர் கொடுத்தப்பணியை வெற்றியாகச் செய்து முடித்து, தன் ஓட்டத்தை கிறிஸ்துவுக்குள் நிறைவு செய்தார். இவரது நற்சாட்சியுள்ள வாழ்விற்காக தேவனைத் துதிப்போம். தற்போது சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள நிதித்துறையில் பணி யாற்றி வருகின்ற இவரது அன்பு மனைவி யையும் மற்றும் அமெரிக்காவிலுள்ள HCL-IT நிறுவனத்தில் பணியாற்றி வருகின்ற இவரது மகனையும் தவறாமல் நமது ஜெபங்களில் நினைத்துக் கொள்வோம். கர்த்தர் தாமே இவர்களோடிருந்து இவர்களை ஆசீர்வதித்து வழிநடத்துவாராக!

*– அருள்திரு. அறிவர். இ. ராஜன்*

**1**
**பிப்ரவரி**
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. பெஞ்சமின் ஜோதி
திரு. ஆரோன்சிங் நர்சாரி, திரு. சங்கர் M.
திருமதி. காந்தி தேவி சிவசங்கர்

# ஜம்மு

## ஆர். எஸ். புரா & அக்னூர்:

### டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. சாக் தலாப் கிராமத்திலிருந்து இரண்டு குடும்பங்கள் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் காட்டுகின்றனர். நமது விசுவாசிகள் தன்னார்வமாக வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் பங்கேற்கின்றனர். ஆக்ரா சாக் கிராம வஸ்ஸான் லால் கல்லீரல் நோய்த்தொற்றிலிருந்து சுகமடைந்துள்ளார். கோட்லி கிராம மய்ரா தேவியைப் பிசாசின் பிடியிலிருந்து தேவன் ஜெபத்தின் மூலம் விடுவித்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பகாத் மற்றும் பத்வால் இனமக்கள் யாவரும் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட; புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து நமக்கு ஊழியத்தில் புதிய தொடர்பாளர்கள் கிடைக்க; புதிய கிராமங்களுக்குள் நுழையவிடாமல் ஊழியர்களைத் தடுக்கும் குல்லியன் சமுதாய சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் அனைவரும் இயேசுவின் அன்பால் தொடப்பட; நமது விசுவாசிகளைத் தங்களது விசுவாசத்திலிருந்து வழிவிலகச் செய்ய வலியுறுத்தும் அவர்களது கிராமத்தலைவர்கள் இரட்சிக்கப்பட; விசுவாசத்திலிருந்து பின்மாற்றமடைந்திருப்போர் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; படியல் கிராம பவன் வலிப்பு நோய் மற்றும் இருதயப் பிரச்சனையிலிருந்து அற்புத சுகம் பெறவும், ஆக்ரா சாக் கிராம அஸ்வினி குமாருக்குக் கண் பார்வை கிடைக்கவும்; ஆக்ரா சாக் கிராம லட்சுமண், சுரேஷ், சபி லால் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

# ஹிமாச்சலப் பிரதேசம்

## கர்சோக்:

### சுமித் குமார் தரியானி & துங்சிபெனி

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் நமது ஊழியத்தில் தொடர்பு கொண்டுள்ளனர். ரிக்கி பகுதியில் வைத்து நடைபெற்ற தேடுவோர் முகாமையும், விசுவாசிகள் முகாமையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். எதிர்ப்புகளின் மத்தியிலும் கர்சோக் பகுதியில் நமது ஊழியத்தைத் தொடர தேவன் கிருபை காட்டி வருகிறார். ரிக்கி மற்றும் புரானா கிராமங்களில் புதிதாக சிறிய ஜெபக்குழுக்கள் துவங்கப்பட்டுள்ளன. வாராந்திர ஜெபக்கூடுகை மற்றும் வேதாகம வகுப்புக்குழுக்கள் யாவும் எவ்விதத் தடங்கலுமின்றி தவறாமல் இயங்கிக் கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்தில் தன்னார்வத்துடன் பங்குப்பெறும் நமது விசுவாசி சந்தர்காந்தாவின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; வெளிப்புற சந்திப்பு ஊழியக்குழுவினர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் மேலும் நல்வளர்ச்சிப் பெற; குடித்துவிட்டுப் பிரச்சனையை உருவாக்கும் நமது விசுவாசி அஞ்சலியின் மாமனார் தனது குடிப்பழக்கத்தை விட்டுவிடும்படி மனந்திரும்ப; தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் 3 நபர்கள் தங்களது விசுவாசத்தில் மேலும் வளர ஜெபிப்போம்.

**2**
**பிப்ரவரி**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஆர்தர் ஜெபராஜ், திரு. பிரபாகர் N.
திருமதி. வசந்தராணி ஜார்ஜ்
திருமதி. ரோஷிலா மொசாஹரி
திருமதி. ஜாய்ஸ் ஷோபனா பொன் அகஸ்டின்
திரு. மார்கூஸ் மால்தோ R., திரு. ஜோசப் கிருபாகரன்
திருமதி. மணினி பெபர்த்தா அஸ்தபான்

## ரிகாங்பியோ:
### பப்லு பரசேத் & கல்பனா மாலிக்

**துதிக்க:** புதிதாக 7 நபர்கள் கர்த்தரை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளனர். புதிதாக 4 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. தேவ நாமம் மகிமைப்படும்படி விசுவாசிகள் முகாம், வாலிபர்கள் முகாம், சிறுவர்கள் முகாம் மற்றும் ஆத்தும ஆதாயம் செய்வோர் முகாம் நடந்து முடிந்துள்ளது. லீலா குமாரி, யோகிதா, சுமித்ரா, கமல் தாஸ், பாங்சுந்தர் மற்றும் குல்பந்த் சுவிசேஷத்தின்மீது நாட்டம் காட்டுகின்றனர். குடும்பத்தகராறின் நிமித்தமாக விஷம் அருந்தின பிந்தேஷ் குமாரியின் ஜீவனை தேவன் அற்புதமாக மீட்டதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தினால் சந்திக்கப் படாதவர்களைச் சந்திப்பதற்கென உற்சாகப் படுத்தப்பட்டுள்ள நமது விசுவாசிகள் மத்தியில் தேவன் ஆசீர்வாதமான நல் விளைவுகளை ஏற்படச் செய்ய; தேவ வார்த்தைகளை மிகுந்த ஆர்வமுடன் கேட்கும் பாங்சுந்தர், குல்பந்த், அமன்தீப், அம்ன்ஜீத் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; ராஜ்புத், பண்டிட், தாகூர், பிராமின், சோனார், லோஹார், சமார், திபெத்தியன், தமாங் மற்றும் சர்பா இனக்கூட்ட மக்கள் மத்தியில் பெரும் ஆவிக்குரிய தாக்கம் உருவாக; நமது ஊழியர்களுடன் இணைந்து ஊழியம் செய்ய முன்வரும் தேவ்சிங் மற்றும் கரணின் குடும்ப நபர்களுடைய ஆவிக்குரிய வாழ்வின் வளர்ச்சிக்காக; தீய வழிகளில் நடக்கும் ஈஸ்வர் மற்றும் சுந்தர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

# பஞ்சாப்
## புத்லாடா:
### சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

**துதிக்க:** கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாச மந்தைக்குள் புதிதாக 2 நபர்கள் வந்துள்ளனர். முதன்முறையாக 3 கிராமங்களில் சுவிசேஷ வார்த்தைகள் பகரப்பட்டுள்ளன. பஞ்சாப் மாநில காவல் துறையில் பணிபுரிய தேர்ந்தெடுக்கப் படுவோருக்கான தேர்வில் நமது மூன்று விசுவாசிகளான மன்பிரீத், லவ்பிரீத் மற்றும் ஜாஸ்மின் வெற்றிகரமாக தேர்ச்சிப் பெற்றுள்ளனர். இயேசுவை அறிந்து கொண்டதினால் குழந்தை பாக்கியத்தை அடைந்துள்ள நமது வாகில் குடும்பத்தார் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட ஆயத்தமாக உள்ளனர். தோஹனா கிராம பித்துசிங் மற்றும் அவரது மனைவி பரம்ஜீத் கௌரை தேவன் குடற்புண் காய்ச்சலிலிருந்து சுகப்படுத்தியுள்ளதற் காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடத்தப்பட இருக்கும் சிறப்பு சத்சங் கூடுகையின் மூலம் ஏராளமானோர் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள; துடதா, படுதா, ரால்லி, பச்சோனா, கனக்வால் மற்றும் சிர்சிவால் கிராமங்களில் நடைபெறும் நமது ஊழியங்களின் நல்வளர்ச்சிக்காக; நமது பவானிகர் ஆலயத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் நீதிமன்ற வழக்கு சுமூக மாக முடிவடைய; கிப்பா & சந்தோஷ் மற்றும் சேவாக் & ரேகாவின் குடும்பங்களில் தேவசமாதானம் பிறக்க; காலெலும்பு முறிவு மற்றும் தொடைப்பகுதியில் ஏற்பட்டிருக்கும் காயத்திலிருந்து தேவன் சேவாக்கையும் மக்கானையும் பூரணமாகக் குணமடையச் செய்ய; நமது விசுவாசிகளான ராகேஷ், மோனா, கீதா, ஜசி ஆகியோருக்கு நல்ல வாழ்க்கை துணைகளமைய ஜெபிப்போம்.

## 3
## பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. முருகம்மாள் எஸ்தர் ஆல்பர்ட் பிரபாகரன்

# ஹரியானா

### பர்வாலா: பாபுபாய் & சரஸ்வதி

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் கூறப்பட்டுள்ளது. சானியானா பகுதியில் ஆலயம் கட்டுவதற்கேற்றவாறு ஒரு நிலப்பகுதி ஆயத்தமாக இருக்கிறது. கய்பீபூர் கிராம பூலிபேனைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்துள்ளார். கய்பீபூர் கிராம ராஜுபாயைத் தீராத தலை வலியிலிருந்து ஜெபத்தின் வாயிலாக தேவன் விடுவித்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** அகலிபேனின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; தீய ஆவியின் பிடியிலிருந்து லலிதாபேன் மீட்கப்பட; பின்மாற்றமடைந்துள்ள நமது விசுவாசிகளான சுபாஷ் மற்றும் பப்லிபாய் மீண்டும் கிருபையாய்த் தங்களது விசுவாச வாழ்வைத் தொடர; ஷாடி, சானியானா, சாமர்கேடா, புகனா மற்றும் படாத் கிராமங்களில் சுவிசேஷத்திற்குத் திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

### கலான்வாலி:
### விஜயகுமார் & ஜெபலா

**துதிக்க:** இயேசுவின் அன்பை அறிந்து கொள்ளும்படி நாடகம், குறுநாடகம் மற்றும் ஒலி, ஒளி காட்சிகள் மூலம் சுவிசேஷ நற்செய்தியை ஏறத்தாழ 500 பேருக்கு அறிவிக்க தேவன் கிருபை பாராட்டியுள்ளார். பின்மாற்றமடைந்திருந்த நமது விசுவாசிகளான பிம்லா குடும்பம் மற்றும் ஜக்ஜித் சிங் காலனியைச் சார்ந்த குல்விந்தர் மீண்டும் நமது ஆராதனைக்கு வரத் தொடங்கியுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதிதாக சுவிசேஷத்தைக் கேட்டறிந்திருக்கும் நபர்கள் இயேசுகிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள; கலான்வாலி கிராம ரீனாவை மார்பகக் கட்டியிலிருந்தும், மோதிராமைச் சிறுநீரகக் கட்டியிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; தபுவாலி கிராம மஸ்கானைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க; குர்திட்டா சிங்கின் குடும்பத்தில் தேவன் சமாதானம் அருள ஜெபிப்போம்.

### ஹரியானா பிராந்தியம்:
### பிபாபா பானி & பித்திகா

**துதிக்க:** ரணியா துணைமையத்திலுள்ள நமது சுதேச ஊழியரான நவ்ஜோத்திற்கு தேவன் குழந்தை பாக்கியத்தைத் தந்துள்ளார். ஃபத்தேஹ்பாத் பணித்தளத்திலுள்ள அசோக் நகர் ஆலயத்தின் கூரை அமைக்கும் பணி சிறப்பாக முடிவடைய தேவன் காண்பித்துள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஓட் ராஜ்புத், ராய்சீக், பால்முகி மற்றும் நய் இனமக்களின் மத்தியில் ஆவிக்குரிய எழுப்புதல் உண்டாக; இம்மக்களின சமுதாயத்தில் சமூக பழக்கவழக்கங்கள் மற்றும் கல்வி முறைகளில் நல்மாற்றங்கள் பிறக்க; மந்திரக்கட்டுகளிலிருக்கும் இந்த ஜனங்கள் விடுவிக்கப்பட்டு, விசுவாச வாழ்விற்குள் வர; எதிர்ப்புகளின் மத்தியில் நமது கிச்சா பணித்தள விசுவாசிகள் விசுவாசத்தில் உறுதியாக நிற்கவும், டோரேடாம் பகுதி ஆலயக்கட்டுமானப்பணி சுமூகமாக நிறைவடையவும்; ஓட் மற்றும் ரஜோந்த் பகுதிகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஆலயக் கட்டுமானப்பணியும், கெபிபூர் மற்றும் மத்தானா ஆலயங்களின் சுற்றுச்சுவர் கட்டுமானப்பணியும் நிறைவடைய; சாகு சானியன், அபூப் சாகர், புகுனா மற்றும் குசும்பி கிராமங்களில் ஆலயங்கள் கட்டத் தகுந்த நிலங்கள் கிடைக்க ஜெபிப்போம்.

## 4
## பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜெபக்குமார் பெரியசாமி

### தோஷம்:
### ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

**துதிக்க:** புதிதாக 6 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். தயா, போஜ்ராஜ், பைரன் ஆகிய கிராம மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க ஆரம்பித்துள்ளனர். நமது சபை மூப்பர்களான பலவாஸ் கிராம சுபாஷ், பைரன் கிராம பவன், போஜ்ராஜ் கிராம கலா ஆகியோர் திருச்சபைச் செயல்பாடுகளில் மிகத் தீவிர மாக ஈடுபடுகின்றனர். சுங்கர்பூர் மற்றும் பஞ்சக்கோரா கிராமங்களில் தேவன் நமக்குப் புதிய தொடர்பாளர்களை ஊழியத்தில் கொடுத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பலவாஸ் கிராம ராஜ்பால் குடிப் பழக்கத்திலிருந்து விடுபட; ஜிந்த் திருச் சபையினர் மத்தியில் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; கோவிந்த் சிங்கை மூலப்பிரச்சனை யிலிருந்தும், தூப் சிங்கை நெஞ்சு சளித் தொல்லையிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; பலவாஸ் கிராம பூலுதேவியைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவிக்க ஜெபிப்போம்.

## உத்தராகண்ட்
### கிச்சா:
### தாங்வாங்சாங் & சிங்கான்மாவி

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் இயேசுவின் அன்பு நற்செய்தியாகப் பகரப்பட்டுள்ளது. வாலிபர் மற்றும் சிறுவர் முகாம்கள் சிறந்த முறையில் நடந்து முடிய கர்த்தர் உதவி செய்துள்ளார். நமது ஊழியத்தின் மூலம் மேலும் இரண்டு புதிய தொடர்பாளர்கள் நமக்குக் கிடைத்துள்ளனர். பரம்ஜீத்தைப் பொல்லாத ஆவியின் பிடியிலிருந்து கர்த்தர் விடுவித்துள்ளார். நமது விசுவாசி அத்தார் சிங்கின் வாழ்வாதார தேவைகளைச் சந்திக்கும் பொருட்டு அவருக்கு நல்லதொரு வேலையை தேவன் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கல்லீரல் நோய்த்தொற்றிலிருந்து குர்மெஜ் கௌர் சுகம் பெற; நமது விசுவாசி சூரன்சிங்கிற்கு நல்லதொரு வேலை கிடைக்க; சராஃப் ஜீத்திற்கு மழலை பாக்கியம் கிடைக்க; வரும்நாட்களில் நடக்கவிருக்கும் முக்கிய மான தலைவர்கள் கூடுகையை தேவன் ஆசீர்வதித்துத் தர; எதிர்ப்புகளின் மத்தியில் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் மேலும் வலுப்பெற ஜெபிப்போம்.

### தினேஷ்பூர்: ராமசாமி ஜெரோம் & அந்தோணி ராஜம்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. ராஜா காலனியில் ஆவிக்குரிய கூட்டமொன்று நடத்த தேவன் கிருபை செய்துள்ளார். தேஜா ஃபௌஜா பகுதி நிஷாவின் குடும்பப் பிரச்சனை நீங்கி அவர் தனது கணவருடன் இணைந்துள்ளார். திம்ரி பிளாக் பகுதி மோரிராம் கண் பிரச்சனை யிலிருந்தும், பல்ஜீத் சிறுநீரகப் பிரச்சனை யிலிருந்தும், நய்பஸ்தி கிராம சோமா இரத்தச் சோகை நோயிலிருந்தும் சுகம் பெற்றுள் ளனர். முகத்பூர்தேரா கிராம குர்பிரீத்தின் குடும்பத்தில் தேவன் குழந்தை பாக்கியத்தை அருளியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேஜா ஃபௌஜா கிராம கிரணின் குடும்பத்தில் தெய்வீக சமாதானம் பிறக்க; தேஜா ஃபௌஜா கிராம சுனிதாவிற்குச் சுகப்பிரசவம் நேரிட; நமது புதிய தொடர் பாளர்களான தய்னும்பர், குந்திதேவி, பவன் மற்றும் ஆமானிற்கு தகுந்ததோர் வேலை வாய்ப்புகள் கிடைக்க; சய்தலிகன்ஜ் கிராம மக்தயால் சிங் குடிப்பழக்கத்திலிருந்து விடுபட; உஜைன் என்பவர் இரட்சிக்கப்பட; பின்மாற்றமடைந்திருக்கும் நமது விசுவாசியான தவுலத்கன்ஜ் கிராம சோனு மீண்டும் கிருபையாய் விசுவாசத்தைப் பெற்றுக்கொள்ள ஜெபிப்போம்.

## 5
## பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. அற்புதம் செல்வி விஜய்
திரு. தெய்வநாயகம் சாமுவேல்
திருமதி. அனுகாமி எக்கா ஜஹர் சாய்
திரு. வெங்கட பிரவீன் குமார்

### நானக்மட்டா:
**சிவகுமார் & சுசிலா மராக்**

**துதிக்க:** புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தியாரி கிராமத்திலிருந்து 3 குடும்பங்கள் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றனர். தியாரி கிராம அவினாஷ் மற்றும் கல்யாண்பூர் கிராம பாதம் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து தேவனால் விடுதலை பெற்றுள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சிலாம் நகர் வீர்சிங் மது அருந்தும் பழக்கத்திலிருந்து வெளிவர; சத்வீர் சிங்கை நெடுநாட்களாக இருக்கும் சர்க்கரை வியாதியிலிருந்தும், ரத்தன்ஃபாரம் கிராம விமலா கர்ரியைத் தீராத சளித்தொல்லையிலிருந்தும் தேவன் சுகமாக்க; தியாரி கிராம சுகிந்தர் கர்ரிக்குச் சுகப்பிரசவம் சம்பவிக்க ஜெபிப்போம்.

### மல்தன்சோர்:
**ஷிஷு பால் & அனிதா**

**துதிக்க:** 3 கிராமங்களில் முதன் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பத்ராம்பூரில் ஞாயிறு ஆராதனை தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. தாரி கிராமத்து ஆலய நிலம் அரசாங்க விதிப்படி பதிவு செய்யப்பட்டுள்ளது. போகிஸ்பூர்தம் கிராமத்தில் ஆலயக்கட்டுமானப்பணி நிறைவடைந்து பிரதிஷ்டைக்கு ஆயத்தமாயுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழிய விரிவாக்கத்திற்காகப் புதியதோர் சுதேச ஊழியர் இப்பணித்தளத்தில் பணியமர்த்தப்பட; வாய்ப்பேச இயலாமையிலிருந்து பான்ஷ் அற்புத சுகம் பெற; நமது இளம் விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

## ராஜஸ்தான்

### ஸ்ரீ கங்காநகர்:
**V. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச்செல்வி**

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 3 NM கிராமத்தில் வைத்து நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தையும், புதிய தொடர்பாளர்களுக்கான சந்திப்புக் கூடுகையையும் தேவன் ஆசீர்வதித்துத் தந்துள்ளார். மஜீவாலா பகுதியைச் சார்ந்த நமது புதிய விசுவாசி ஜஷ்வந்த் தனது சாட்சியைத் தனக்கு அருகாமையில் வசிப்போருடன் பகர்ந்து கொண்டு, அநேகரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தி வருகிறமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** SSB காலனியைச் சேர்ந்த நமது புதிய விசுவாசி சாஜன், ரேனுகா கிராம அங்குராஜ், எத்திராம், ரூபாராம் ஆகியோரின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகளான 20 Z கிராம மன்தீப்பிற்கும், மட்டிலிரத்தன் ஃபானி கிராம ஷைலஜாவிற்கும் நல்ல வேலை வாய்ப்புகள் கிடைக்க ஜெபிப்போம்.

# 6 பிப்ரவரி
ஞாயிறு

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. பெட்ரீசியா தமிழ் செல்வி குமார்
திரு. ஹமோம் நாபா சிங்

## பாவோட்டா: சத்திய பிரகாஷ் & அஞ்சனா மஸிஹ்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகளும், வீடு சந்திப்புக் கூடுகைகளும் நமது விசுவாசிகள் கிறிஸ்துவில் மேலும் வளர பெரும் உதவியாக இருக்கின்றன. கோட்புத்லி கிராம ராஜேந்திரா ஜெபத்தின் மூலம் காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளப் பகுதிகளில் மிக மும்முரமாகச் செயல்படும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; புஜிதா காலனி ராஜ்வாலா மற்றும் மான்புரா கிராம கரணைத் தீய ஆவிகளின் பிடிகளிலிருந்து கர்த்தர் விடுவிக்க; சானாலி கிராம சுமித்ராவை தேவன் புற்றுநோயிலிருந்து பூரண குண மடையச் செய்ய ஜெபிப்போம்.

## அனுப்கார்: போடார் அம்ருத் பாய் & சுவேரா மார்த்தா

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவை அறிகிற அறிவிற்குள் வந்துள்ளார். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. 2 PGM மற்றும் 36 GB பகுதிகளில் நடந்த புதுவருட ஆராதனையை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். மன்பிரீத்தைக் கால் வலியிலிருந்தும் பாபுவைத் தீராத இருமல் சளிப்பிரச்சனையிலிருந்தும் தேவன் குண மாக்கியுள்ளார். நமது விசுவாசி சிநேகாவின் திருமணத்தைக் கிறிஸ்தவ முறையில் நடத்தி முடிக்க தேவன் கிருபை செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சக்கி, சமேஜாகோதி, கொக்கரவாலி, 43 GB மற்றும் விஜய்நகர் பகுதிகளில் நடக்கப்போகும் சத்சங் நிகழ்ச்சிகளையும், தண்டூர், 4 LSM, 1 USS, 34 HED பகுதிகளில் நடக்கவிருக்கும் இரவுநேர ஜெபக்கூடுகைகளையும் தேவன் அபரிமித மாக ஆசீர்வதித்துத் தர; குடிப்பழக்கத்தி லிருந்து தேவன் நிக்கா சிங்கை மனந் திரும்பச் செய்ய; எல்லாக் கிராமங்களிலும் ஜெபக்குழுக்கள் துவங்கப்பட; மன்பிரீத் தின் குடும்பம் இரட்சிப்படைய ஜெபிப்போம்.

# உத்தரப் பிரதேசம்

## காட்டம்பூர்: ஜங்கோலுன் தௌதாங் & தியான்சிங் ஹௌசல்

**துதிக்க:** புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் கூறப்பட்டுள்ளன. நமது விசுவாசிகள் தங்களது ஆலயப் பராமரிப்பிற்கும், இதர ஊழிய நிகழ்ச்சிகளுக்கும் ஆகும் செலவைத் தாங்களாகவே சொந்தமாக சந்திக்கின்றனர். சுனிதா, ஆர்த்தி, ரோஷினி, பிரியங்கா, மகிமா ஆகியோர் தன்னார்வமாக நமது ஊழியங்களில் தங்களது பங்களிப்பைச் சிறந்த முறையில் செயலாற்றுகின்றனர். பல்வேறு நோய்களிலிருந்து தேவன் சுமித்தாவையும் சுவாதியையும் சுகமாக்கி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய தொடர்பாளர்கள் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் தைரியமாக அறிக்கை செய்ய முன்வர; நமது சுதேச ஊழியர்களுக்கு வரும் ஊழிய இடமாற்றம் சுமூகமான முறையில் நடந்தேற; நமது சர்சால் திருச்சபையின் சுதேச ஊழியருடைய வீட்டின் சீரமைப்புப் பணிக்கான நிதித்தேவைகள் யாவும் சந்திக்கப்பட; பலவித வியாதிகளினால் கஷ்டப்படும் நமது புதிய தொடர்பாளர்கள் மற்றும் விசுவாசிகள் யாவரும் பூரண சுகம் பெற ஜெபிப்போம்.

## 7
## பிப்ரவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. துரைசாமி K. ஃபிரான்சிஸ்
திரு. பிரசாந்த் மீசாலா
திருமதி. பத்மாவதி நாராயண நாயக்
திருமதி. தனபுஷ்பம் அருள்ராஜ்
செல்வி. ஹெலன் மரியம் R.

### புந்தேல்கண்ட் பிராந்தியம்:
**N. ராஜதுரை & பிரேமா**

**துதிக்க:** சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கான 3 நாட்கள் பயிற்சிக் கூடுகையில் அவர்களுக்கு நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியக் கோட்பாடுகளும், நெறிமுறைகளும் ஜெபத்துடன் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. 4 வருடங்களாக ஸ்தம்பித்திருந்த நமது சிவானி திருச்சபையின் ஆலயச்சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி தற்போது துவங்கப் பட்டுள்ளது. நமது பிரேம்நகர் ஆலயக் கட்டுமானப்பணி இனிதே தொடங்கப்படவும், அதன் பதிவேட்டில் பெயர் மாற்றும் வேலை வெற்றியாக முடியவும் தேவன் கிருபை செய்துள்ளார். நமது இளவயது விசுவாசிகள் தங்களது வாழ்க்கை துணைகளைக் கிறிஸ்தவப் பின்னணியில் தேடத் தொடங்கி யுள்ளனர். தப்ரா பணித்தளத்தில் இம்மாதம் ஜீப்குழு ஊழியம் செய்து முடிக்க தேவன் உதவி பாராட்டியுள்ளார். ஒரிசாவிலிருந்து மேலும் ஓர் தன்னார்வ ஊழியர் ராஜேஷ் நமது ஜீப் குழுவில் இணைய தேவன் காண்பித்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஜான்சி, பிந்த் மற்றும் சிந்த் வாரா விடுதி சிறுவர் சிறுமியர் தங்களது தேர்வுகளை நல்ல முறையில் எழுதவும், தேவன் அவர்களை அனைத்து தீங்கினின்றும் பாதுகாத்து இரட்சிக்கவும்; நமது மோத் பணித்தள சுதேச ஊழியரான பாலாதீனிற்கு ஏற்பட்ட விபத்தினால் உண்டாகியிருக்கும் கையெலும்பு முறிவில் தேவன் பூரண சுகமளிக்க; பல்வேறு இடங்களில் நடக்கும் நமது ஊழியத்தின் சிறந்த பலனாக விசுவாசிகளின் தரம் மற்றும் எண்ணிக்கை உயர; நமது ஜான்சி சிறுவர் விடுதிக்கான நிலத்திட்டத்திற்குரிய அரசாங்க அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

### கைம்கஞ்ச்:
**எபநேசர் G. சாம் & ஜெபராணி**

**துதிக்க:** புதிதாக ஒரு நபர் கிறிஸ்துவண்டை விசுவாசத்துடன் வந்துள்ளார். பின்மாற்ற மடைந்திருந்த ராமாபூர் தபீர் கிராம நமது இரு விசுவாசிகள் கிறிஸ்தவ விசுவாசத் திற்குள் மீண்டும் வர தேவன் அநுகூலம் காண்பித்துள்ளார். பிரித்வி தர்வாஜா பகுதி நமது விசுவாசி ராணி தனக்கு அருகாமையில் வசிப்போரினால் உண்டான அநேக தடைகளின் மத்தியிலும் தனது வீடு கட்டுமானப்பணியை நல்லமுறையில் நிறைவுச் செய்திட தேவன் ஒத்தாசை காண்பித்துள்ளார். கடியா ஜகனாத் கிராம ஊர்மிளா மனோஜை தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் காப்பாற்றியுள்ளார். துடிரா கிராம நமது விசுவாசி மம்தாவிற்கு தேவன் அருமையான மழலை செல்வத் தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் தனது பச்சிளங் குழந்தையை இழந்து தவிக்கும் நமது கம்பிள் பகுதி விசுவாசி பூலான்தேவியின் மனஆறுதலுக்காக; ஏற்கனவே மூன்று முறை கருச்சிதைவு ஏற்பட்டு துயரத்தி லிருக்கும் நமது ஃபத்தேகாட் கிராம ரோஷினிக்கு பூரண வளர்ச்சியுள்ள குழந்தை செல்வம் இவ்வருடத்தில் கிடைக்க; கய்லா கிராம நமது புதிய தொடர்பாளர் சஞ்ஜீவிற்குப் பக்கவாதத்திலிருந்தும், பய்தான் கிராம ஃபூல்மதிக்கு வயிற்றுப் புற்றுநோயிலிருந்தும் முழுமையான அற்புத சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

# 8
# பிப்ரவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சிபி செல்வின் சாம்
திருமதி. கவித் சுனிதாபேன் ரஷ்யாபாய்
திருமதி. ரேகா சாம்பியா

## மத்தியப் பிரதேசம்

### தார்: கருணாகர் கர்டா & கீதாஞ்சலி பெஹெரா

**துதிக்க:** புதிதாக 13 நபர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்ச கராக ஏற்றுக்கொண்டுள்ளனர். தங்களது தொழிலினிமித்தம் குஜராத்திற்குப் புலம் பெயர்ந்து சென்றபோது, தங்களோடு பணிபுரிந்து வந்த ஒரு உடன் பணியாளரின் குறும்புத்தனத்தினால் மொத்தமாக வீட்டுக்காவலில் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த நமது ககர்தா கிராம விசுவாசிகள் யாவரும் ஜெபத்தின் மூலம் விடுவிக்கப்பட தேவன் தயவு காண்பித்துள்ளார். துந்திபாட்லி கிராமத்தில் புதிதாக ஓர் ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிலாலா சமுதாயத்தைச் சார்ந்த அனில் வாஸ்கிலி தன்னார்வ ஊழியராக நமது ஊழியத்தில் இணைந்துள்ளார். தொலைந்துபோன 4 வயது சிறுமி ஜெபத்தின் மூலம் மீண்டும் கிடைக்கப் பெற்றுள்ளாள். ககர்தா கிராம ஜஷ்மாபாயை தேவன் தீய ஆவியின் அலைக்கழிப்பிலிருந்து கிருபையாக விடுவித்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தைக் கடுமையாக எதிர்ப்போரின் மத்தியிலிருந்து தேவன் நமது விசுவாசிகளைப் பாதுகாக்க; வெளிப்புற சந்திப்பு ஊழியம் செய்ய ஏதுவாகயிருக்கும் மனவார் பகுதியில் சுவிசேஷத்திற்கான திறந்தவாசல் உருவாக; இண்டூர் மற்றும் பாக்டி பகுதிகளில் ஜெபக்கூட்டங்கள் கிரம மாக நடைபெற; தார் பணித்தளப் பகுதி களில் ஜெபத்திற்கும், ஆராதனைக்கும் மக்கள் கூடுவதற்கான ஏற்றச் சூழ்நிலைகள் அமைய ஜெபிப்போம்.

### கண்ட்வா பிராந்தியம்:
### ஐசக் & சீதா

**துதிக்க:** நமது கண்ட்வா விடுதி தேவ நாம மகிமைக்கென பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது. அதுபோல நமது பசாலி கிராம ஆலயக்கட்டுமானப்பணியும் முடிவுற்று, அதற்குப் பணஉதவி செய்து தாங்கினோரின் முன்னிலையிலேயே அவ்வாலயம் பிரதிஷ்டை செய்யப்படவும் தேவன் ஒத்தாசை காண்பித்துள்ளார். ஜம்கியைக் கழுத்துக்கட்டியிலிருந்தும், லோகேஷ்பாயை இரத்த வாந்தியிலிருந்தும், போருத் கிராம சுனிதாபாயை மலேரியா காய்ச்சலிலிருந்தும் தேவன் அற்புத மாகச் சுகப்படுத்தியுள்ளார். கிட்கி கிராம நமது விசுவாசி ரதியார் தனது மகளின் திருமணத்தைக் கிறிஸ்தவ முறையில் நடத்தி முடிக்க தேவன் பாராட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பெண்கள் மற்றும் வாலிபர் களுக்கான ஜெபக்குழுக்கள் எந்தத் தடையுமின்றி தொடர்ந்து நடைபெற; நமது விசுவாசி கருணாகரின் குடும்பத்திற்கு எதிராக நடந்து கொண்டிருக்கும் நீதிமன்ற வழக்கில் நற்தீர்வு கிடைக்க; சாரதாவிற்குச் சிறுநீர் குழாயில் ஏற்பட்டிருக்கும் நோய்த் தொற்றிலிருந்தும், ஷலோனிக்கு விபத்தி னால் உண்டான தலைக்காயத்தி லிருந்தும், பலசியா கிராம சாம்நாத்திற்கு காசநோயிலிருந்தும் முழுசுகம் கிடைக்க; நமது விசுவாசி ரமேஷின் குடும்பத்தில் ஆசீர்வாதமான மழலை செல்வம் பிறக்க; தனது கணவனை இழந்து இரு சிறு குழந்தைகளுடன் தவிக்கும் சுனதாவின் வாழ்வாதார தேவைகள் பூர்த்தி செய்யப்பட ஜெபிப்போம்.

## 9 பிப்ரவரி
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. ஜெசிந்த் ஜோவன்னா ராமமுனி பிரசாத்
திருமதி. தீனா குமாரி பெபர்தா ஆஷாபிராப்தா
திருமதி. துர்கா தேவி @ ரூத் மேரி சங்கர் A.

### நேப்பாநகர்:
**ஜூபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. நமது மனோஜ் டாக்கீஸ் திருச்சபை ஆராதனையில் புதிதாக மங்கிலாலின் குடும்பம் பங்கேற்கின்றனர். எதிர்பாராத விதமாக ஏற்பட்ட சோனர்பாயின் இருசக்கர வாகன விபத்தினால் கால்முறிந்து போன ஆட்டின் கால்கள் ஜெபத்தினால் தற்போது வலுப்பெற்றுள்ளன. மந்திர பில்லிசூனியத்தினால் தனது வீட்டின் சுவர் முழுவதும் நச்சு வண்டுகளினால் சூழப்பட்டிருந்த நமது மஞ்ஜ்ரோத் கிராம விசுவாசி லதாபாயிற்கு ஜெபத்திற்குப்பின் அவ்வண்டுகளனைத்தும் பறந்தோடும்படி தேவன் அற்புதக் கிரியை நடப்பித்துள்ளார். திருமணமாகி அநேக வருடங்களுக்குப்பின் நமது விசுவாசி கமலாபாயிற்கு இப்போது புத்திர பாக்கியம் கிடைத்துள்ளது. கிறிஸ்தவ விசுவாசத்திற்குப் புறம்பாக அவதூறு கிளப்பப்படும் சூழ்நிலைகளின் மத்தியிலும் நமது நேப்பாநகர் ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்து வருகிறார். துகய்தாட் கிராம பவார்சிங் மற்றும் பம்லாபாத் கிராம கெந்த லால் நமது ஆலயக்கட்டுமானத்திற்குத் தங்களது நிலங்களை நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் பாதுகாப்பிற்காக; கள்ளப்போதனைகளினால் அடிக்கடி வழிதவறும் நமது விசுவாசிகளான துகய்தாட் கிராம ரமேஷ் பாபா, ஹய்ரபாடா கிராம ஞானபாய் மற்றும் பத்னாபூர் கிராம தர்பார்பாயிற்கு தேவன் வேதத்தைக் குறித்த திட ஞானம் தர; பின்மாற்றமடைந்திருக்கும் நமது செயின்புரா விசுவாசிகளான தல்சிங் மற்றும் பானுபாய், பட்டேல்தானா கிராம சங்கர் மற்றும் முனிபாய் மீண்டும் தேவனை விசுவாசிக்கத் தொடங்க; குடிப்பழக்கத் தினால் தனது மனைவியைத் துன்புறுத்தும் நமது விசுவாசி ராஜம் என்பவரின் கணவர் விசான்பாய் மனந்திரும்ப; விக்ரம் மற்றும் பீம்சிங்கின் குடும்பங்கள் மழலை செல்வங்களினால் ஆசீர்வதிக்கப்பட; நமது ஊழியங்களைப் பலவிதங்களில் தடை பண்ணும் சௌண்ட் கிராம தூம்சிங் மனம் மாற ஜெபிப்போம்.

### நிவாலி:
**சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி**

**துதிக்க:** புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மன்சூர் பகுதியில் நடைபெற்ற இயேசு திரைப்பட ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். டுங்கர்கான், திவான்யா, சாமன்யா, புதகான், மொகரீகா, கான்புரி ஆகிய கிராமங்களில் நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் அநேகர் முதல்முறையாக கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள தேவன் காட்டியுள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கம்பானி, பிச்சோடி, வங்கத் ஆகிய பகுதிகளில் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கும் நமது புதிய தொடர்பாளர்களின் ஆவிக் குரிய வளர்ச்சிக்காக; கொடில்யாபானி திருச்சபையினருக்கு நல்ல ஆலயமொன்று கட்டப்பட; சட்டாலி கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்குத் தகுந்த நிலமொன்று கிடைக்க ஜெபிப்போம்.

## 10 பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. சாலமோன் A.

### டப்ரா:
**சத்திகந்த் பரிச்சா & சகரிகா**

**துதிக்க:** 5 கிராம மக்களுக்கு முதன் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. பண்டிகை ஆசரிப்புக் காலங்களில் வந்த எதிர்ப்புகள், தடைகள் யாவையும் நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தால் மேற்கொள்ள தேவன் கிருபை பாராட்டியுள்ளார். நமது கித்தோண்டா திருச்சபை மூப்பர்கள் ஜெபத்தின் மூலம் ஒருவருக்கொருவர் ஒப்புரவாகி, ஆராதனையில் ஒன்றாக பங்குப்பெற தேவன் தயவு காண்பித் துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது அனைத்து திருச்சபை களிலும் ஆலய மூப்பர்களுக்கான விதிமுறைகள் உருவாக்கப்பட்டுச் செயலாக்கப்பட; நமது மில்கான் மற்றும் மெகாவ் பகுதி ஆராதனைக்குழுக்கள் விரைவில் திருச்சபைகளாக உருவாக; காரியாவதி கிராம ஜெகதீஷ் இரட்சிக்கப்பட; பிரேம் நகரைச் சார்ந்த நமது முந்தைய சுதேச ஊழியரும், பின்மாற்றமடைந் திருக்கும் விசுவாசிகளும் நமது ஊழியத் திற்குப் பாதகமாய்ச் செயல்படாமலிருக்க; அநேகரைக் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்கு உட்படுத்தும் பொருட்டு, தேவன் நமது தன்னார்வ ஊழியர் அத்தார் சிங்கையும் சுதேச ஊழியர் முக்கேஷ் குமாரையும் வல்லமையாய் எடுத்துப் பயன்படுத்த ஜெபிப்போம்.

## பீஹார்
### அரரியா: ஆனந்தன்

**துதிக்க:** பய்ஜ்னாத்பூர், தோனா, பெக்பார், புலுக்கா மற்றும் ரங்தகா கிராமங்களில் நடந்து முடிந்துள்ள ஊழியப் பின் தொடர்பணிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். பெக்பார் கிராம சஞ்ஜன் குமாரியைத் தீய ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ரங்தகா கிராமத்தில் ஆராதனை மையமொன்று அமைக்கப்பட; ஜெபத்தின் வாயிலாக பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட புலுக்கா கிராம மித்லேஷ் இரட்சிக்கப்பட; பெக்பார் கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறியளவிலான ஆராதனைக்குழுவொன்று தொடர்ந்து நடைபெற; பெஜ்னாத்பூர் கிராம நமது விசுவாசி ரீனா குமாரிக்கு நல்ல வாழ்க்கை துணையமைய ஜெபிப்போம்.

### சாட்டாபூர்: பவார் தினேஷ்பாய் & பாருட் சீலாபாய்

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துள்ளனர். புதிதாக 2 கிராமங்களுக்குச் சுவிசேஷம் சென்றடைந்துள்ளது. நமது ஆராதனை யில் ஏராளமான மக்கள் பங்கேற்கக் கர்த்தர் கிரியை செய்து வருகிறார். ரத்தன்புரா கிராம திருக்குமார் கிறிஸ்து வுக்குள் தனது விசுவாசத்தைத் தைரியமாக அறிக்கை செய்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** திரிவேணிகன்ஜ் பிளாக், பிப்ரா பிளாக் மற்றும் சுபால் மாவட்டத்தில் நமது ஊழியத்திற்கு அதிக எதிர்ப்புகள் இருப்ப தினால், அங்குள்ள நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தில் உறுதியாய் நிற்கக் கர்த்தர் தயவு பாராட்ட ஜெபிப்போம்.

## 11
## பிப்ரவரி
வெள்ளி

பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திரு. பினெயகுமார் குரு

### கிழக்கு கங்கை பிராந்தியம்:
**பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்**

**துதிக்க:** ராணிகன்ஜ் பணித்தளத்தைச் சார்ந்த கோபால்பூர் கிராமம் மற்றும் சாகர்சா பணித்தளத்தைச் சார்ந்த பெஜ்னாத்பூர், மகிஷி ஆகிய கிராமங்களில் புதிய ஆராதனைக்குழுக்கள் துவங்கப் பட்டுள்ளன. முரளிகன்ஜ் கிராம நமது விசுவாசிகளான பிரமோத், சந்தோஷ், பஸ்தேவ்தாஸ், லாலன் மகத்தோ, ஹரிமஸ் தானா, பாரதி ஆகியோர் நமது ஊழியத்தில் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர். சாகர்சா பணித்தள சக்தி நாராயணனை மரணப் படுக்கையிலிருந்து தேவன் காப்பாற்றி யதினால், அவரது முழுக்குடும்பமும் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருப்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ராணிகன்ஜ் பணித்தள பிபின்சதா, சதானந்த் சதா, புத்தா, கைலாஷ் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்து மீள; நமது ஊழியத்தைக் குறித்து தவறாகப் பேசும் வித்தியநாத் பஸ்வான் மனந்தி ரும்ப; நடக்க இயலாமல் இருக்கும் சோனம் குமாரியையும், மனநோயினால் அவதிப்படும் மாதுர் ராயையும் தேவன் அற்புதமாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## ஜார்க்கண்ட்

### தம்னி :
**ஜாண் பால் ஹாரிஸ் & விமலா டெய்சி**

**துதிக்க:** 2 இடங்களில் நடைபெற்ற விடுமுறை வேதாகமப்பள்ளி ஊழியத்தில் 60-க்கும் அதிகமான சிறு பிள்ளைகள் கலந்துகொண்டு தேவாசீர்வாதம் பெற்றுள்ளனர். பகிலாகுடியா மற்றும் லெங்கதாகுடா கிராமங்களில் இருந்து 7 நபர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிடக் காத்திருக்கின்றனர். விசுவாசத்தில் பின்மாற்றமடைந்திருந்த பிடோயின் கிராம நமது விசுவாசி ஜோகன் மால்தோ மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளார். குந்திகுடா கிராம மமிதா மால்தோவை வலிப்பு நோயிலிருந்தும், தண்டிகுடியா கிராம பர்னபாஸ் மால்தோ வைக் கால் வீக்கத்திலிருந்தும், பட்பஹாடி குருசேகரத்தைச் சார்ந்த நமது சுதேச ஊழியர் திரு. காபிரியேல் மால்தோவின் மகள் மார்த்தா மால்தோவைத் திடீரென ஏற்பட்ட நோயிலிருந்தும் தேவன் சுகப் படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளைத் தொந்தரவு செய்யும் தாதாஜிபிட்டா கிராம சுசி மீசா மனந்திரும்ப; நமது புதிய விசுவாசியான கமாலியேல் மால்தோவை எதிர்க்கும் அவருடைய சொந்த கிராமத்தினரான பகிலாகுடியா மக்கள் மற்றும் பிறரை கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள விடாதவாறு தடைசெய்யும் தண்டிகுடியா கிராம பரமேஷ்வர் மால்தோ ஆகியோர் மனந் திரும்ப; கடிமாக்கோ கிராம ஆபிரகாம் மால்தோ மற்றும் குட்டமு கிராம மத்தியாஸ் மால்தோ குடிப்பழக்கத்திலிருந்து வெளிவர; அடிக்கடி வரும் வலிப்பு நோயினால் அவதிப்படும் டோனிகுடா கிராம யாகுப் மால்தோ முழுசுகம் பெற; பின்மாற்ற மடைந்திருக்கும் நமது விசுவாசிகளான லீலா தோனி கிராம பர்னபாஸ், தும்ரி கெபு கிராம மார்கஸ், டோனிகுடா கிராம தேவதாஸ், கெருகுடியா கிராம மார்கஸ் மற்றும் தண்டிகுடியா கிராம ஜோயல் மீண்டும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

12
பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. ஜீவரத்ன பீரோ
திரு. ரோஞ்ஜய் நர்சாரி

### ராம்கார்:
### செந்தில் குமார் தீமோத்தேயு & முத்துச்செல்வி

**துதிக்க:** புதிதாக கிறிஸ்துவுக்குள் தங்களது விசுவாசத்தை அறிக்கை செய்ய 10 நபர்களுக்கு தேவன் கிருபை செய்துள்ளார். 2 நாட்களாக நடைபெற்ற உபவாச ஜெபக்கூடுகையை தேவன் நமது அநேக விசுவாசிகளுக்கு ஆசீர்வாதமாக மாற்றித் தந்துள்ளார். பத்ரியா குருசேகரத்தில் வைத்து நடைபெற்ற நட்சத்திர மேளாவை தேவன் ஏராளமானோருக்கு அதிக ஆசீர்வாதமாக்கித் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபை மூப்பர்கள் தங்களது சபைகளைத் தாங்களே முன்நின்று நடத்த; மனநோயிலிருந்து சுரேந்தர் பெஸ்ராவும் ரூபிலாலும் முழுசுகம் பெற; பிராந்திய அளவில் நடத்தவிருக்கும் ஆவிக்குரிய கூட்டங்களின் ஆசீர்வாதத்திற்காக; நமது விசுவாசிகளுக்கு விரோதமாக மந்திரங்களை உபயோகிக்கும் பிந்தர்கரியா கிராம சிபா டுடு, ஜாம்கந்தர் கிராம பாபுராம் சோரேன், டங்கா கிராம சானிராம் பஸ்கி, லொடா முர்மு மற்றும் பகத்பூர் கிராம ஜத்தாரியின் இரட்சிப்பிற்காக; பொக்வா சபை விசுவாசிகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக ஜெபிப்போம்.

### சந்தால் சீஷத்துவப்பயிற்சி ஊழியம் – சோட்டாகக்கிரி:
### சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

**துதிக்க:** மிகுந்த குளிர் நிறைந்த காலச்சூழ்நிலைகளிலும் அனைத்து நமது ஊழிய நிகழ்ச்சிகளையும் நல்ல முறையில் நடத்தி முடிக்க தேவன் ஒத்தாசை காண்பித்துள்ளார். திரு. ஜார்ஜ் என்பவர் அளித்த நன்கொடையைக் கொண்டு தெலோ பணித்தள சிறுவர்களுக்கு தேவன் நல்ல தரமான உடைகளைத் தந்துள்ளார். நமது விசுவாசிகள் தங்களது நெற்பயிர் நிலங்களில் நல்ல அறுவடையைப் பெற்றுக்கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். சந்தால் மேற்கு வங்காளப் பிராந்தியத்தில் வேதாகம வகுப்புகளும் ஊழியப்பயிற்சி நிகழ்ச்சிகளும் கிரமமாக நடைபெற்று வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லட்கன்ஜு கிராம பவுலுஸ் மராண்டியின் தகப்பனாருடைய மறைவினால் துயரத்தோடிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு மனஆறுதல் கிடைக்க; சுலைமான் மராண்டியின் திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற; சந்தால் இனமக்கள் மத்தியிலிருந்து முழுநேர ஊழியர்களாக வந்துள்ள லுபின் முர்மு மற்றும் சாலோமி ஹன்ஸ்தக்கின் பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட; முதியோர்களுக்கான கல்வித்திட்டம் சிறப்பாக நடைபெற; தாம்தமியா பணித்தளத்தில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சிகள் நடத்தத் தடையாக வரும் காரியங்கள் யாவும் விலக ஜெபிப்போம்.

### *பிசாசுகளும் பரிசுத்தாவியானவரும்!*

*மத்தியப்பிரதேசம், தார் பணித்தளம். இதுவரை இல்லாத அளவில் பரிசுத்த ஆவியானவர் பீல் சமூகத்தினரிடையே பெரிய காரியங்களைச் செய்து வருகிறார். 3 வருடங்களாகத் தன்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்த பிசாசுகளின் பிடிகளிலிருந்து, கொலு என்பவர் அற்புதமான விடுதலையைப் பெற்றார். அதன் விளைவு, நிம்ரானி என்ற கிராமத்தைப் புதிதாக இயேசுவின் நற்செய்தியினால் சந்திக்கவும், அங்கே புதிய ஜெபக்குழுவொன்று ஆரம்பிக்கவும் கர்த்தர் அநுக்கிரகம் ஈந்துள்ளார். கர்த்தருக்கே மகிமை உண்டாகட்டும்!*

## 13
## பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ஸ்டெல்லா பிரபுதாஸ்
திரு. சஞ்சீப் குமார் ஆண்ட்ரப், திருமதி. கம்புங் தாபா சுசாவ்
திருமதி. வயலட் ஹன்ஸ்தா, திரு. பர்னபாஸ் சோரேன்
திருமதி. குர்பிரீத் கௌர் குல்தீப் சிங்

### வனஞ்சால் பிராந்தியம்:
**பாகி சத்தீஷ் & முத்தா ரத்னகுமாரி**

**துதிக்க:** சண்டுபானி பணித்தள முதல் விசுவாசியாகச் சுகிபஹாரி கிராம பூல்குமாரி தேவி கிறிஸ்துவின் மந்தைக்குள் அடியெடுத்து வைத்துள்ளார். நிலத்தகராறினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கோபிசாந்த் பணித்தள பக்கிடிபாரா கிராம ஞாயிறு ஆராதனை மீண்டும் துவங்கப்பட்டுள்ளது. கோபிகந்தர் பணித்தள தாமினிசுவா கிராம முனிராணியை தேவன் தீராத தலைவலியிலிருந்து சுகம் தந்து விடுவித்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிராந்திய சீஷத்துவப்பயிற்சி மையக்கட்டிடத்திற்குச் சுற்றுச்சுவர் கட்டவும், அங்குப் பணியாற்ற நல்லதொரு சமையல் உதவியாளர் கிடைக்கவும்; வரும்நாட்களில் நடக்க இருக்கும் சுதேச ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சிகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுக்க; தலாஹி பகுதியைச் சார்ந்த பாகர்பூர், சிபாகுல், சோனுவாடி மற்றும் மனோகர் சௌக் திருச்சபைகளின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கல்சதா, சாப்டியா, அஸ்னா, கோல்தா மற்றும் கோலி கிராமங்களில் வசிப்போரின் இரட்சிப்பிற்காக; கரோனி பணித்தள பாக்குரியா பகுதியைச் சார்ந்த சௌகேசலா, தொண்டுவா, சுனார் பூஜ் ஆகிய கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; பின்மாற்றமடைந்திருக்கும் லட்பேடா திருச்சபையின் விசுவாசிகளான ஜித்தேந்தர் தெகிரி, ராஜேந்தர் தெகிரி, தர்மேந்தர் தெகிரி, மகாதேவ் தெகிரி மற்றும் சோனை தெகிரி விசுவாச வாழ்விற்கு மீண்டும் திரும்ப; நமது ஊழியத்தைப் பலவிதங்களில் தடுக்கும் கத்திகுண்ட் பணித்தள பொடய்திஹ் கிராம மக்களின் மனமாற்றத்திற்காக ஜெபிப்போம்.

## மேற்கு வங்காளம்
### மேக்லிகன்ஜ்:
**ஜென்னிஷ் & சுகந்தி புஷ்பம்**

**துதிக்க:** 5 கிராமங்களில் ஊழியப்பின் தொடர்பணிகளும், 7 கிராமங்களில் பகல், இரவு ஜெபக்கூடுகைகளும் நடைபெற தேவன் தயவு காண்பித்துள்ளார். சாகர்சா பகுதியில் இறுதிக்கட்ட பணித்தள ஆய்வு சிறந்த முறையில் செய்து முடிக்கப் பட்டுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தங்களுடைய மனநிலையை மாற்றும் தவறான அரசியல் முறைகளில் வாஞ்சை காட்டும் வாலிபர்களுக்காக; பண்டிகை நாட்களை முன்னிட்டு குடிப்பழக்கம் மற்றும் பிற தீயப்பழக்கங் களுக்கு அடிமையாகி இருப்போர் மனந் திரும்ப; ராஜ்பான்சி மக்களினத்தின் மனதிலிருக்கும் கிறிஸ்தவர்களைக் குறித்த தவறான எண்ணம் மறைய; தங்களது சமுதாயத்தினரை ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களுக்குத் தூண்டும் சமூக சங்கத்தலைவர்கள் இரட்சிப்படைய ஜெபிப்போம்.

### கட்டும் ஜெபம்!
*மகாராஷ்டிரா, கட்சாந்தூர் பணித்தளத்தில் நமது விசுவாசி கணேஷ் தேகம் 4 கூலியாட்களை அழைத்துக் கொண்டு, மாலை நேரத்தில் தோட்டப் பணிக்கென மணல் நிரப்பச் சென்றிருந்தார். திடீரென்று புலி எதிரே வர, இவரைத் தனியே விட்டுவிட்டு மற்ற நால்வரும் ஓடி ஒளிந்தனர். தனியே விடப்பட்ட இவர், தன் கண்களை மூடி ஜெபித்தார்; தேவன் புலியின் வாயைக் கட்டினார். புலி அமைதியாகச் சென்றுவிட்டது. தேவனுக்கே மகிமை!*



க் கட்டினார்

## 14
## பிப்ரவரி
திங்கள்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திருமதி. லால் நுன் மவி மார் கிப்கென்

### பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

**துதிக்க:** மானிக்பூர் கிராமத்திலிருந்து புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் வந்துள்ளனர். புதிதாக 18 கிராமங்களில் இயேசுவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியங்களின் மூலம் அநேகர் சுவிசேஷத்திற்குச் செவிகொடுக்க ஆவலாக உள்ளனர். சல்போனா மற்றும் உளத்தூர் பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்ட ஞாயிறுப் பள்ளியும், சிறியளவிலான ஜெபக்குழுவும் நன்றாக இயங்கி வருகின்றன. மானிக்பூரைச் சார்ந்த நமது புதிய விசுவாசிகள் உற்சாகமாக ஊழியச்செயல்பாடுகளில் பங்கேற்கவும், தேவ நாம மகிமைக்காக ஊழியங்களுக்கென நன்குக் கொடுக்கவும் செய்கின்றனர். உத்தர்கர்மா திருச்சபைக்கென சிர்ஜோன் சோரேன் & பாபி முர்முவின் குடும்பங்களையும், சல்போனா திருச்சபைக்கென சுங்கு டுடு & உஜித் முர்முவின் குடும்பங்களையும், உளத்தூர் திருச்சபைக்கென ராம் சோரேனின் குடும்பத்தையும், குட்கு திருச்சபைக்கென பாபுலால் முர்முவின் குடும்பத்தையும், மானிக்பூர் பகுதிகளின் திருச்சபைகளுக்கென வாகீல் ஹெம்ரோம் & சஃபூல் ஹெம்ரோமின் குடும்பங்களையும் – சபை மூப்பர்களாகவும், ஆராதனையை நடத்தும் தலைமைப்பொறுப்பாளர்களாகவும் நியமிக்க தேவன் அநுக்கிரகம் பாராட்டியுள்ளார். நமது விசுவாசி கல்பனா முர்முவிற்கு தேவன் நல்லதொரு குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பாக்குவாஹாட் பணித்தளத்தில் பெரும் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; மனநிலைப் பாதிப்பிலிருந்து மிராட்டி முர்முவையும், வலிப்பு நோயிலிருந்து சுபிலால் மற்றும் மாரன் முர்முவையும் கர்த்தர் சுகப்படுத்த; சமீபத்தில் காசநோய் மற்றும் நுரையீரலில் உண்டான நோய்த் தொற்றினிமித்தம் உயிரிழந்த புத்ராய் முர்முவின் குடும்பத்தினரை தேவன் ஆறுதல்படுத்த; நமது புதிய தொடர் பாளர்களான உளத்தூர் கிராம ஸ்ரீநாத் முர்மு, பிந்தர்கடியா கிராம தாலு சோரேன், குட்கு கிராம சிபிலால் முர்மு, சல்போனா பகுதி தீனா முர்மு மற்றும் ஸ்ரீநாத் மர்தி, சுந்தர்பான் கிராம மோசி டுடு, கொய்னாதுஹி கிராம சுதிர் மர்தி, ராமு மர்தி மற்றும் காந்த்முனி பெஸ்ரா, மல்துபாரா கிராம சுனிராம் சோரேன், சாகோலா பக்கா கிராம நீட்டா சோரேன், பன்னாபூர் கிராம சரஸ்வதி, ஹெலன்தங்கா கிராம சுசில் முர்மு மற்றும் ஹோப்னி முர்மு, பிர்தோலா கிராம சுபாஷ் மர்தி, ஜம்தோலா கிராம கந்தோன் சோரேன் மற்றும் மந்தோன் சோரேன், மானிக்பூர் கிராம கான்ஜல் முர்மு, கோஹாஜாயி கிராம நவீன் சோரேன், குருஞ்சா கிராம சோனேஷ் டுடு மற்றும் சில்தானி கிராம அனுந்தா பெஸ்ரா ஆகியோர் இரட்சிக்கப்பட ஜெபிப்போம்.

## *என்ன விந்தை!*

*மத்தியப் பிரதேசம், தினேஷ்பூர் பணித்தளத்தில் நமது தெனலாகன்ஜ் கிராம விசுவாசிகள் விறகு சேகரிப்பதற்காகக் காட்டிற்குச் சென்றனர். திரும்பி வரும் போது, ஒரு சிறுத்தை அவர்கள் வரும் பாதையைக் கடந்தது. விசுவாசிகள் கர்த்தரை நோக்கி ஜெபித்தனர். என்ன விந்தை! அச்சிறுத்தை எவ்விதத் தீங்கும் விளைவிக்காமல் சென்று விட்டது. சிறுத்தையிடமிருந்து அற்புதமாகப் பாது காத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!*

## 15 பிப்ரவரி
செவ்வாய்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. டேனியல் தாமஸ்
திருமதி. மெர்சி தெபோரா செந்தில்
திரு. வசாவா எலேஷ் பிரபு, திரு. அய்யனார் M.

**தபன்:**

**R. கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்**

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். மன நிலைப் பாதிப்பிலிருந்து முனு டுடுவையும், பல்வேறு வியாதி பெலவீனங்களிலிருந்து சனின் கிஸ்கு, நிரலா ஹெம்ரோம், புதிலால் ஹன்ஸ்தக்கையும் தேவன் சுகமாக்கி யுள்ளார். இங்கு நடந்த வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளையும், தனித்தாள் சுவிசேஷப்பணிகளையும் தேவன் ஆசீர் வதித்துத் தந்துள்ளார். முரையூர் கிராம நமது விசுவாசிகள் வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சிகளில் மனமுவந்து பங்கேற்பதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நுருல் கிராம விசுவாசிகள் யாவரும் சேர்ந்து கர்த்தரைக் கிரமமாக ஆராதிக்க நல்லதொரு கச்சா ஆலயம் அமைக்கப்பட; விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் சாட்சியுள்ள ஜீவியம் செய்ய; திரளானோர் கிறிஸ்துவண்டை வரும்வண்ணம் எல்லா இடங்களிலும் பெரிய ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; பிர்பிரி, சியால்கன்ஜ், முலானிபூர் மற்றும் காந்தாபரி கிராமங்களில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

## அஸோம்

### வடகிழக்குப் பிராந்தியம்:

**C.H. ஜாண் & வேணி**

**துதிக்க:** புதிதாக 17 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் சேர்ந்துள்ளனர். நாராயண்பூர் பணித்தளத்தைச் சார்ந்த சத்ரங் மற்றும் ரங்காஜன் பகுதிகளில் வசிக்கும் மக்களில் அநேகர் சுவிசேஷத்தின் மீது மிகுந்த ஆர்வம் காட்டுகின்றனர். கோகாமுக் பணித்தளத்தைச் சார்ந்த கராப் துக்கர் கிராம மக்கள் சுவிசேஷத்திற்குச் செவிசாய்க்க திறந்த மனதுடன் காத்திருக் கின்றனர். லோக்ரா பணித்தள அஞ்சலி மில்லியைப் புற்றுநோயிலிருந்து தேவன் குணமாக்கியுள்ளார். நமது மிஷனெரி ரபீந்திரா முர்முவை அதிகபட்ச உயர் இரத்த அழுத்தத்தினால் உண்டாகும் பக்கவாத ஆபத்திலிருந்து தேவன் பாதுகாத்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பதுமானி கிராமத்திலிருக்கும் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் மனம்மாற; மிஸ்ஸிங் மற்றும் தியோரி இன சமுதாயங்களைச் சார்ந்த நமது இளம் விசுவாசிகளுக்கு நல்ல வாழ்க்கை துணைகள் அமைய; நாராயண்பூர் மற்றும் காலாபரி பணித்தளங்களில் ஆவிக்குரிய அசைவு உருவாக; சில மாதங்களாகவே மனநோயின் பாதிப்பினால் காணாமல் போயிருக்கும் அங்குல் ருலே விரைவில் சுகபத்திரமாக வீடு வந்து சேர ஜெபிப்போம்.

### *எந்தப் பாதிப்பும் இல்லை!*

*மத்தியப் பிரதேசம், சிரியா பணித்தளம். காரி கிராமத்தைச் சார்ந்தவர், நமது விசுவாசி காலு. இவரின் உடல்மீது ஒரு டிராக்டர் ஏறி இறங்கியது. எலும்புகள் நொறுங்கி, அந்த இடத்திலேயே அவர் மரித்திருப்பார் என்றே பார்த்தோர் நினைத்தனர். ஆனால், என்ன ஆச்சரியம்! விசுவாசியின் உடலில் எந்த எலும்பும் முறியவில்லை. கர்த்தரின் அற்புதமான இக்கிரியை பலரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. கர்த்தருக்கே மகிமை!*

**16**
**பிப்ரவரி**
புதன்

*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. பொன்லதா ஜெபக்குமார்
திரு. சதீஷ் குமார் C.

# சத்தீஸ்கட்

## பையாதன் – 1:
### முத்துக்குமார் & நேத்ரவதி

**துதிக்க:** சபை ஆராதனையை நடத்திக் கொண்டிருக்கும்போது, காவல்துறையின ரால் கைது செய்யப்பட்ட சூரஜ்பூர் கிராம நமது சுதேச ஊழியர் ராம்ராஜ் ஸ்ரீ சுகபத்திர மாகத் தனது வீடு வந்து சேர கர்த்தர் கிருபை பாராட்டியுள்ளார். தர்கா, பாஞ்ஜா மற்றும் கர்ரா கிராமங்களில் அதிகமான மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பித்தல்கா பகுதியில் நடைபெற்ற 10 மணிநேர ஸ்தோத்திரக் கூடுகையை தேவன் நன்மை யாக முடியப்பண்ணியுள்ளார். பல்தெளலி கிராம ரிஷிராஜ், நாராயண் பிரசாத் மற்றும் சந்தோஷ் குமார் சிங் சுவிசேஷத்தை ஆர்வத்துடன் கேட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சமீபத்தில் மரித்துப்போன அவினாஷின் குடும்பத்தாரைக் கர்த்தர் ஆற்றித்தேற்ற; மோனிகாவின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; பவர்க்கோ கிராம பீம்செனை வாய்ப்புற்றுநோயிலிருந்தும், பாஞ்ஜா கிராம பிரீத்தியைத் தீராத வயிற்று வலியிலிருந்தும், பய்ஜனாத்பூர் பிரியங் காவை மனநிலைப் பாதிப்பிலிருந்தும் தேவன் முற்றிலுமாய்க் குணப்படுத்த ஜெபிப்போம்.

## பையாதன் – 2:
### தாங் சின் லியான் & உங் தியான்சிங்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கோண்ட் சமுதாயத்தினரிடையே திரளான புதிய நபர்களைச் சுவிசேஷத்தின் மூலம் சந்திக்க தேவன் உதவி பாராட்டியுள்ளார். சிர்குடா மற்றும் பிப்ரா பகுதிகளில் புதிதாக ஆராதனைக்குழுக்கள் துவங்கப் பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தவறான குற்றச்சாட்டுகளினால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் நமது சிர்குடா கிராம விஜய் விரைவில் விடுதலை பெற; கோண்ட் இனமக்கள் மத்தியில் ஆவிக்குரிய அசைவு உண்டாக; ஊழியத்தை இன்னும் திறம்படச் செய்ய தகுந்த சுதேச ஊழியர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்கள் கிடைக்க; குடிப்பழக்கத்திலிருந்து பிப்ரா கிராம தர்பூரனாஷ் மீண்டு வர ஜெபிப்போம்.

## சம்ப்பா:
### ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க ஆரம்பித்துள்ளனர். ஜார்ரா, பங்கான் ஆகிய இரு கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் பகரப்பட்டுள்ளன. 12 கிராமங்களில் நடைபெற்ற ஊழியப் பின்தொடர்பணிகளின் வாயிலாக நமது விசுவாசிகள் அநேகர் ஆவிக்குரிய மறுமலர்ச்சியடையவும், தங்களது அர்ப் பணிப்பைக் கிறிஸ்துவுக்குள் புதுப்பித்துக் கொள்ளவும் தேவன் கிருபை அருளி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** செமரியா, உரய்கா, ரகோன்தா, சோனி ஆகிய கிராமங்களில் ஆலய நிலங்கள் சரியான முறையில் பதிவு செய்யப்பட; நமது விசுவாசிகளான மஞ்சு, பிரியங்கா, பூலி, ஜோதி யாதவ், ரஜனி, புஷ்பா, பூலேஸ்வரி, உஷா குர்ரி மற்றும் மீனா யாதவின் குடும்பங்களில் மழலை செல்வங்கள் பிறக்க; குழந்தை திருமணம், மது அருந்துதல் மற்றும் விபச்சாரம் போன்ற சமுதாயத் தீமைகள் இப்பணித்தளத்திலிருந்து முற்றிலுமாக அகற்றப்பட ஜெபிப்போம்.

# 17
## பிப்ரவரி
வியாழன்

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. ருஹாமா குரு
செல்வி. வன்கலபுடி சாந்தினி

### கர்கோடா:
### கிங்ஸ்லி ஐசக் ஜாண்சன் & மீனா

**துதிக்க:** 13 இடங்களில் நடந்து முடிந்த பஜன் கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். வாலிபர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்களுக்கான வேதாகம வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெற தேவன் கிருபை நல்கி வருகிறார். சாலிபாமா கிராமத்தில் 3 நாட்கள் உபவாச ஜெபக்கூடுகையைச் சிறப்பாக நடத்தி முடிக்க தேவன் காட்டியுள்ள தயவிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** லிப்ரா கிராம நமது விசுவாசி புத்ராம் ரட்டியாவின் நெற்களஞ்சியத்தைத் தீக்கிரையாக்கிய சுவிசேஷ எதிர்ப்பாளர்கள் யாவரும் தாங்கள் செய்தது தவறு என உணர்ந்து, உண்மையாய் மனம்மாற; ஊழியத்திற்கு நேரிடும் எதிர்ப்புகளைச் சரியான முறையில் கையாள, தேவன் நமது மிஷனெரிகள் மற்றும் சுதேச ஊழியர்களுக்குத் தமது பரம ஞானத்தை அருள; ரட்டியா சமுதாய மக்களுடைய ஆத்தும மீட்பிற்காக ஜெபிப்போம்.

### காட்கோரா:
### வால்வி தினா தானா & ஷைலா

**துதிக்க:** பங்கேதா கிராமத்திலிருந்து புதிதாக 5 நபர்கள் கிறிஸ்துவை மெய் தேவனாக விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். புதிதாக 7 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப் பட்டுள்ளது. தானிகந்தி கிராமத்தில் வைத்து நடைபெற்ற விசுவாசிகள் எழுப்புதல் முகாமில் 5 கிராமங்களிலிருந்து நமது விசுவாசிகள் ஏராளமானோர் வந்து கலந்து கொண்டு பயன்பெற தேவன் காண்பித்துள்ள நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கேராமுடா திருச்சபையினரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; கரடி கடித்ததால் காலெலும்பு முறிந்து வேதனைப்படும் ராதிகாவும், சரீரத்தில் ஏற்படுகின்ற ஒரு விதமான சரும எரிச்சலினால் துன்புறும் மங்கலுபாயும் பூரண சுகமடைய; பாதர்பாட் கிராம பிரியங்கா தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற; நமது விசுவாசிகளான சந்தோஷ்சோனிக்கும் நடானிசோனிக்கும் ஆசீர்வாதமான குழந்தை பாக்கியங்கள் அருளப்பட ஜெபிப்போம்.

### லுடேக்:
### டேவிட் மசிஹ் & நிஷா டேவிட்

**துதிக்க:** புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. தேவன் தமது நாமம் மகிமைப்படும்படியாக அறுப்பின் பண்டிகையை வெகு நேர்த்தியாக ஆசரிக்க இப்பணித்தள விசுவாசிகளுக்கு உதவி செய்துள்ளார். மிகவும் ஆபத்தான நிலையில் அதிக சுகவீனமாயிருந்த நமது சுதேச ஊழியரின் மனைவிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் அற்புத சுகம் ஈந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** ஆராதனைக்குச் செல்லவிடாமல் தனது கிராம மக்களால் தடைசெய்யப்படும் நமது விசுவாசி ரமாவதி சித்தாருக்காக; சிர்பூர் கிராம பங்கஜ் மற்றும் அகஸ்டஸை வலிப்பு நோயிலிருந்தும், அமர் பாபுவை மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், குமன்சியா திருச்சபையைச் சேர்ந்த சாரா வதியை மனநிலைப் பாதிப்பிலிருந்தும் தேவன் முற்றிலுமாய்க் குணப்படுத்த ஜெபிப்போம்.

## 18
## பிப்ரவரி
வெள்ளி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. தேஜஸ்விட்டா பெபர்த்தா
திரு. சுகின்லால் C.

### பாலி:
### டிட்டிங்பெள & மலங்மெய் சனாலுங்

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. கோண்ட் இன விசுவாசிகளுக்கென தெலியாமர் மற்றும் பசான் கிராமங்களில் நடந்த சமிதி கூடுகையை தேவன் நிறைவாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். சில்லி கிராம தரமை குடலிறக்கப் பிரச்சனையிலிருந்து தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழிலினிமித்தமாக ஹைதராபாத்திற்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகளின் ஆவிக்குரிய மற்றும் சரீரப் பாதுகாப்பிற்காக; நமது ஆராதனையில் ஒழுங்காக வந்து பங்குப்பெறாமலிருக்கும் நமது விசுவாசிகளான கணேஷ் ராம், மாங்கனிபாய், ராம்குமார், சரஸ்வதி, அக்தன்பாய், சுவரத் ஆகியோருக்காக; கங்கன்பூர் கிராமத்தில் ஆலயம் கட்டத் தகுந்ததோர் நிலம் கிடைக்க; நமது விசுவாசி பிங்கி தனது குழந்தைகளுடன் ஆராதனைக்குச் செல்வதற்கு வரும் தடைகள் யாவும் அகல; விசுவாசிகள் ஆலயத்தில் கூடி ஆராதிப்பதை எதிர்க்கும் மஜ்காவா கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; ஹர்தி மற்றும் ஜோகிபூர் கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க திறந்தவாசல் கிடைக்க ஜெபிப்போம்.

### வாட்ராஃப் நகர்:
### பூபதி & பாலின் மேரி

**துதிக்க:** புதிதாக பர்திகாலா, மருவபாரா மற்றும் கொட்டியாபாரா கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. கடந்த வருடம் முழுவதும் இப்பணித்தளத்திலுள்ள விசுவாசிகள் மத்தியில் விசுவாச பின்மாற்றம் ஏதும் நேரிடாதபடி தேவன் பாதுகாத்துள்ளார். ஓகாரி, சாரக்பூர், லமேக்ரி ஆகிய கிராமங்களில் சபை ஆராதனைகள் யாவும் நேர்த்தியாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இப்பணித்தளத்தைச் சார்ந்த 120 கிராமங்களிலும் இயேசுவின் நற்செய்தி கருத்துடன் பறைசாற்றப்பட; இங்குச் சுவிசேஷத்தை வெறுத்து ஒதுக்கும் மக்கள் யாவரும் சுவிசேஷத்தின்மீது ஆர்வம் கொள்ள; லமோரி கிராம சீதாவின் தாயார் பக்கவாதத்திலிருந்து அற்புத சுகம் பெற ஜெபிப்போம்.

## குஜராத்
### தேகாம் : குமரன் & ஜெலின்

**துதிக்க:** காவல்துறைப் பணிகளுக்கான தேர்வுகளில் நமது இளம் விசுவாசிகளில் சிலர் வெற்றி பெற தேவன் உதவி புரிந்துள்ளார். பல்வேறு வியாதிகளிலிருந்து ஜான்விபேனை விடுவித்து அவரைக் குடிப்பழக்கத்திலிருந்தும் தேவன் மீட்புப் பெற செய்துள்ளார். நமது புதிய தொடர்பாளரான சந்திரிகாவிற்கு ஜெபத்தின் மூலம் சரீரக்கட்டியிலிருந்து சுகம் கிடைத்ததினால், அவர் நமது ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கின்றார். நமது விசுவாசிகளான சிக்காபாகி கிராம லய்தாவும், தஷிலா கிராம கோகிலாபேனும் கிராமத்தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இம்முறை கிறிஸ்துமஸ் ஆராதனையில் பங்குப்பெற்ற நமது புதிய தொடர்பாளர்கள் அனைவரும் இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற; இப்பணித்தள மக்களின் மனதில் இருக்கும் ஜாதி பிரச்சனை ஒழிய; கண்ணுபாயைத் தீராத முதுகு வலியிலிருந்து தேவன் குணமாக்க ஜெபிப்போம்.

**19**
**பிப்ரவரி**
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. அன்புமலர் பாலமுருகன்

### மாண்சா:
### செல்லதுரை & கனகநேசம்

**துதிக்க:** நமது இளம் விசுவாசிகளில் 6 பேருக்கு காவல்துறையில் வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. தாமேதா கிராமத்தலைவர் தினேஷ்பாய் தாகூர் நமது ஆராதனையில் பங்கேற்க தேவன் ஒத்தாசை புரிந்துள்ளார். உனாவா, தாமேதா, தோடுசன், தாமன்யா, எட்டா மற்றும் சங்கர்புரா கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க வாய்ப்புகள் கிடைத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சபைத்தலைவர்கள் தங்களது திருச்சபை ஆராதனைகளைத் தாங்களே முன்வந்து நடத்த; வீட்டு ஜெபக்கூட்டங்களில் நமது விசுவாசிகள் அனைவரும் உற்சாகமாகக் கலந்து கொள்ள; ராகேஷை வலிப்பு நோயிலிருந்தும், ரஞ்சித்பாயை மனநோயிலிருந்தும் மற்றும் பாவனாபேனை கர்ப்பப்பை புற்று நோயிலிருந்தும் தேவன் சுகப்படுத்த; பார்மர், தாகூர், ரவேல், வகாரி, சென்மா ஆகிய மக்கள் கூட்டங்கள் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட ஜெபிப்போம்.

### சூரத் :
### மாதவராய் & ஜெபதங்கம்

**துதிக்க:** முதன்முறையாக கிறிஸ்துவை விசுவாசிக்க ஆரம்பித்து அவருடைய மந்தைக்குள் 13 நபர்கள் வந்து சேர்ந்துள்ளனர். புதிதாக ஒரு கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளது. அனிதாபேன், ரோஷன், பிபின்பாய், ராஜேஷ்பாய், நிலேஷ்பாய், ஆல்பர்ட்பாய், அம்ரிதாபேன் மற்றும் சுமித்ராபேனின் வீடுகளில் வைத்து நடைபெற்ற இரவு நேர ஜெபக்கூடுகைகளை தேவன் ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளமைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கிறிஸ்துவின்மீது தங்களுக்குள்ள விசுவாசத்தை அறிக்கை செய்யக் காத்திருக்கும் 15 நபர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசியான சவிதாபேனுக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்க; குசல்பாய் & ஆல்பர்ட்பாயின் குடும்பத்தில் சண்டைகள் நீங்கி, சமாதானம் காணப்பட ஜெபிப்போம்.

### மோட்டபொண்டா:
### சாமுவேல் சுப்பிரமணி & சுசிலா

**துதிக்க:** கபிரோலி மற்றும் பராய் கிராமங்களிலிருந்து புதிதாக 12 நபர்கள் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். பண்டாடி மற்றும் மனபோண்டா கிராமங்களின் ஆலய ஆண்டுவிழாப் பண்டிகைகளில் நமது விசுவாசிகள் கர்த்தரோடுள்ள தங்களது அர்ப்பணிப்பைப் புதுப்பித்துள்ளனர். காரையா கிராம மகன்பாயை மூச்சுத் திணறல் பிரச்சனையிலிருந்தும், அமாபய் கிராம ரம்யாவை இருசக்கர வாகன விபத்திலிருந்தும் தேவன் காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது சுதேச ஊழியர்கள் தங்களது ஊழியப்பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்க; தொண்டைப் புற்று நோயிலிருந்து கோவிந்திற்கு தேவன் சுகம் தர; நமது விசுவாசி மீனாபேனிற்கு மழலை செல்வம் கிடைக்க ஜெபிப்போம்.

## 20
## பிப்ரவரி
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. குண சந்திர பயக்

திரு. ஜாண்சன் V.

### உமர்காம்:
**ஆசீர் மோசஸ் & அமிர்தா கோல்டா**

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷ நற்செய்தி பறைசாற்றப் பட்டுள்ளது. முக்கேஷ்பாய், ஜெம்சுபாய் மற்றும் ராமன்பாயின் குடும்பங்கள் நமது ஊழியங்களில் வந்து புதிதாக இணைந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்திருக்கும் நிக்கோலி பகுதியைச் சார்ந்த நமது விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வர; சமீபத்தில் மரித்துப்போன மந்தா கிராம தக்லா பாயின் குடும்பத்தினரை தேவன் ஆற்றித்தேற்ற; உமர்காம், ஜரோலி மற்றும் குண்டூர் பணித்தளங்களில் கர்த்தரின் வார்த்தையை நற்செய்தி யாகக் கேட்டிருப்போர் கிறிஸ்துவை உறுதியாக நம்பும் விசுவாசத்திற்குள் வர ஜெபிப்போம்.

## தாத்ரா மற்றும் நகர் ஹவேலி
### கான்வேல்:
**அருள் ஆசீர் & சுகுணா**

**துதிக்க:** மதுபேன் பகுதியில் புதிதாக 49 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசத்துடன் பற்றிக்கொண்டுள்ளனர். பாரதிபேனின் கணவரைக் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் மீட்டெடுத்துள்ளார். ஜெபத்தின் வாயிலாக விக்கி மற்றும் ஜெய்தீபைக் கால் பெலவீனங்களிலிருந்து தேவன் சுகம் பெறச் செய்துள்ள கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளின் பிள்ளை களான திமக்காபேன் மற்றும் அமித் தங்களது 10-வது வகுப்புத் தேர்வை நல்ல முறையில் நிறைவுச் செய்ய; தீயப்பழக்கங்களுக்கு இடமளிக்காதபடி நமது விசுவாசிகளுடைய திருமண வைபவங்கள் பரிசுத்தமான முறையில் நடைபெற கர்த்தர் உதவி பாராட்ட ஜெபிப்போம்.

## மகாராஷ்டிரா
### அக்கல்குவா:
**ஜக்மோகன் சிங் & ஸ்வாதி**

**துதிக்க:** புதிதாக 31 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. புனர்வாசன் மற்றும் செல்தாபானி கிராமங்களில் புதிதாக ஆராதனைக் குழுக்கள் துவங்க கர்த்தர் உதவி செய்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கர்த்தரின் வார்த்தையை மிகவும் விருப்பத்துடன் கேட்டுள்ள புதிய மக்கள் அவரது இரட்சிப்பைக் கண்டுகொள்ள; அக்கல்குவா, புனர்வாசன், செல்தாபானி ஆகிய கிராமங்களில் நடைபெறும் நமது ஆராதனைகளில் பங்குப்பெறுவோர் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நல் வளர்ச்சி அடைய; நமது மிஷனெரிகள் தாங்கள் பணிபுரியும் இடங்களிலுள்ள உள்ளூர் மொழிகளைக் கற்றுக்கொள்ள அவர்களுக்கு தேவன் தமது பரம ஞானத்தைத் தர ஜெபிப்போம்.

**21**
**பிப்ரவரி**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. திலக் S.

## ஆலப்பள்ளி: எலிசா தம்மி

**துதிக்க:** புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த மாதங்களில் நடைபெற்ற அனைத்து ஆவிக்குரிய நிகழ்ச்சிகளையும் குறிப்பாக வெளிப்புற சந்திப்பு ஊழியங்களையும் தேவன் எவ்விதத் தடையுமின்றி சிறப்பாக நடத்தித் தந்துள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பிம்னி கிராமத்திலிருந்து நமக்குப் புதிய தொடர்பாளராக அறிமுகமாகியிருக்கும் கொடப்பியின் குடும்பம் இரட்சிக்கப்பட; சித்தகனார் கிராமத்தில் ஆலயம் கட்ட ஒரு நல்ல நிலம் கிடைக்க; மய்லாராம் கிராம சுனிதா மாதவி தீராத முதுகு வலியிலிருந்தும், ஆஷா குஸ்ராம் இரத்த அணு கோளாறிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

## போரடி: ஓம்பிரகாஷ் & சப்னா

**துதிக்க:** அம்பாதுக் கிராமத்திலிருந்து புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். வக்தோரா, உபதுயா, ஜம்னியா ஆகிய 3 கிராமங்களில் முதன்முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கேவசிபாடா, சமாரியா, சஹகானா மற்றும் ராணிஜிரா கிராமங்களில் வேதாகம வகுப்புக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வகபால், பாவர் பாடா, நிம்ஜிகிரி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற ஊழியப் பின்தொடர்பணிகள் மூலம் நமது விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ள தேவன் கொடுத்த நல்வாய்ப்பிற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** புதக்கி விகிர் கிராம முனிலால்பாய், தபாபாடா கிராம தயாராம் குடும்பம் & திம்பா கிராம ராம்தேவ் குடும்பம் இரட்சிக்கப்பட; உம்ரத் கிராம கர்மாபாய் பக்கவாதத்திலிருந்தும், தபாபாடா கிராம ரூபஸ் கண்பார்வை கோளாறிலிருந்தும், சாக்கடு கிராம சுக்கா தேவ்பாய் மனவளர்ச்சிக் குன்றிய நிலையிலிருந்தும், வகபாடா கிராம வசந்தாபாய் வலிப்பு நோயிலிருந்தும் பூரண குணமடைய; நமது விசுவாசிகளை ஆராதனைக்கு வரவிடாமல் தடைசெய்யும் புதக்கி விகிர் கிராம ஜோதிபாய் மனந்திரும்ப ஜெபிப்போம்.

## *நாம் கர்த்தரைத் தேடும் போது...!*

*ஜார்க்கண்ட், லால்மட்டியா பணித்தளம். சித்திலியா கிராம அனில் மூர்முவின் மனைவியும், அவரது குழந்தைகளும் நமது ஞாயிறு ஆராதனையில் கிரமமாகப் பங்கேற்கும்போது, அனில் மூர்மு மாத்திரம் ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி, ஆராதனைக்கு வராமல் வேறு வேலைக்குச் சென்றுவிடுவார். இவ்வாறு நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும்போது, திடீரென ஒருநாள் அனில் மூர்முவின் கழுத்தில் பெரியதொரு கட்டி வந்தது. உடனே அவரது மனைவி அவரை ஞாயிறு ஆராதனைக்கு வர அழைத்தார். அவரும் சென்றார். அனைத்து விசுவாசிகளும் சேர்ந்து அவருக்காக ஜெபித்தனர். மிகக்குறைந்த செலவில், அவர் சுகமடையும்படி கர்த்தர் உதவி செய்தார். பின்பு அவர்கள் தங்களுக்கென சொந்த வீடு கட்ட எண்ணி, முதல் கட்ட அரசாங்கப் பணஉதவியைப் பெற்று, அவ்வீட்டைக் கட்டத் தொடங்கினர். ஆனால், அடுத்தக்கட்ட பணஉதவியைப் பெறுமளவிற்கு அரசாங்கத்தின் எதிர்பார்ப்புக்கு நிகராக அவர்களால் தங்களின் வீட்டை கட்டிக்கொள்ள இயலவில்லை. எனவே, அனில் மூர்மு அதற்காகத் தன்னை அரசாங்க தண்டனையாகச் சிறையிலடைத்து விடுவார்களோ, தனது மனைவி மற்றும் பிள்ளைகள் தனிமையில் உதவியற்ற நிலையில் நின்று விடுவார்களோ என நினைத்தார். அதனால் மிகவும் பயந்து அதற்காக 7 நாட்கள் தொடர்ந்து ஜெபிக்கத் தொடங்கினார். நடந்தது என்ன? 8-வது நாள் ஒரு அரசாங்க அதிகாரி அவரது வீட்டிற்கு வந்து, அடுத்தக்கட்ட பணஉதவியை ஈந்தார். தனது பயத்தில் கர்த்தரைத் தேடின அனில் மூர்முவின் தேடல் வீணாய்ப் போகவில்லை. கர்த்தர் அற்புதமாகக் கிரியை செய்தார். இதனிமித்தம் அனில் மூர்முவின் குடும்பம் அவ்வீட்டில் தேவசமாதானத்துடன் இன்பமாய் வாழ்கின்றனர். கர்த்தருக்கே புகழ்!*

## 22 பிப்ரவரி செவ்வாய்

### எட்டப்பள்ளி:
### குல்தீப் சிங் & குர்பிரீத் கௌர்

**துதிக்க:** பர்சல்கொண்டி மற்றும் கசுன்சூர் பகுதிகளில் புதிதாக 23 நபர்கள் கிறிஸ்துவை மனமுவந்து சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். பர்சல் கொண்டி கிராம குக்கு கவாடி மற்றும் உத்ர கங்குலியின் குடும்பங்கள் புதிதாக நமது ஆராதனையில் வந்து கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மடியா மற்றும் சமிதி கிராமங்களில் உள்ள மக்களுக்குச் சுவிசேஷம் அறிவிப்பதற்கான வாய்ப்புகள் உருவாக; நமது சபை மூப்பர்களே தங்களது சபை ஆராதனைகளை முன்நின்று நடத்த; ஹல்வாரா மற்றும் கசுன்சூல் கிராமங்களில் ஆலயங்கள் கட்டப்பட; நமது சுதேச ஊழியர்கள் ஆத்தும பாரம் கொண்டவர்களாகக் கர்த்தருடைய ஊழியத்தை மிகுந்த கருத்துடன் செய்ய ஜெபிப்போம்.

### ஜிம்மலாகட்டா:
### ஸ்ரீனிவாசா & சுனிதா

**துதிக்க:** புதிதாக ஒரு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பெரிய அளவில் நடத்தப்பட்ட வெளிப்புற சந்திப்பு ஊழிய நிகழ்ச்சியையும், ஊழியப் பின்தொடர் பணியையும் தேவன் வெகுவாக ஆசீர்வதித்துக் கொடுத்துள்ளார். மந்திரவாதியான சுதாகர் மாதவி தீய ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றார். பெர்க்கா பட்டி கிராம வேதாந்த் மாதவியைச் சரீரக்கட்டியிலிருந்தும், லக்ஷ்மி அத்ராமை மரணப்படுக்கையிலிருந்தும், ரூபாலியை மனவளர்ச்சியற்றத் தன்மையிலிருந்தும், தர்ஷாவாடா கிராம ஆர்யனை இருதயக் கோளாறிலிருந்தும் தேவன் அற்புத சுகம் தந்து காப்பாற்றியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** இனி வரும் நாட்களில் நடக்கவிருக்கும் அனைத்து ஊழிய நிகழ்ச்சிகளும் மக்களுக்கு ஆசீர்வாதமாக அமைய; நமது புதிய தொடர்பாளர்களின் குடும்பங்களான ஜிம்மலாகட்டா கிராம பப்ரு துர்க்கி, அதிஷ், துமுலபோடா கிராம ரமேஷ் மாதவி, கோத்தாகுடம் கிராம ராகேஷ் கொட்டா, பப்ரு வக்தாரி, புரம்பள்ளி கிராம வெங்கட் துர்கி, கிஸ்தயா மற்றும் ராமசந்திராவின் குடும்ப நபர்கள் யாவரும் இரட்சிப்புப் பெற; நந்திகான் கிராம பிரக்னயா மற்றும் எரகடா கிராம சாரதா மனநிலைக் குன்றிய நிலையிலிருந்தும், வெங்கடாவின் தாயார் சிறுநீரகக் கோளாறிலிருந்தும் முழுசுகம் பெற ஜெபிப்போம்.

### நேர் & கான்தேஷ்பீலி வேதாகம மொழிப்பெயர்ப்புப் பணி :
### அஜய்குமார் லிமா & பிரத்யாசினி

**துதிக்க:** புதிதாக 9 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. நமது விசுவாசி சுனிலின் குடும்பத்திற்கு தேவன் ஆசீர்வாதமான குழந்தை பாக்கியத்தை அருளியுள்ளார். பந்தினி கிராம பாலிராமின் குடும்பத்தினரை தேவன் பல்வேறு வியாதிகளிலிருந்து சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** மொழிப்பெயர்ப்புப் பணி எந்தத் தடங்கலுமின்றி நடைபெற; பெர்சிஜ்பூர் கிராம விசுவாசிகள் தங்களது ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர; திலாரி இனமக்கள் மத்தியில் ஆராதனைக்குழுவொன்று ஆரம்பிக்கப்பட; கலாம்பீர் கிராமத்தில் ஆலயம் கட்ட முறையான அனுமதி கிடைக்க ஜெபிப்போம்.

**23**
**பிப்ரவரி**
**புதன்**
*உபவாச ஜெபநாள்*

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. ஐசக் ராஜா D.
திரு. செந்தில் குமார் தீமோத்தேயு
திருமதி. அனிதா பிரபா ஆனந்த குமார்
திருமதி. ஈமண்டி அனுராதா பங்காரு
திருமதி. ஷைனி சிநேகா அல்ஃபோன்ஸ்

### குண்டாமோடி: பிதுயூத் குமார் சிங்

**துதிக்க:** புதிதாக 2 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. பிம்தி மற்றும் பெட்லிபாரி கிராமங்களில் நடைபெற்ற மாலைநேர ஜெபக்கூட்டங்களை தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். அம்ரூத் மற்றும் ஈஸ்வரை இரத்த அணு கோளாறிலிருந்து தேவன் சுகப்படுத்தியுள்ளார். அரசாங்க வேலைக்கான போட்டித்தேர்வில் வெற்றி பெற தேவன் நமது விசுவாசி ரவிந்தாவிற்குப் பாராட்டிய கிருபைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது ஊழியத்திற்குத் தடையாக வரும் அனைத்து காரியங்களையும் நமது ஊழியர்கள் கிறிஸ்துவின் வல்லமையைக் கொண்டு மேற்கொள்ள; ராம்திபாயை நெடுநாட்களாக இருக்கும் சரீர வலியிலிருந்தும், பெர்விபாயைக் கால் வலியிலிருந்தும் தேவன் சுகம் தந்து விடுவிக்க ஜெபிப்போம்.

### தலாசரி: விஜய்பாபு & தேவ கிருபை

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் இயேசுவினுடைய அன்பின் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. முர்பாத் மற்றும் தொங்கர்மால் பகுதிகளிலிருந்து அநேக மக்கள் சுவிசேஷத்தின்மீது வாஞ்சை காட்டுகின்றனர். அதிகப் பணநெருக்கடியோடு இருந்த நிறுவனத்தில் தொடர்ந்து தனது வேலையைத் தக்கவைத்துக் கொள்ள தேவன் நமது விசுவாசி சுனில்பாயிற்கு உதவி செய்துள்ளார். சோனாலிபேனின் குடும்பத்தை தேவன் குழந்தை பாக்கியத்தினால் ஆசீர்வதித்துள்ளார். கண்பார்வை கோளாறிலிருந்து நந்தாபேன் சுகமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசிகளுடன் இணைந்து தனது சரீர ஆரோக்கியத்திற்காக ஜெபிக்கும் மந்திரவாதியான கிஷான்பாயிற்கு தேவன் நற்சுகம் தர; நாக்சேரி மற்றும் திகாலே கிராமங்களில் நடைபெறப்போகும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் மாபெரும் ஆவிக்குரிய எழுச்சி உருவாக; இப்பணித்தளத்தி லுள்ள 114 கிராமங்களும் கிறிஸ்துவுக்குள் நற்சாட்சியுள்ள வாழ்வுப் பெற ஜெபிப்போம்.

### பந்தாடிய காளைமாடு!

*சத்தீஸ்கட், பாலி பணித்தளத்தில் ஊழியம் செய்யும் நமது மிஷனெரி சகோ. டிட்டுங்பௌவும் அவரது மனைவி சகோதரி. சனாலுங்கும் விடுதியில் நின்றுப்படிக்கும் தங்களது பிள்ளைகளை விடுமுறைக்கு வீட்டிற்கு அழைத்து வருவதற்கென பிலாஸ்பூர் ரயில் நிலையத்தில் ரயிலுக்காகக் காத்துக்கொண்டிருந்தனர். சற்றும் எதிர்பாராமல் அவ்வேளையில் அவர்களுக்குப் பின்னாக ஓடிவந்த ஓர் காளைமாடு நமது மிஷனெரி சகோதரியை முட்டிக் கீழே தள்ளியது. கீழே விழுந்த அவரது கால் மூட்டுகளில் அடிபட்டது. அதனால் உதவிக்காக அவர் சத்தமிட்டு அலறினார். அநேகர் உதவ ஓடி வந்தும், எப்பயனுமில்லை. காளைமாடு தொடர்ந்து அவரைத் தாக்கிப் பந்தாடிகொண்டிருந்தது. கர்த்தருடைய பெரிதான கிருபையினால், நமது மிஷனெரி சகோதரர் அக்காளை மாட்டின் முன்னங்கால்களைச் சட்டென இழுத்து விடவே, உடனே அது முன்நோக்கி ஓட்டம் பிடித்தது. பின்பு அங்கிருந்தோர் துரிதமாக அச்சகோதரியை கொட்டா மருத்துவமனைக்குத் தூக்கிச்சென்று அவருக்கு மருத்துவ முதலுதவி செய்தனர். அதன்பின் அவர் மிகுந்த சரீர உபாதைகளினூடே ஹவ்ரா மற்றும் திமாபூர் வரை பிரயாணம் செய்து, தங்கள் பிள்ளைகளைச் சுகமாய் அழைத்து வர தேவன் கிருபை செய்தார். பேராபத்தினின்று நமது மிஷனெரி சகோதரி. சனாலுங்கைப் பாதுகாத்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக!*

## 24
## பிப்ரவரி
வியாழன்

### தலோடா சிறுவர் விடுதி:
**ஏசு பிரகாஷ் & சுனந்தாபெல்லி**

**துதிக்க:** இவ்விடுதியிலுள்ள 54 பிள்ளைகளும், இங்குப் பணிபுரியும் பிற உடன் பணியாளர்களும் கர்த்தருக்குள் ஆரோக்கியமாக உள்ளனர். இவ்விடுதிப் பிள்ளைகளுக்கென நடத்தப்பட்ட அனைத்து ஆவிக்குரிய நிகழ்வுகளிலும் கர்த்தருடைய கரம் உடனிருந்தமைக்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** விடுமுறை நாட்களுக்குப்பின் அனைத்து பிள்ளைகளும் பத்திரமாக விடுதி வந்து சேர; இவ்விடுதியிலுள்ள பத்தாம் வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்களைக் கண்ணும்கருத்துமாகப் படிக்க; இங்கு நடைபெறும் சமையல் அறை, அலுவலகம் மற்றும் பணியாளர்கள் அறை கட்டுமானப்பணிகள் யாவும் விரைவில் நல்ல முறையில் முடிவடைய ஜெபிப்போம்.

### வடாலி:
**மூர்த்தி & பாரதி**

**துதிக்க:** புதிதாக 14 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. வட்சில் கிராமத்தில் நடத்தப்பட்ட சிறுவர்களுக்கான நிகழ்ச்சியில் கிறிஸ்துவை அறியாதவர்களின் பிள்ளைகள் 15 பேர் முதல்முறையாக வந்து கலந்து கொள்ள தேவன் உதவி செய்துள்ளார். உபதாகட் கிராம முன்னிபாய் குடற்புண் காய்ச்சலிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கௌதுடி கிராம அனில்பாய் மது அருந்தும் பழக்கத்திலிருந்து வெளிவர; அந்தரத்பாரி மற்றும் உபதாகட் கிராமங்களில் நடைபெறும் நமது ஆராதனைகளில் புதிதாக வந்து பங்கேற்கும் குடும்பங்கள் யாவும் கிறிஸ்துவின் அன்பை ருசிக்க; நிம்போரா கிராம லக்ஷ்மிபாயை தேவன் தீய ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க; பின்மாற்றமடைந்துள்ள கௌதுடி கிராம நமது விசுவாசி அனில்பாயும், புனர்வாசன் கிராம விசுவாசிகளும் மீண்டும் கிருபையாய் விசுவாச வாழ்விற்குள் அடியெடுத்து வைக்க ஜெபிப்போம்.

### நர்மதா, மொல்கி & வத்ஃபாலி:
**பரணிதரன் & செல்வராணி**

**துதிக்க:** தல்பாடா மற்றும் பர்குந்த் கிராமங்களில் நடைபெற்ற இரவுநேர ஆவிக்குரிய கூடுகைகளை தேவன் வெகுவாக ஆசீர்வதித்துத் தந்துள்ளார். பர்குந்த் கிராமத்தில் வேதாகம வகுப்பு நிகழ்ச்சி தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தொழிலினிமித்தமாக குஜராத்திற்குப் புலம் பெயர்ந்து சென்றுள்ள நமது விசுவாசிகள் யாவரும் சுகபத்திரமாகத் தங்களது வீட்டிற்குத் திரும்ப; மந்தம்பாபாடா கிராமத்தில் புதிதாக ஆராதனைக் குழுவொன்று ஆரம்பிக்கப்பட; வாய்ப்பேச இயலாத நிலையிலிருந்து சிநேகாவையும் கண்பார்வை கோளாறிலிருந்து கோமாவையும், இழுப்பு நோயிலிருந்து உஷா பாயையும், சரீரத்தோல் எரிச்சலிலிருந்து அனாபாயையும் தேவன் முழுமையாகச் சுகப்படுத்த ஜெபிப்போம்.

## 25
## பிப்ரவரி
வெள்ளி

### பிறந்தநாள் வாழ்த்துக்கள்
திருமதி. ஏஞ்சல் ஜெபா ஹென்றி
திருமதி. சுப்ரா பாக் மிண்டு குட்டும்
திருமதி. சாரதி அருண்குமார்
திருமதி. சுமதி கணேஷ்
திருமதி. நீது தினேஷ் குமார்

## கர்நாடகா

### ஷிறஹட்டி: ஆஷாபிரப்தா பால் & தீனாகுமாரி பெபர்தா

**துதிக்க:** புதிதாக 4 நபர்கள் கிறிஸ்துவை நம்பும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். புதிதாக 7 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. தேவன் முத்தண்ணாவைக் கொடிய வயிற்று வலியிலிருந்தும், ரூபாவைக் குடற்புண் காய்ச்சலிலிருந்தும் மற்றும் எல்லப்பாவை மூளை நோய்த் தொற்றிலிருந்தும் சுகமாக்கியுள்ளார். தீய ஆவியின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் மீனாக்ஷியை தேவன் மீட்டுள்ளார். நமது விசுவாசி மஞ்சுளாவிற்கு 10 வருட திருமண வாழ்விற்குப்பின் ஜெபத்தின் வாயிலாக அழகிய குழந்தை செல்வத்தை தேவன் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** பசாவா மற்றும் சங்கரப்பாவைக் குடிப்பழக்கத்திலிருந்து தேவன் விடுவிக்க; பரசுராமையும் அவருடைய 4 பிள்ளைகளையும் தோல் ஒவ்வாமை நோயிலிருந்தும், கவிதாவைப் பக்கவாதத்திலிருந்தும் தேவன் சுகப்படுத்த; வங்கியிலிருந்து கடன் பெற்று புதிய வியாபாரத்தைத் தொடங்கியுள்ள மஞ்சுவிற்கு தேவன் நல்ல வருமானத்தை அதன் மூலம் கட்டளையிட; IAS தேர்வு எழுதியுள்ள நமது விசுவாசி பரமேஷ் அதில் அதிகமான மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற ஜெபிப்போம்.

### முன்ட்கோட்: சுனில் குமார் & சங்கீதா

**துதிக்க:** புதிதாக 10 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்து இணைந்துள்ளனர். புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப்பட்டுள்ளது. தீராத வயிற்று வலியிலிருந்து தீபாவையும், கால் வீக்கத்திலிருந்து நஞ்சப்பாவையும், காதுப் பிரச்சனையிலிருந்து எல்லப்பாவையும் தேவன் குணமாக்கியுள்ளார். நமது விசுவாசி சங்கீதாவிற்கு தேவன் நல்ல குழந்தை பாக்கியத்தைக் கட்டளையிட்டுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** குடித்துவிட்டு அடிக்கடி தனது மனைவியை அடித்துத் துன்பப்படுத்தும் ராஜு மனம்மாற; கர்ப்பப்பை கட்டியினால் அவதிப்படும் சங்கீதாவையும், கொடிய காய்ச்சலினால் வேதனைப்படும் பிரித்வியையும் தேவன் பூரணமாகக் குணமாக்க ஜெபிப்போம்.

### ‘இயேசு’ எனும் நாமத்தினால்!

*ஹரியானா, பஸ்பூர் பணித்தளம். லால்கௌன் கிராம 6 வயது சிறுமி மீனாவிற்கு இரத்தப் புற்றுநோய். மருத்துவர்களால் அவளுக்கு வாழ்வு கொடுக்க முடியவில்லை. நாளுக்குநாள் அந்நோயின் தாக்கம் அவளை வெகுவாய்ப் பாதிக்கத் தொடங்கியது. அப்போது ஏதேச்சையாக நமது ஊழியத்தைப் பற்றிக்கேள்விப்பட்ட அச்சிறுமியின் குடும்பத்தார் நமது சுதேச ஊழியரை அணுகி, அவளுக்காக ஜெபிக்கும்படி வேண்டினர். கண்ணீருடன் நமது சுதேச ஊழியரும் இயேசுவின் நாமத்தில் அச்சிறுமிக்குப் புதுவாழ்வு கிடைக்க ஜெபித்தார். ‘நீங்கள் என் நாமத்தினாலே எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்’ என வாக்குரைத்திருக்கும் நமது உண்மையின் தேவன், அவர்தம் வாக்கை நிறைவேற்றினார். சுதேச ஊழியர் ஜெபித்ததுபோலவே, தேவன் அச்சிறுமிக்கு முழுசுகத்துடன் புதுவாழ்வு தந்தார். இந்த அற்புதத்தை நேரில் கண்ட அச்சிறுமியின் குடும்பத்தாரும், மேலும் அநேகரும் இயேசுவின்மீது நம்பிக்கை கொண்டு, அவரைத் தங்களது சொந்த இரட்சகராக விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். இயேசுவுக்கே மகிமை!*

## 26
## பிப்ரவரி
சனி

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திரு. சுரேஷ் ஜோசப்

### கஜேந்திரகடா:
**மஞ்ஜ்யா நாயக் & ரத்னா**

**துதிக்க:** புதிதாக 4 கிராமங்களில் சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. பக்கத்துவீட்டுக்காரருக்கு கடனாகக் கொடுத்த தனது பணத்தை ஜெபத்தின் மூலம் மீண்டும் பெற்றுக்கொள்ள தேவன் நமது விசுவாசி எல்லம்மாவிற்கு தயவு காண்பித்துள்ளார். ருத்ரப்பாவை நெஞ்சு வலியிலிருந்தும், பரம்மாவை மூச்சுத்திணறல் பிரச்சனையிலிருந்தும் தேவன் சுகம் தந்து காப்பாற்றியுள்ளார். குடிப்பழக்கத்திலிருந்து ஹன்மேஷ் விடுதலை பெற்றுள்ளார். பக்கிரம்மா வின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவி வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** சுவிசேஷத்தை எதிர்ப்போர் இயேசுவின் அன்பைக் கண்டுணர; சில மாதங்களாகத் தொலைந்துபோயிருக்கும் 16 வயது ரவி என்ற சிறுவன் சுகபத்திரமாக வீடு வந்து சேர; அதிக இரத்த அழுத்தக் கோளாறிலிருந்து தேவன் ஹொண்ணம் மாவைச் சுகமாக்க ஜெபிப்போம்.

# ஆந்திரப் பிரதேசம்

### கலக்கடா:
**வேடியப்பன் & லக்ஷ்மி**

**துதிக்க:** குமாரபள்ளி கிராமத்தில் நடை பெறும் நமது ஆராதனையில் புதிதாக மோபினாவும், அக்பரும் பங்கேற்கின்றனர். கொத்தபள்ளி கிராம நமது விசுவாசி நாகவேணிக்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. ராமராவ்பள்ளி கிராம வெங்கடாஜலபதி குடிப்பழக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். பின்மாற்ற மடைந்திருந்த எகுவா தொடலவாரிபள்ளி கிராம விசுவாசிகள் மீண்டும் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** தேவனபள்ளி கிராம ஆலய சுற்றுச்சுவர் கட்டுமானப்பணி வெற்றி கரமாக முடிவடைய; பீர்பா தீராத காய்ச்ச லிலிருந்தும், ரதிபோண்டாபள்ளி கிராம வெங்கட லக்ஷ்மி தொண்டை நோய்த் தொற்றிலிருந்தும் சுகமடைய; ஐஸ்வர்யா விற்குச் சுகப்பிரசவத்தை தேவன் கட்டளையிட ஜெபிப்போம்.

### பலமநேர்:
**சத்தியப்பா & ஷியாமளா பாய்**

**துதிக்க:** இப்பணித்தள விசுவாசிகள் தங்களது ஆலயக் கட்டிடங்களைப் புதுப்பித்ததற்கான செலவைத் தாங்களே சந்தித்துள்ளனர். கஜலவாரிபள்ளி ஆலயக் கட்டுமானப்பணி நமது விசுவாசி களின் உதவியைக் கொண்டு நேர்த்தி யாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. கொல மாசனபள்ளி கிராம சுப்ரமணியத்தைக் காசநோயிலிருந்து தேவன் சுகப்படுத்தி யுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** கொலமாசனபள்ளி பணித் தளத்தில் ஊழியப்பயிற்சி மையமொன்று அமைக்கப்பட; ராவநாயன், காரிபள்ளி, மிட்டாபள்ளி, தேவலபள்ளி, அப்பனபள்ளி மற்றும் தல்லாபள்ளி கிராம ஆலயங் களில் ஆலய சுற்றுச்சுவர்கள் கட்டப்பட; வெளிப்புற சந்திப்பு ஊழியப்பணிகளை நிறைவேற்ற சுவிசேஷ ரத குழுவினருக்கு நல்லதொரு நான்கு சக்கர வாகனம் கிடைக்க ஜெபிப்போம்.

**27**
**பிப்ரவரி**
ஞாயிறு

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
திருமதி. நியாங் கன் மன் உம் பியாக் லால்
திருமதி. அனிதா ஷிஷுபால்

## தாமலச்செருவு:
### பிரசாந்த் மீசலா & ரூபா குமாரி

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் மந்தைக்குள் விசுவாசத்துடன் வந்துள்ளனர். சபைச் செயல்பாடுகளிலும், வெளிப்புற சந்திப்பு ஊழியங்களிலும் நமது விசுவாசிகள் தீவிரமாகப் பங்கேற்று வருகின்றதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நடக்கப்போகும் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் ஆசீர்வாதத்திற்காக; காதுப் பிரச்சனையிலிருந்து தீக்ஷித்தையும், கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்து தேவிகாவையும் தேவன் சுகம் தந்து விடுவிக்க ஜெபிப்போம்.

## மதனபள்ளி:
### வெங்கடேசன் & சசிகலா

**துதிக்க:** புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டுள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் எவ்விதப் பிரச்சனையுமின்றி ஆசீர்வதித்து வருகின்றார். மரணப்படுக்கையிலிருந்து தேவன் கோபியைச் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது புதிய விசுவாசிகளான ஜோதி, பாரதி, நாராயணம்மா, அனு ஆகியோர் தங்களது விசுவாசத்தைக் கிறிஸ்துவில் அறிக்கையிட அவர்களுக்குத் தடையாக வரும் சவால்களை அவர்கள் மேற்கொள்ள; தெந்துலூரு கிராமத்தில் ஓர் ஆலயம் கட்டப்பட; அவலபள்ளி பகுதியைச் சார்ந்த 12 கிராமங்களில் இனிவரும் நாட்களில் நடக்கவிருக்கும் வெளிப்புற சந்திப்பு ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்துத் தர ஜெபிப்போம்.

## புலிவேந்துலா:
### விஜய் குமார் & சுஷீலா

**துதிக்க:** புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவை விசுவாசிக்கத் தொடங்கியுள்ளனர். நமது சபை மூப்பரின் மகளான நகோமிக்கு தான் இழந்த வேலையை தேவன் மீண்டும் கொடுத்துள்ளார். டெங்கு காய்ச்சலிலிருந்து திவ்யா மற்றும் கங்காதேவியையும், நரம்பு பிரச்சனையிலிருந்து ராம கிருஷ்ணாவையும் தேவன் சுகப்படுத்தியுள்ளதற்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசியான ரேணுகாவின் கடன் பிரச்சனை தீர; சிறுநீர் குழாய் நோய்த்தொற்றிலிருந்து காவியா ஸ்ரீ, சதாசிவப்பாவையும் மற்றும் பக்கவாதத்திலிருந்து மத்தியாவையும் தேவன் குணப்படுத்த ஜெபிப்போம்.

## உடும்புப்பிடி!

*ஹிமாச்சலப் பிரதேசம், ராம்பூர் பணித்தளத்தில் புத்தமதப் பின்னணியத்திலிருந்து முகநூல் வீடியோ செய்தி மூலம் சுவிசேஷத்தைக் கேட்டறிந்த தோல்மா என்பவர் இயேசுகிறிஸ்துவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, கடந்த இரண்டு மாதங்களாக நமது ஆராதனையில் வந்து பங்கேற்கின்றார். இவர் ஒரு சிறிய சீன துரித உணவு உணவகமொன்றை ராம்பூர் பஜாரில் வைத்து நடத்தி வருகின்றார். இவர் தனது உணவகத்தில் கிறிஸ்தவ நம்பிக்கைக்குப் புறம்பாய்க் காணப்பட்ட அனைத்துப் புகைப்படங்களையும் அகற்றினார். இதனால் இவரது பிள்ளைகள் மிகவும் மனம் நொந்ததோடு, இவர் இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம் இவரைத் தங்களை விட்டு விலக்கி வைத்தனர். இவரது உணவக வியாபாரத்திலும் இவருக்கு எவ்விதத்திலும் கரம்கொடுக்க மாட்டோமென புறக்கணித்து விட்டனர். ஆனால், இவர் தனது குடும்ப மக்களின் எதிர்ப்புகளின் மத்தியிலும், உதவியற்ற சூழ்நிலைகளின் மத்தியிலும், தான் கிறிஸ்துவைப் பற்றிக்கொண்ட தனது விசுவாசத்தில் "கர்த்தரே எனது உதவியாளர்; அவரே எனது அடைக்கலம்!" என உடும்புப்பிடியாக இருந்து, தனது கிறிஸ்தவ விசுவாசத்திலும் வியாபாரத்திலும் மேலும் முன்னேறி வருகின்றார். கர்த்தருக்கே புகழ்!*

**28**
**பிப்ரவரி**
**திங்கள்**

**பிறந்தநாள் வாழ்த்துக்கள்**

திரு. வினு P.
திரு. சாமுவேல் J.
செல்வி. ஜரின் லெட்தென்மாங் ஹவ்கிப்

## தமிழ்நாடு

### திருவள்ளூர்:

**பால் ஆனந்தன் & சாரா ஜோதி**

**துதிக்க:** கோவர்தனின் குடும்பத் திருமண நிகழ்ச்சியை தேவன் சிறப்பாக நடத்தித் தந்துள்ளார். ஜெபத்தின் மூலம் நமது விசுவாசி அனிதாவிற்குக் குழந்தை பாக்கியம் கிடைத்துள்ளது. முத்துக்கொண்டபுரம், வேணுகோபாலபுரம், கிருஷ்ணாபுரம், ராமாபுரம், காக்கா கண்டிகை ஆகிய கிராமங்களில் செய்த ஊழியப் பின்தொடர்பணிகளின் மூலம் நமது விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்விலும், சமுதாய வாழ்விலும் மறுமலர்ச்சியடைய தேவன் பாராட்டிய நன்மைக்காகத் துதிப்போம்.

**ஜெபிக்க:** நமது விசுவாசி கவிதாவிற்குச் சுகப்பிரசவம் நேரிட; தீய ஆவியின் பிடியிலிருந்து சுமலதா & கோபிக்கும், குடிப்பழக்கத்திலிருந்து செல்வி & குமாருக்கும் விடுதலை கிடைக்க; நமது விசுவாசிகளான உஷா, ராஜேஸ்வரி, முனியம்மாள், கமலா, ரேவதி ஆகியோரின் குடும்பங்களை தேவன் ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

### *சாவே, உன் கூர் எங்கே?*

*மத்தியப் பிரதேசம், கால்வா பணித்தளம். ஜம்தாட் கிராமத்தில் வாழ்ந்து வந்த 28 வயது நிரம்பிய வாலிபர் சஞ்சு, சாவுக்கேதுவான மிகக் கொடிய வியாதியினால் பாதிக்கப்பட்டார். அவ்வியாதியின் உக்கிரத்தினால் அவரால் நடக்க இயலவில்லை. இதே வியாதியினால் கடந்த 2020-ம் வருடம் அவரது அன்புச் சகோதரன் மரித்தே போனார். எனவே, அவர் இனம்புரியாத இவ்வியாதிக்குரிய காரணத்தைக் கண்டறிய எவ்வளவோ முயன்றும், தோற்றுப்போனார். கடைசியில் தங்கள் குடும்பத்தாருக்கு விரோத மாகச் செய்யப்பட்டிருக்கும் தனது பெரியப்பா வின் பில்லிசூனிய மாந்திரீகச் செயலினால் உண்டான விளைவே, இவ்வியாதி என்பதைக் கண்டறிந்தார். பாரம்பரிய குடும்ப நிலத்தை அபகரிக்கும்படி அவருடைய குடும்ப நபர்களைக் கொல்ல நினைத்திருக்கும் தனது பெரியப்பாவின் இச்சூழ்ச்சியை மேற்கொள்ள, அவர் தனக்குத் தகுந்த பண வசதியோ அல்லது அதற்கு நிகரான மாந்திரீக ஏற்பாடோ செய்ய இயலாத நிலையில் இவ்வியாதியின் கொடூரத்தை அமைதியாகப் பொறுமையுடன் சகித்து வந்தார். வியாதியினிமித்தம் நிலத்தைப் பராமரிக்கவும் அவ்வியாதிக்காக அலைந்த அலைச்சலின் செலவைச் சமாளிக்கவும் இயலாமல், தங்களது பயிர் நிலத்தை அடகு வைத்தார். சில நாட்களுக்குப்பின், அவரது கிராமத்தைச் சார்ந்த நமது பெண் விசுவாசி முன்னிபாய் அவரைச் சந்தித்து, அவருக்குச் சுவிசேஷம் கூறினார். பின்பு முன்னிபாய் தனது சாட்சியையும் பகர்ந்து கொண்டு, அவரைச் சபைக்கு வர அழைத்தார். சஞ்சுவும் அவரது குடும்பத்தாரும் முன்னிபாய் கூறிய சுவிசேஷ வார்த்தையை நம்பினர். சஞ்சு அவ்வாறு ஞாயிறன்று கால்வா சபைக்குச் சென்றார். அதன்பின் இருமாதங்கள் கழித்து, கர்த்தர் அவரை முழுமையாக அவ்வியாதியி னின்று சுகமாக்கினார். அவர் தற்போது மிகுந்த சுகத்துடன் இருப்பதினால், தங்களது குடும்ப விவசாய நிலங்களை மீண்டும் மீட்டெடுத்து, இரவும் பகலுமாக அதைப் பராமரித்து வருகிறார். அதோடு, அவர் தனது அற்புதச் சாட்சியுடன் இயேசுவின் சுவிசேஷத்தையும் பிறருக்குத் தவறாமல் பகர்ந்து வருகிறார். அல்லேலூயா!*

## மிஷனெரி ஆல்பம் 372

நாகலாந்து, பூரா நாம்சங் என்ற கிராமத்தில் வாழும் கிறிஸ்தவ தம்பதியரான திருமதி & திரு. பாங்ஷிங் ஃபோமிற்குப் பிறந்த 4 மூத்த மகன்கள் மற்றும் ஒரு மூத்த மகளிற்கு அடுத்தபடியாக கடைசி மகனாக சகோ. மொங்வய் ஃபோம் 12.06.1980-ல் பிறந்தார். இவரது தாயார் சகோ. மொங்வய்யை ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர்த்தார். திருச்சபைச்செயல்பாடுகளில் ஈடுபட வைத்தார். இவர் 9-ம் வகுப்புப் படித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு சமயம் இவரை ஒரு விஷப்பாம்பு தீண்டிவிட்டது. அனைத்து மருத்துவ உதவி மற்றும் மந்திரங்களை முயன்று பார்த்தும் பயனொன்றுமில்லை. இவரது சரீரம் முழுவதும் தடித்து ஊதி, எவ்விதத் திட அல்லது திரவ உணவோ உட்கொள்ள முடியாமல் மரண விளிம்பிற்குப் போய்விட்டார். இவரது தாயார் ஒரு தேவமனிதரின் மூலம் தனது மகனிடம், 'வாழ்வைக் கர்த்தரிடம் அர்ப்பணிக்கு மாறும், தொடர்ந்து கர்த்தரிடம் மாத்திரமே ஜெபித்துக் கொண்டேயிருக்குமாறும்' கூறினார். அதன்படியே இவர் ஜெபம் செய்துக்கொண்டே தனது வாழ்வை இயேசுகிறிஸ்துவிடம் அர்ப்பணித்தபோது, அற்புதமாக இவருக்கு முழுசுகம் கிடைத்தது. இக்காரியம் இவரது வாழ்க்கையில் இவர் இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதற்கும் தன் வாழ்வை அவருக்கென இறுதிவரை வாழ அர்ப்பணிப்பதற்கும் ஒரு திருப்பு முனையாக அமைந்தது.

இவர் மே மாதம் 7-ம் தேதி, 2005-ல் நமது இயக்கத்தில் இணைந்து, பின்பு ஒருவருட மிஷனெரிப்பயிற்சி பெற்று, வடமேற்குப் பகுதியில் ஜீப்குழுவில் சேர்ந்து மிஷனெரியாகப் பணியாற்றினார். 2007-ல் ஹரியானா, ஹிசார் பணித்தளத்திலுள்ள பிராந்திய அலுவலகத்திலும், 2008 முதல் 2011 வரை ரத்தியா பணித்தளத்திலும், 2012 முதல் 2013 வரை கர்ணால் பணித்தளத்திலும், 2014 முதல் 2015 வரை ஜான்சியிலுள்ள NIM-லும் பணிபுரிந்தார்.

சகோதரி. நிஷா, ஹரியானா, யமுனா நகரில் வாழும் கிறிஸ்தவரல்லாத திருமதி & திரு. பிரேம்சந்த் தம்பதியரின் இளைய மகளாக 6 மூத்த மகள்கள் மற்றும் 2 மூத்த மகன்களுக்குப் பிறகு 01.12.1982-ல் பிறந்தார். 2005-ம் ஆண்டில் இவருடைய ஒரு சகோதரி இயேசுவை ஏற்றுக்கொண்டதினிமித்தம், சகோதரி. நிஷா சந்தோஷமற்றவராகக் காணப்பட்டார். ஒருநாள் இவர் ஒரு அசுத்த ஆவியினால் பிடிக்கப்பட்டுக் கடுமையாக அவதியுற்றார். அந்த அவதி நீங்க மந்திரவாதியை நாடிச் சென்றபோது, அவர் ஒரு மாதத்தில் இவர் மரித்து விடுவாரென கூறி விட்டார். ஆனால், கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டிருந்த இவரது சகோதரியோ இவரை ஒரு போதகரிடம் ஜெபத்திற்கென அழைத்துச் சென்றார். அப்போதகர் ஜெபித்துவிட்டு, தீர்க்கதரிசனமாக 'தேவன் இவரைக் குணப்படுத்துவாரெனவும், இவர் தனது எஞ்சிய வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கென சேவை செய்வாரெனவும்' கூறினார். அவதிப்படுத்திக் கொண்டிருந்த அசுத்த ஆவி இவரை விட்டு வெளியேறியதும், அப்போதகர் கூறிய கூற்று உண்மையாயிற்று. 2005-ல் இவர் ஒரு மிஷனெரியாக நமது இயக்கத்தில் வந்து இணைந்தார்.

பின்பு தேவசித்தப்படி ஜூன் 5-ம் தேதி, 2013-ல் சகோ. மொங்வய் ஃபோமும் சகோதரி. நிஷாவும் திருமண ஐக்கியத்தில் இணைக்கப்பட்டனர். பின்னர் உத்தரப் பிரதேச புக்கராயன் பணித் தளத்தில் 2015-லிருந்து 2019-வரையும், தற்போது ரணியா பணித்தளத்திலும் ஊழியம் செய்து வருகின்றனர்.

கர்த்தர் இவர்களுக்கு இரு மகன்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்த மகன் பெயர் ஹர்ஷ் ஹமாய் (D.O.B. 21.06.2014) 2-ம் வகுப்பு டோனாவூர், சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றார். இளைய மகன் பெயர் பெக்கென் ஹனோக் (D.O.B. 30.05.2017) இம்மிஷனெரிக் குடும்பத்தை நமது ஜெபங்களில் நினைவுகூருவோம்.



**திரு. மொங்வய் ஃபோம் & திருமதி. நிஷா மொங்வய் குடும்பம்**

Regd. Newspaper for India No.17759/69



# வருடாந்திர 1000 மணி நேர தொடர் ஜெபம்

## மார்ச் 2 முதல் ஏப்ரல் 13 வரை

**2022–ம் ஆண்டின் தபசு கால நாட்களில் தேவப்பிள்ளைகளாய், தேவ சமூகத்தில் தேசத்தின் சுபீட்சத்திற்காக, கடைசிக்கால திருச்சபை எழுப்புதலுக்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக திறப்பிலே நின்று மன்றாடி ஜெபிக்க உங்களை அன்புடன் வேண்டுகிறோம்.**

### ஜெப முறைமைகள்:

| | | |
|---|---|---|
| **சங்கிலித்தொடர் ஜெபங்கள்** | **-** | **ஜெபக்குழுக்கள், சபைகள் மற்றும் முன்னேற்றப்பணி மாவட்டங்களில்** |
| **12 / 24 / 72 மணி நேர உபவாச ஜெபங்கள்ள்** | **-** | **அனைத்து முன்னேற்றப்பணி பிராந்தியங்களில்** |
| **1 / 3 மணி நேர மன்றாட்டு ஜெப நேரங்கள்** | **-** | **சபைகள், ஜெபக்குழுக்கள், தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இல்லங்களில்** |

**தனி நபர்களாய், குடும்பங்களாய், சபைகளாய், ஜெபக்குழுக்களாய்த் திரளாய் ஜெபங்களில் பங்கெடுப்போம். தேவ மகிமையை தேசத்திலே காண்போம்.**

*ஜெபக்குறிப்புகளுக்கு உங்கள் பகுதி முன்னேற்றப்பணி செயலர்கள் அல்லது ஜெபப்பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.*

**(prayer@fmpb.org / 044-2657 4311)**

ஜெபப் பிரிவு
**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு**

***Published by:*** S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***